சுதேசமித்திரன்





இயற்கையான வாஞ்சையுடன்

அடைய விரும்புதல்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

வுடவார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

அக்டோபர்
வெளியீடு !
நரேந்திரா பிக்சர்ஸ்
ராஜ முக்தி
தியாகராஜ பாகவதர் · சாமா · பானுமதி · ஜானகி
சாமிநாதன் · வெங்கடேசன் · சக்ரபாணி · வீரப்பா
ராஜகாந்தம் · சந்திரா மற்றும் பலர் நடித்தது
ஸ்டுடியோ:
பிரபாத்
டைரக்ஷன்
ராஜா சந்திர சேகர்

தேகப்பயிற்சி செய்வோருக்கு மிக அவசியமான சக்தியை அம்ருதா அளிக்கிறது. இந்த ரத்த சுத்தி திராவகம் இளைஞர்கள், முதியவர்கள், குழந்தைகள் அனைவருக்கும் இன்றியமையாதது. வாய்க்கு மிக இனிப்பானது, குணத்தில் சிறந்தது. அரிய மூலிகைகள், பழச் சத்துக்களைக்கொண்டு உயர்ந்த வைத்திய முறைப்படி தயாரிக்கப்பட்டு வரும் இந்த ஜீவ சக்தி திராவகம் யாவருக்கும் இணையற்ற நண்பன்.

கேஸரி குடீரம் லிமிடெட் மதராஸ்

ஓரிஸ்ஸா, நைஜாம், ஆந்திரா ஜில்லாக்களுக்கும்

தமிழ்நாட்டுக்கும் ஏஜண்டுகள்:—

ஸீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்.

பர்ஹாம்பூர் - செகந்திராபாத் - பெஜவாடா - மதுரை

நீங்கள் வாங்கும் சரக்கின் பெறுமானம் நீங்கள் கொடுக்கும் பணத்தின் மதிப்புக்குக் குறையாமல் இருக்கிறதா?

விலை குறைவாயிருக்கிறதென்று எப்பொழுதும் மட்டம் சரக்குகளை வாங்காதீர்கள். அப்படி வாங்கினுல் நீங்கள் கொடுக்கும் பணத்தின் முழுப்பெறுமானத்தையும் அடைந்தவர்களாகமாட்டீர்கள். அவ்விதமின்றி விலை சிறிது அதிகமானுலும் நல்ல சரக்கையே வாங்குவீர்களானல், நீங்கள் கொடுக்கும் பணத்தின் முழுப்பெறுமானத்தையும் அடைந்தவர்களாவீர்கள்.

இந்த அடிப்படையான உண்மை எல்லா சரக்குகளின் விஷயத்திலும் பொருந்தும்.

டாப்பியோக்கோ மாவு விஷயத்திலும் பொருந்தும். டாப்பியோக்கோ மாவு வாங்கும்பொழுதும் இம்முறையையே கைக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

A. V. S. டாப்பியோக்கோ கிழங்கு மாவுகள் சுத்தமாயும், சுகாதார முறைப்படியும் நீண்டநாள் அனுபவத்தில் தயாரிக்கப்படுபவை. அவைகள் கலப்பில்லாதவையென்பதற்குஅத்தாக்ஷியாகமைக்ருஸ்கோப் மூலம் பரீட்சிக்கப்பெற்று நாணயமான டாப்பியோக்கா மாவு என்று ஸர்ட்டிபிகேட் பெற்றிருக்கிறோம்.

மூட்டையின் தையல் முகப்பில் **A. V. S.** என்ற மார்க்குகள் அடங்கிய ஈய சில் கட்டியிருப்பதுதான் இப்பொழுது மார்க்கட்டில் பிராபல்யமாகிவரும் **A.V.S.**டாப்பியோகா மாவு **'A'** குவாலிட்டி.

டெக்ஸ்டைல் மில்கள், புரொவிஷன் ஸ்டோர்கள், பிஸ்கட் கம்பெனிகள், சிற்றுண்டிசாலைகள் மற்றும் பல தொழிற்சாலைகளுக்கும் நாங்கள் உயர்தரமானதும், சிக்கனமானதுமான **'A'** குவாலிட்டி மாவையே பெரும்பாலும் சப்ளை செய்து வருகிறோம். எங்களிடம் கிடைக்கும் மற்ற சரக்குகள்:—முதல்தரம் ஜவ்வரிசி, மஞ்சள் கடலை எண்ணெய், சுருட்டுப் புகையிலை, பீடிபுகையிலை முதலியன.

உறுதியானதும், 5 அந்தர்வரை எடை செய்யக்கூடியதுமான 'பைபீஸ்ட்' வேயிங் மிஷின் தராசுக்கு நாங்கள் பிரதம ஏஜண்டுகள்: தராசின் கேட்லாக் வேண்டுவோர் எழுதவும்.

விண்ணப்பிக்கவும்:—

A. V. சுப்ரமண்யம்,

A. V. S. டாப்பியோக்கா பிளவர் மில்ஸ் & ஜெனரல் சப்ளையர்கள், புகையிலை ஹோல் சேல் லைசென்ஸ்தாரர்கள், 94, பார்க்ரோடு, ஈரோடு. (S. I. R.) தந்தி: INSAF.

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு: மன்னார்குடி.)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)

B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

உங்கள் எதிர்காலம்

பணமில்லாமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம் பிரயாணம், எதிர்பாராத லாபநஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்டநாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதி அனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்று முதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ 6. வாரப் பலனாக ரூ 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுப்பலனும் எழுதி அனுப்ப ரூ 5. தபால் செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist, MADRAS 5.

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா?

இதோ லக்ஷ்மி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமுர்தம்

40 நாட்களில் குணம்

தலைமை ஆபீஸ்:
வால்டேர், ஆர். எஸ்.

லக்ஷ்மி & கோ.,
2/135, பிராட்வே, மதராஸ்.

முத்து கழுத்து சங்கிலி:



இமிடேஷன் ஜவல்கள் (வைரம்பச்சை, சிகப்பு அல்லது நீலம்) பதித்தஸ்திரீகளுக்கான சிறந்த கழுத்து சங்கிலி. க்ரீம் டிண்டுகளுடன் முத்துக்களும் உண்டு. நிரந்தர கலர், லாக்கெட்டுடன் முழுசைஸ் ரூ. 3-10. இமிடேஷன் ஜுவல் பதித்த தங்க மோதிரம் மேல்கண்ட ஜுவல்களுடன் டஜன் ரூ. 5-8. ஜுவல் இல்லாது பூ வேலைகளுடன் டஜன் ரூ. 4-8. ஒரு டஜன் எந்தவித மோதிரம் வாங்கினாலும் மேற்கண்ட கழுத்து சங்கிலி இனாம். எல்லாவற்றிற்கும் தபால் செலவு இலவசம். கடிதங்களை ஆங்கிலத்தில் எழுத கோருகிறோம்.

போட்டோ படங்கள்:—பிரபல பாரிஸ் அழகிகளின் படங்கள். வயது 16 முதல் 20 வரை, ரகசிய விவரணை கூடாது, டஜன் விலை ரூ, 4/8, எல்லாத்தேச தலைவர்கள் காந்தி, நேதாஜி முதலியவர்களின் படங்கள் டஜன் ரூ, 3/8. தபால் கார்டு சைஸ், தபால்செலவு கிடையாது. 1 அணா ஸ்டாம்பு அனுப்பி, ஆயுள் பூராவும் உபயோகிக்கக்கூடிய காலண்டரை பெறலாம்

HENA AGENCY,
NO. 14, Dr. Jagabandhu Lane, (S.W.)
Bowbazar P. O., CALCUTTA.

ஸ்ரீ சாயிநாதய நம :

அனுபவத்துடனும், ஆராய்ச்சியுடனும் பலன்கள் சொல்லப்படும்.

ஒரு வருஷ பலன்	ரூ. 5.
விவரமான ஒரு கேள்விக்கு பலன் எழுத	„ 1.
விவாக பொருத்தம்பார்க்க	„ 3.
ஆயுள் பலன் எழுத	ரூ. 100.

THE SOUTH INDIAN ASTROLOGICAL BUREAU,
229, Walltax Road, Madras 3.

மறுக்க முடியாத உண்மை !
நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது
அழகு மிகுந்த ஆடைகளே !!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.
போன் நெ. 3432.

9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

கப ரோக நிவாரணி

இருமல், ஈளை இருமல், வரட்சி, இளைப்பு, சுவாசம் எரைப்பு, மூச்சடைப்பு, புகைச்சல் இருமல், சாதாரண இருமல், மார்ச்சளி, அஸ்தி ஜுரம் கபத்தில் ரத்தம் வருதல், தொண்டை ரணம், ஈரல் ரணம், குலை ரணம் இவைகள் போன்ற இன்னும் எந்தவிதமான தீராத கபரோக வியாதியையும் தீர்த்து கபக் கிருமிகளைக் கொன்று கபத்தை தண்ணீராய் கரைத்து இருமலை அறவே ஒழித்து நல்ல நித்திரையைக் கொடுக்கும் — இது ஓர் நிகரற்ற சஞ்சீவி. இதற்கு பத்தியம் கிடையாது—குழந்தைகளும் உபயோகப்படுத்தலாம். 1 அவுன்ஸ் புட்டி ரூ. 2. பாக்கிங் வி. பி. செலவு தனி. முன்பணமாக 50% அனுப்பவேண்டும்.

தயாரிப்பவர்கள் :
சதர்ன் இந்தியா மெடிகல் ஹவுஸ்,
மைலாப்பூர், : : மதராஸ்.

Sole Selling Agents:
என்ஸீ ஏஜன்ஸீஸ்,
2/36, Luz Church Road, MYLAPORE, MADRAS.
Consult: **Dr. V. ராஜரத்னம்,**
For Nervous Debility. Diabetes, T. B., etc., at the above address.

மெஸ்மெரிஸம்

ஆங்கிலத்தில் ஹிப்னட்டிஸம், மெஸ்மெரிஸம் என்று கூறப்படும் வசிய சக்திகளைப்பெற உங்களுக்கு விருப்பமுண்டானால். இவ்வுலக வாழ்க்கையில் வியாபாரத்தில், இல்வாழ்க்கையில் வெற்றியும், சந்தோஷமும் லாபமும்பெற இச்சையுண்டானால் இன்றே,
‘ஜீவவசிய பரம ரஹஸ்யம்’ என்னும் அரிய பெரிய தமிழ் நூலைப்படித்து அதன்படி நடந்து வெற்றியையும், லாபத்தையும் பெற்று மகிழ்வீர்களாக. தமிழில் இந்தச் சாஸ்திர சம்மந்தமான நூல்கள் மிகவும் அபூர்வமாகத்தான் வெளியாகின்றன. இந்தச் சாஸ்திரத்தை நன்கு பயின்று பிறகு அப்யசித்து வெற்றிபெற்ற ஒரு மகானால் இது வரையப்பட்ட அனுபவ நூலாகும். இன்றே வாங்கிப்படித்து பயன்பெறுங்கள்.

விலை ரூ. 4—8—0.
வி. பி. செலவு அணா 9.

ஷாஜஹான் புக் டெப்போ,
30, சாந்தோம், சென்னை 4.

வாரியர்
பிருங்காமலகாதி
தைலம்

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினலோ வேலையினலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.
(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்
கே. எஸ். வாரியரின்
அஷ்டாங்க ஆயுர்வேதசாலா
தெப்பக்குளம், திருச்சி.
(ஸ்தாபிதம் : 1936.)

புண்ணுகி வலிக்கும் காலா?



உலக புகழ் பெற்ற இந்த ஜாம்பெக் உபயோகியுங்கள்

இவ்வற்புதமூலிகை மருந்தாகிய ஜாம்பெக், களைப்பு, வலி; புண், வீக்கம் இவற்றிற்கு நிவாரணமளித்து புண்ணுகிய காலை குணமாக்கி உமது கால் ஆரோக்கியமாக விருக்கச் செய்யும். கெட்டி சருமத்தையும் ஆணிகளையும் ஜாம்பெக் மிருதுவாக்கி சுலபமாக அகற்றப்பட உதவும். மிருகக் கொழுப்பு இல்லாததற்கு உத்தரவாதம்.

சரும நோய்கள், காயங்கள், பூச்சி கடிகள், புண்ணுகி வலிக்கும் காயங்கள் தசை வலி, தேக குளிர்ச்சி இவற்றிற்கு சிறந்தது.

Zam-Buk

சமனமூட்டி, குணமாக்கும் கிருமிநாச மருந்து.

ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பி. டி. மதராஸ்.

Lovely long hair

ASOKA AMLA

HAIR OIL

100% மருந்து பூர்வமானது; வாசனையுள்ளது, மூலிகைச் சத்துக்கள் நிறைந்த கேச மருந்து. மூளைக்குக் குளிர்ச்சியளித்து கேசம் வளர உதவும்

VIJAYA CHEMICAL & TOILET WORKS
21 & 22 Suriyanarayana Chetty St.
Royapuram, Madras.

பிரசித்தி பெற்ற

"காஸினே"

முகப்பவுடர்

உங்கள் முகத்தை பொலிவுடன் பிரகாசிக்கச்செய்கிறது.

வாங்கும்பொழுது காஸினே மார்க்கைப்பார்த்து வாங்குங்கள்.

CHANDRA TRADING CO.,
93, ACHARAPPAN ST., G.T. MADRAS.

A. B. C. Talks	1	4	0
ராமானுஜதர்சனம்	1	0	0
தீனதயாளு	0	12	0
பாலகங்காதர திலக்	0	8	0
ஸ்வராஜ்யம்	0	8	0
சங்கராச்சாரியார்	0	5	0
ஸ்ரீராம ஜனனம்	0	4	0

தபால் செலவு பிரத்தியேகம்.

" சுதேசமித்திரன் " புத்தகசாலை
மவுண்ட்ரோட், மதராஸ்.

விநோத கதா மஞ்சரி விலை ரூ. 1—0—0
(தபால் செலவு பிரத்யேகம்)
மானேஜர்: " சுதேசமித்திரன் " புத்தகசாலை,
விக்டரி ஹவுஸ் மவுண்ட்ரோட், சென்னை.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.
285, Jumma Musjid, P.O. Box 2085, Bombay 2.

ஆரூடம்!

உங்கள் எதிர்கால பலன்!!

★

தொழில், குடும்பம், காதல், பிரயாணம், வியாதி, வியாஜ்யம், வியாபாரம் முதலிய எல்லா விஷயங்கள் சம்பந்தமாக குறிப்பாக பதில் அனுப்பப்படும். ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

10 கேள்விகள்

அல்லது

ஒரு வருஷ பலன் ரூ. 5.

முன் பணம் அல்லது போஸ்டல் ஆர்டர் அனுப்பவும்.

வெளிநாடு 8 ஷில்லிங்.

மீனாக்ஷி ஜோதிடாலயம்,
P. B. நெ. 9/93, பம்பாய்.

Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னாடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S.I.R.*

அருட்பெரும் ஜோதி.

ரத்த சுத்தி டானிக்

கவலை வேண்டாம்!
15 நாட்களிலேயே குணம்!!

க்ஷயம், காசம், மூலம் முதலிய அடியில்கண்ட அறுவித நோய்கள் இரண்டுவார மருந்திலேயே குணம் தெரியும். ஆயுர்வேத முறையில் அனுபவமுள்ள டாக்டரால் தயார் செய்யப்பட்டது. பத்தியமில்லை. தேகம் உஷ்ணமடையாது. ஆண், பெண், பாலர் யாவரும் உபயோகிக்கலாம். 40 நாட்களுக்கு போதிய மருந்து. சாப்பிடும் முறையுடன் அனுப்பப்படும்.

1, ரத்த விருத்தி ரூ. 5.
(Retentive & Blood Purifier)
2. க்ஷயம் (12 விதங்களுக்கும்) Consumption ரூ. 6.
3. காசம் ,, (Asthma) ரூ. 7.
4. மூலம் (21 ,, (Piles) ரூ. 5.
5. வெள்ளை (ஷை) ரூ. C.
6. காமாலை (13 ,,)(Jaundice) ரூ. 5.

வியாபாரிகளுக்கு கமிஷன் உண்டு.

டாக்டர். G. P. பிள்ளை,
தாது எலிக்ஸர் ஒர்க்ஸ்,
விருத்தாசலம். P. O. (S.I.)

வாழிய செந்தமிழ்!

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

வாழ்க நற்றமிழர்!

Vol. XIX] ஸர்வதாரி௵ புரட்டாசி௴ 11௳ ★ 1948-௵ செப்டம்பர்௴ 26௳ No. 35

சரணாகதி

ஹைதராபாத் சமஸ்தானத்தில் நடந்து வந்த அட்டூழியங்களுக்கும், வெறிச் செயல்களுக்கும் இந்தியப்படையினர் முற்றுப்புள்ளி வைத்துவிட்டனர். ரஸாக்கர்களின் பேயாட்டம் சமாப்தி அடைந்துவிட்டது. இந்திய யூனியனின் படை சிகந்தராபாத்தை நோக்கி முன்னேறத் துவங்கிய 5-வது தினத்திலேயே நிஜாம் சரணாகதி அடைந்துவிட்டார். லெயிக் ஆலி—காஸிம் ரஸ்வியின் வெறிக் கும்பல் குடை சாய்ந்துவிட்டது. மேஜர் ஜெனரல் ஜே. என். சௌத்ரி சமஸ்தானத்தின் ராணுவ கவர்னராகவிருந்து அமைதி, ஒழுங்கு இவற்றை நிலை நாட்டப் பொறுப்பேற்றுக்கொண்டுவிட்டார்.

இந்திய யூனியன் சர்க்கார் இறுதியாக இத்தகைய நடவடிக்கை எடுக்கும் கடைசித் தருணம் வரையில் நிஜாமும், லெயிக் மந்திரி சபையும் பேசி வந்த தோரணை வெளியிட்டுவந்த வெருட்டல் இவற்றை நினைத்துப் பார்ப்பவர்களுக்கு பின்னர் நிகழ்ந்த சரணாகதி அத்தியாயம் திகைப்பைத்தான் உண்டாக்கும். அவர்களில் யாரும் இவ்வளவு சடுதியில் இந்தக் கும்பல் சரிந்து விடுமென்று எண்ணியிருக்க மாட்டார்கள்.

ஹைதராபாத் நிஜாம்

தளபதி ராஜேந்திர ஸிங்ஜியின் தலைமையில் ஹைதராபாத்தில் புகுந்து வெற்றி கண்ட நம்படையினரை வாழ்த்திப் புகழாதவரில்லை. தளபதி ராஜேந்திர ஸிங்ஜி, மிலிடரி கவர்னராக இப்பால் நியமனம்பெற்றுள்ள சௌத்ரி, விமானப் படை தளபதி மூகர்ஜி ஆகிய ஒவ்வொருவரும் இந்தியப்படையினரின் திறன் பன்மடங்கு உயர்ந்ததென்பதை நிரூபித்துக் காட்டியிருக்கின்றனர்.

இந்தியாவின் ஒற்றுமையை வகுப்பு வெறியின் விஷத்தாலோ, இதரமட்ட ரகமான எண்ணங்களினாலோ குலைத்துவிட முடியாதென்பதை இப்போது ஹைதராபாத்தில் நடந்த சம்பவம் தெளிவுபடுத்தியிருக்கிறது. முக்கியமாக இது இந்நாட்டின் எதிரிகளுக்கு ஒரு சிறந்த படிப்பினை. சரணாகதி அடைந்த நிஜாம் இந்தியப் படையினர் பிரவேசத்துக்கு வரவேற்பளித்தார். ரஸாக்கர் காலிக் கோஷ்டியைக் கலைத்துவிட்டதாகப் பிரகடனப்படுத்தினார். சமஸ்தானக் காங்கிரஸ்காரர்கள் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை கைவிட்டுவிட்டதாக தெரிவித்தார். இந்திய ஏஜண்டு ஜெனரல் ஸ்ரீமான் கே. எம். முன்ஷி யூனியன் சர்க்கார் சார்பாக சரணாகதிப் படலத்தில் சங்கடங்களுக்கு இடமில்லாதபடி கவனித்துக்கொண்டார்.

சரணாகதி அத்தியாயம் தீர்ந்த பின்னர் பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு சென்றவாரம் ரேடியோவில் பேசினார். அவரது பிரசங்கத்தின் போக்கு ராஜரீக தர்மத்தைப் பூர்ணமாகத் தழுவியதாயிருந்தது. இனிச்

செய்யவேண்டியது என்னவென்பதிலேயே கவனம் செலுத்தவேண்டுமென்பதற்கு அவரது பேச்சு ஓர் எடுத்துக்காட்டு. ஹைதராபாத்தில் அமைதியும், ஒழுங்கும் நிலவச் செய்ய வேண்டிய தவிர்க்கமுடியாதபொறுப்பு இந்திய சர்க்காருடையது. அப்பொறுப்பு இனிது நிறைவேறும் வகையில் இந்தியப் படையினர் வெற்றிபெற்றுவிட்டார்கள்.

ஹைதராபாத்தின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டுள்ள ராணுவ கவர்னர் சௌத்ரி

பூரணமாக அமைதி, ஒழுங்கு இவை நிலவ வேண்டுமானால் இன்னும் கொஞ்ச காலத்துக்கு ஹைதராபாத் நிர்வாகம் ராணுவத்திடம் இருந்தாக வேண்டும். ரஸாக்கார் கும்பலின் தலைவர் ரஸ்வி கைதாகி இந்திய சர்க்கார் பாதுகாப்பில் ஒப்படைக்கப் பட்டுவிட்டார். தொல்லை விளைத்து வந்த லெயிக் அலி கோஷ்டியும் மடக்கிப் போடப் பட்டுவிட்டது. சிலர் தலைமறைவாகியிருக்கின்றனர். அவர்களை வெளிக்கிளப்பி பிடித்தடைக்க வேண்டும். இவர்களையெல்லாம் ஒன்று திரட்டி விசாரணைக்குக் கொணர்ந்து இனிமேல் வகுப்பு வெறியாட்டம் தலையே கிளப்ப முடியாது என்ற முறையில் தண்டிக்கவும் வேண்டும்.

இதற்கடுத்தபடியாக புனர்ஜென்மமெடுத்திருக்கும் ஹைதராபாத்தின் எதிர்கால ஆட்சி அமைப்பு. இதுபற்றி இந்திய சர்க்கார் ஆலோசித்து வருகின்றனர். தற்கால அவசர நிலைக்காக ஏற்பட்டிருக்கும் நிர்வாகத்துக்குப் பின்னர் சகல தரப்பிலிருந்தும் பிரதிநிதிகள்கொண்ட ஜன அபிமானம் பெற்ற சர்க்கார் அங்கு ஏற்படவேண்டும்.

சமஸ்தான அரசியல், நிர்ணயம் இந்திய யூனியனுடன் சேர்வது இவையெல்லாம் பொதுஜனங்களின் அபிப்ராயத்துக்கிணங்கி நடக்கவேண்டிய காரியங்கள். பண்டித நேரு குறிப்பிட்டதுபோல் ஹைதராபாதின் எதிர்காலம் இந்தியாவுடன் சேர்ந்து வாழ்வதைப் பொறுத்தே இருக்கிறது. அச்சமஸ்தான மக்கள் இதை உணர்வரென்றே நம்புகிறோம்.

ஹைதராபாத் படல முடிவு



ஹைதராபாத்தில் நிஜாம் சரணாகதியையடுத்துப் பிரவேசித்த இந்தியப் படையினருக்கு மக்கள் குதூகலமாக வரவேற்பளித்த காட்சி. கையில் மூவர்ணக் கொடியோடு நிற்கும் ஜனங்களின் கோஷ்டி.

ஹைதராபாதில் வெற்றிக்கு அடிகோலிய அதிகாரிகள்

★

பெஜவாடா முனையில் இந்தியத் துருப்புகளுக்குத் தலைமைவகித்த பிரிகேடியர் மாதவஸிங்ஜீயும் இடதுபுறமிருப்பவர் அவருடைய உதவியாளரான மேஜர் ஸிந்துவும்.

ரஸாக்கர் கும்பலின் தலைவர் ஸையது காஸிம் கைது செய்யப்பட்டு காவலில் இருக்கிறார்.

நிஜாமுடன் பேசி சரணாகதி ஒப்பந்தத்தை தீர்த்துவைத்த இந்திய சர்க்கார் ஏஜெண்டு ஜெனரல் முன்ஷி.

நிஜாமின் புதல்வர் பேரார் இளவரசர்



சமீபத்தில் பம்பாய் துறைமுகத்தில் ''டில்லி'' என்ற கப்பல் தளத்தில் நடந்த கடல் படையினர் அணிவகுப்பைப் பிரதம மந்திரி நேருவும், ஸர்தார் பலதேவஸிங்கும் பார்வையிட்டபோது எடுத்தபடம்.

காதலும் கடமையும்

ப. ராதாகிருஷ்ணன்

கோடை விடுமுறைக்காகச் சில நண்பர்களுடன் உதக மண்டலம் போயிருந்தேன். அங்கு நாங்கள் தங்கியிருந்த பங்களாவிலேயே வேறொரு பாகத்தில் ஐரோப்பிய கனவான்கள் சிலரும் தங்கி வந்தனர். யாதொரு வேற்றுணர்ச்சியுமின்றிக் கலந்து பழகிய எங்கள் பொழுது, கூத்திலும், கொம்மாளத்திலும உல்லாசமாகவே கழிந்துவந்தது. நாங்கள் போஜனம் செய்ததுகூட ஒரே அறையில் தான். அந்தப் பங்களாவின் சமையற்காரன் ராம்சந்தரின் மேற்பார்வையிலேயே புடலங்காய்ப் பச்சடி முதல் கட்லெட் வரை சகலமான இந்திய ஐரோப்பிய உணவு பதார்த்தங்களும் நளபாகமாகக் தயாரிக்கப்பட்டுப் படைக்கப்பட்டனவாகையால், போஜனசாலையில் வழக்கமாகக் காணப்படும் அதிருப்தியும் பூசல்களும் லவலேசமும் இல்லாமல் சந்தோஷமும் விளையாட்டும் குடிகொண்டிருந்தன. ராம்சந்தருக்குப் பாவம், ஒரு கால் இல்லை. அதற்குப் பதிலாக மரத்தினாலான கால் ஒன்றை வைத்துக் கொண்டு அசாத்தியமான சுறுசுறுப்புடன் அங்குமிங்கும் ஓடி அலுவல்களைக் கவனித்து வந்தான். அவன் மேல் நாடுகளிலெல்லாம் சுற்றிப் பிரயாணம் செய்து வந்தவன் என்பதும், அப்பிரயாணங்களிலொன்றிலிருந்து திரும்பியபோது தான் அவன் தன் கால்களிலொன்றை இழந்து வந்தானென்பதும் பங்களாவின் சொந்தக்காரர் மூலம் நாங்கள் அறிய வந்தோம். யாரோ ஒரு ஐரோப்பிய உத்தியோகஸ்தரிடம் சமையற்காரனாகப் பல வருஷங்கள் சேவகம் செய்து வந்தவனும். அப்போதைய அனுபவத்திலிருந்துதான் ஐரோப்பிய உணவு வகைகளை இவ்வளவு அருமையாகத் தயார் செய்கிறானென்பதும் தெளிவாகியது. அதிகமாக வாய் திறந்து பேசமாட்டான் அவன். பேசப் போதிய ஒழிவும் கிடையாது அவனுக்கு. அவன் உண்டு, அவன் காரியம் உண்டு.

அன்று இரவு சமையல் அற்புதமாகத்தான் இருந்தது. உணவு வகைகளும் அதிகம். நாங்கள் அனைவரும் உல்லாஸமாக வார்த்தையாடியவாறே நன்றாக ருசித்துச் சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். ஒவ்வொரு தேச மக்களைப் பற்றியும் அவரவர்களுக்குப் பொதுவான சில குணவிசேஷங்களைப்பற்றியும் ஆங்கிலத்தில் பேசிக்கொண்டிருந்தோம்.

“மேல் நாடுகளிலேயே, கடமையுணர்ச்சியில் ஆங்கிலேயருக்கு மேற்பட்டவர் கிடையாது” என்றார் ஒரு ஆங்கிலேய நண்பர். நீங்கள் சொல்வது முற்றிலும் சரி, ஐயா!” என்று ஆங்கிலத்தில் கூறியது ஒரு புதுக் குரல். அனைவரும் திடுக்கிட்டு நிமிர்ந்து நோக்கினோம். பேசியது வேறு யாருமில்லை. சமையற்காரன் ராம்சந்தர் தான். இதைச்சொல்லிவிட்டு மீண்டும்

தலை கவிழ்ந்தவாறே தன் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினான் அவன். படித்த இந்தியர்களான நாங்கள் பேசின ஆங்கிலத்தை விட, படிக்காமலேயே ஆங்கிலேயருடன் நெருங்கிப்பழகியிருந்த அந்தச் சமையற்காரன் பேசிய ஆங்கிலம் தெளிவாயும் இயற்கையானதாயும் இருந்தது எங்களுக்கு உள்ளூறச் சற்றுப் பொருமையை ஏற்படுத்தியது. ஆனால் காலியாயிருந்த தட்டுக்கள் சிலவற்றை எடுத்துக்கொண்டு ராம்சந்தர் சமையலறைக்குள் அந்தர்த்யானமாகி விடவே, சற்றுத் தடைப்பட்டிருந்த எங்கள் பேச்சு மீண்டும் தொடர்ந்தது.

"ஆசிய நாடுகள் எல்லாவற்றிலும் ஜப்பானியருக்குத்தான் மிகுந்த தேச விஸ்வாசம் உண்டு. பார்க்கப்போனால் ஒரு சின்னஞ்சிறு தீவுக் கூட்டம்" என்று தொடங்கினார் எங்களில் ஒரு சப்பை மூக்கர்: மறுபடி ராம்சந்தரின் குரல் கதவண்டையிலிருந்து ஒலித்தது. பான வகைகளைச் சுமந்துகொண்டு அறைக்குள் வந்து கொண்டிருந்தான் அவன். "நீங்கள் சொன்னதும் முற்றிலும் வாஸ்தவமானவிஷயம், ஐயா" என்று அதே தெளிவான ஆங்கிலத்தில் கூறினான் அவன். கூறிவிட்டுமேலே நிமிர்ந்துகூடப் பார்க்காமல் தான் கொண்டுவந்த பான வகைகளை மேஜையின்மீது ஒழுங்காய்ப் பரப்பி வைப்பதில் ஈடுபட்டான்.

மெல்லப் பேசுவதற்குத் துணிவை வரவழைத்துக் கொண்டவர்போல் நண்பர் சப்பை மூக்கர் மேலும் தொடர்ந்தார். "அதிலும் ஆண், பெண் ஆகிய எல்லாருமே தம் நாட்டுக்கென எத்தகைய தியாகமும் செய்யப் பின் வாங்க மாட்டார்கள். தம் நாட்டைப் பொறுத்தவரை அவர்களுக்கு இது செய்யத் தகாதது என்ற பேதம் கிடையாது.... மறுபடி ராம்சந்தர் சம்பாஷணையில் பிரவேசித்தான். "ஆமாம்... சமயத்தில் தாயின் அன்பையும் காதலின் கட்டுக்கடங்கா உணர்ச்சிகளையும்கூட மீறிச் சென்றிருக்கிறது ஜப்பானியப் பெண்மணியரின் நாட்டுப் பற்று. நான் சொல்வது வெறும் வார்த்தையல்ல. சுய அனுபவத்திலிருந்துதான் சொல்கிறேன். அதேபோல்தான் ஆங்கிலேயரின் கடமையுணர்ச்சியின் தன்மையும். இந்த இரண்டு பிரம்மாண்டமான சக்திகளுக்கிடையில் சிக்கின ஏழை இந்தியனாகிய நான் என்னுடைய எஜமான விசுவாசத்திற்காக என் கால்களில் ஒன்றைப் பலி கொடுக்கும்படி நேர்ந்தது" என்றான். எல்லோரும் அப்படியே ஸ்தம்பித்துவிட்டோம். மறுகணம் மிஸ்டர் ஹில்ஸ் என்ற ஆங்கில நண்பர் தம் ஆசனத்தினின்றும் எழுந்தார். ராம்சந்தரின் கையிலிருந்த கோப்பைகளை வாங்கி மேஜைமீது வைத்துவிட்டு அவனைத் தோளைப்பற்றி அழைத்து வந்து ஒரு நாற்காலியில் எங்களுடன் சரிசமமாக அமர்த்தினர். ராம்சந்தரை வற்புறுத்தித் தன் சரித்திரத்தைக் கூறச்செய்வதற்கு வெகு நேரமாகவில்லை எங்களுக்கு. பிரமாதமான பூர்வ பீடிகை ஒன்றுமில்லாமல் தன் கதையைத் தொடங்கினான் அவன். அவனது வாக்கின் உண்மை அவன் கண்களினின்றும் ஒளிவிட்டுப் பிரகாசித்தது.

"ருஷ்யாவும், ஜப்பானும் யுத்தத்தில் ஈடுபட்டிருந்தகாலம் அது. என் எஜமானர் பிலிப்ஸ்துரை ஒரு ஆங்கிலேயர் என்றாலும் நீண்டகாலமாக ருஷ்யக் கப்பற் படையில் சேவைசெய்து வந்தார். கடற்போரின் நுணுக்கங்களைத் தலைகீழாக உணர்ந்திருந்த அவருக்கு ருஷ்ய அதிகாரிகள் மிகவும் பொறுப்புவாய்ந்ததும் நம்பிக்கைக்குரியதுமான ஸ்தானம் ஒன்றை அளித்திருந்ததில் வியப்பொன்றுமில்லை. அவர் நம் நாட்டினரல்லவே என்ற சம்சயமே அவர்களுக்குத் தோன்றக்காரணம் எதுவுமிருக்கவில்லை. தாம் அவர்கள் கையிலிருந்து தின்று வந்த உப்புக்காக எதையும் தியாகம் செய்யத் தயாராயிருந்தார் அட்மிரல் பிலிப்ஸ்.

ஆனால் அவரது மனைவி ஒரு ஜப்பானிய ஸ்திரீ. அபாரமான அழகும் கணவரிடத்தில் அன்பும் விஸ்வாசமும் கொண்டவள். படிப்பின் பொருட்டு இங்கிலாந்து வந்திருந்த அவளைத் தற்செயலாய்ச் சந்தித்தாராம் பிலிப்ஸ் துரை. இருவருக்குமிடையில் காதல் ஏற்படவே அவர்கள் தம்பதிகளாயினர். அச்சமயத்தில் ருஷ்யநாட்டினருக்கும் ஜப்பானியருக்குமிடையில் விரோதம் ஏற்பட்டிருக்கவில்லை. ஆனால் மணம் புரிந்த தம்பதிகள் மீண்டும் ருஷ்யாசேர்ந்து சிலவருஷங்கள் ஒத்து வாழ்வதற்குள், இவ்விரு நாடுகளுக்குமிடையில் போர் மூண்டது. அன்றிலிருந்து அவர்களது இன்பவாழ்வின் அமைதி குலைந்தது.

"என் பொருட்டாகவேனும் தாங்கள் தயை செய்து இந்த ருஷ்யர்களது சேவையினின்றும் விலகமாட்டீர்களா? என் நாட்டின் விரோதிகளின் பக்கத்திலிருந்துகொண்டு தாங்கள் என் அருமைத் தேசத்தைச் சின்னா பின்னம் செய்யப் போகிறீர்களா? ....அப்படியானால் முதலில் தங்கள் கையால் என்னை இந்தச் சமுத்திரத்தில் தள்ளிக் கொன்றுவிடுங்கள்" என்று கண்களில் நீர் தளும்ப அடிக்கடி அவள் தன் கணவரிடம் விண்ணப்பித்துக்கொள்வதை நான் கேட்டிருக்கிறேன். அப்போதெல்லாம் அவர்கள் கப்பலின் மேல் தளத்தில் நின்றுகொண்டிருப்பார்கள். அட்மிரல் பிலிப்ஸ் தான் கப்பலின் அதிகாரி கப்பலிலேயே மிக உல்லாசமான அறை ஒன்றில்தான் அவர் தம் மனைவியுடன் வசித்து வந்தார். அவர்களுக்கு வேண்டிய சகலவிதமான உணவு வகைகளையும் தயாரித்து வந்தது நான். என்னைக் கேவலம் சமையற்காரன் என்ற முறையில் நடத்திவரவில்லை அவர்கள். என் மீது அவர்கள் வைத்திருந்த அன்பும், நம்பிக்கையும் என்னைப் புது மனிதனாக்கின என்று இன்றைக்கும் நான் உறுதியாகச் சொல்லுவேன்.

என் எஜமானர்களது ஒற்றுமையான இன்ப வாழ்வில் மெல்லப் பிரவேசித்து நாளுக்கு நாள் அகன்றுகொண்டு வரும் இந்தப் பெரும் பிளவைக் கண்டு நானும் வருந்தினேன். ஆனால் பிலிப்ஸ் துரை இரும்புமனிதரென எனக்கு தெரியும். அவரது இதயத்தில் இரண்டு ஸ்தானங்கள் இருந்தன. முதலது தம் எஜமானர்களுக்கு; மற்றது தம் அருமை மனைவிக்கு.

ஆனால் ஒன்றின் ஸ்தானத்தை மற்றது அபகரிக்க அவர் விடுபவரல்ல. எனவே தம் மனைவியின் வேண்டுகோளுக்கு அவர் செவி சாய்க்கவில்லை.

விரைவில் நிலைமை முற்றியது. ஜப்பானியரைச் சேர்ந்த கடல்களிலேயே சென்று அவர்களுடன் யுத்தம் செய்வதற்கென தயாராகிக்கொண்டிருந்த ருஷ்யக் கப்பற் கூட்டமொன்றில், ஒரு பெரிய பயங்கரமான யுத்தக் கப்பலுக்குத் தலைமை அதிகாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் அட்மிரல் பிலிப்ஸ் துரை. உரிய காலத்தில் கப்பற்படை புறப்பட்டது. அவருடன் இணைபிரியாதவர்களாகிய அவர் ஜப்பானிய மனைவியும், நானும் அதில் சென்றோம். பிலிப்ஸ் துரையிடமிருந்த மதிப்பும் நம்பிக்கையும் ஜப்பானிய ஸ்திரீயாகிய அவர் மனைவியைத் தடுத்துப் பாதுகாப்பில் வைக்கச் சக்தியற்றவராகச் செய்து விட்டது ருஷ்ய அதிகாரிகளை.

நாளுக்கு நாள், மணிக்கு மணி ஜப்பான் தீவுகளை நெருங்கி வந்துகொண்டிருந்தது எங்கள் கப்பற் கூட்டம். கடலில் வீசிக்கொண்டிருந்த பெரும் புயல்களையெல்லாம் பொருட்படுத்தாமல் பாய்ந்து வந்துகொண்டிருந்தன அந்த சக்தி வாய்ந்த நீராவிக் கப்பல்கள். ஆனால் அட்மிரல் பிலிப்ஸ், அவர் மனைவி இவர்கள் உள்ளங்களில் வீசின புயல் அவ்வளவு சாமான்யமானதாக இல்லை. கடைசி வரையிலும் மன்றாடிப் பார்த்தாள் **வின் போ**. (அதுதான் அவள் பெயர்.) ஆனால் சுருட்டுப் புகை மண்டலத்தில் முகத்தை மறைத்துக்கொண்டு ஆழ்ந்த யோசனையில் மூழ்கிக் கிடக்கும் பிலிப்ஸ் துரையோ அசைந்து கூடக் கொடுப்பதில்லை.

'ஜப்பானை நெருங்கி வருகிறோம்' என்று அறிந்த ருஷ்யக் கப்பற்படை வீரர்களுக்கிடையே 'எந்த நிமிஷமும் போருக்குச் சித்தமாயிருத்தல் வேண்டும்' என்ற உணர்ச்சி ஏற்பட்டது. அதுவரை பேச்சும் விளையாட்டுமாய் உற்சாகத்துடன் காணப்பட்ட ஒவ்வொருவர் முகத்திலும் மரணத்தின் சாயை படரவே, கப்பலின் தோற்றமே மாறிவிட்டது போல் இருந்தது. "நம் தேசத்திற்கு உயிருடன் திரும்பிப் போய்ப் பெண்டு பிள்ளைகளைக் காண்போமா?" என்ற திகில் எங்கும் பரவியது.

ஒரு நாள் மாலை. எதிர்ப்புறத்தில் அடிவானத்திற் கருகாமையில் தெரிந்துகொண்டிருந்த புகைத்திரள் ஒன்றைக் கண்ணுற்றோம். ஜப்பானியரது கடற்படைதான் அது என்பது நிச்சயமாயிற்று. கப்பலாட்களிடை ஏற்படத் தொடங்கியிருந்த பரபரப்பை அதிகரிப்பதுபோல் கப்பலின் ஊதல்களும் மணிகளும் இரைச்சலிட்டன. வீரர்கள் எல்லாரும் தங்கள் ஸ்தானங்களில் சென்று அமர்ந்து பீரங்கிகளைத் தயார் செய்து வைத்துக்கொள்ளத் தொடங்கினர். அட்மிரல் பிலிப்ஸ் தம் சிம்ம கர்ஜனையையொத்த குரலில் கப்பலில் அங்குமிங்கும் ஓடி உத்தரவுகள் இட்டுக்கொண்டிருந்தார். இந்த நெருக்கடியிலும் தன் நம்பிக்கையை இழக்கவில்லைபோலும் அந்த ஜப்பானிய ஸ்திரீ!

கப்பலின் மேற்றளத்தில் நின்றுகொண்டிருந்த கணவரை அணுகினாள் அவள். நானும் ஓர்புறம் நின்றிருந்தேன்.

"தங்கள் எதிரிகள் சமீபிக்க இன்னும் எத்தனை நேரம் ஆகும்?" என்று வினவினாள். வாயிலிருந்து சுருட்டுப்புகையை ஊதியவாறே "இன்னும் இரண்டு மணி நேரம் ஆகலாம்—அதாவது நம் கப்பற் படையைக் கண்டதுமே அவர்கள் திரும்பி ஓடாமலிருப்பதானால்', என்று அலட்சியமாகப் பதிலளித்தார் பிலிப்ஸ் துரை. "ஓஹோ! ஜப்பானியர்களே அவ்வளவு கோழைகள் என்று தங்கள் அபிப்பிராயம்போலிருக்கிறது! இருக்கட்டும். ஒரு கால் விரைவிலேயே தாங்கள் அந்த அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ளும்படி நேரிடலாம்" என்று பதிலளித்தாள் வின்போ. அவளை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்துவிட்டுச் சுருட்டை வாயிலிருந்து எடுத்துக் கடலுக்குள் எறிந்தார் பிலிப்ஸ் துரை.

"சரி. வீண் பேச்சினால் லாபம் என்ன? தங்கள் காலில் விழுந்து மன்றாடுகிறேன். இன்னும் அதிக நேரம் ஆகிவிடவில்லை. சற்றுத் தயவு செய்யுங்கள். சற்று நேரத்திற்கெல்லாம் இருட்டிவிடும். உடனே ஒரு சிறு படகை இறக்கினோமானால் தாங்கள், நான், ராம்சந்தர் மூவரும் மெதுவாகப் போய் ஏதாவது ஒரு தீவில் சேர்ந்துவிடலாம். என் நாட்டினர் உங்களுக்குத் தீங்கிழைக்காமல் பார்த்துக்கொள்ள எனக்குத் தெரியும்...ஏன்? நம் ஆழ்ந்த காதலின் பொருட்டாகக்கூட இதைச்செய்யமாட்டீர்களா?"

அட்மிரல் பிலிப்ஸ் துரையின் முகத்தில் கடுமை தோன்றியது. கடலின் அலைகளை உற்று நோக்கியவாறு நின்றிருந்த அவர் திரும்பினார். "பிரியே! நம் காதல் அழிக்கமுடியாததுதான். மரணத்திலும் ஒன்றாக இருப்போமென்ற ஆவலில் தான் உன்னை இங்கும் அழைத்து வந்தேன். ஆனால் அத்தகைய வீர மரணத்தையடைய நீ விரும்பாதுபோனால் பிறகு உன்னிஷ்டம். நான் ருஷ்யாவின் அடிமை. என்னைப் பொறுத்தவரை எஜமானத் துரோகம் செய்வதென்பது இயலாத காரியம். உன் உள்ளத்தில் ஊற்றெடுத்துப் பெருகும் தேசபக்தியின் வேகம் எத்தகையதென்று நான் ஊகித்தறியமுடியும். இருதலைக் கொள்ளியெறும்பு போன்ற உன் நிலைமையைக் கண்டு பரிதவிப்பதைத்தவிர என்னால் இப்போது வேறொன்றும் செய்யமுடியாது" என்றார்.

"ஒரே வார்த்தை...என் அருமைத் துரையே! தங்களது ஆக்ஞையின் கீழ்ச் செலுத்தப்படும் இந்தக் கப்பலிலிருந்து கிளம்பும் முதல் பீரங்கிக் குண்டு என் தேசத்துக்கப்பற்படையைத் தாக்க விரையுமுன் நான் இந்தக் கப்பலினின்றும் அப்பால் சென்றுவிட விரும்புகின்றேன். இனி இங்குத் தங்குதல் என் மனச்சாட்சிக்கு உகந்ததல்ல. ஆனால்... என் ஆசைக் காதலரே! என் முகத்தை ஒரு முறை நோக்கி எனக்குச் செல்ல விடை கொடுங்கள். ஒருகால் இதுவே நமது கடைசிச் சந்திப்பாக இருக்கலாம். மறு பிறவியிலேனும் நம் வாழ்வு இத்தகையதொரு சிக்கலில் அகப்பட்டு உடையாமல், இன்பத்திலும் துன்பத்திலும் ஒன்றாகவே இருக்குமென்ற நம்பிக்கையைக் கொண்டு செல்கின்றேன். விடை தாருங்கள்..." என்று கூறி விம்மி அழத் தொடங்கினாள். பிலிப்ஸ் துரையின் கடுமையும் நெகிழ்ந்தது. அவளை ஆர்வமுடன் அணைத்துத் தேறுதல் செய்தார் அவர். சில நிமிஷங்கள் பறந்தன. மரணத்தின் வாயில் நிற்கும் என் எஜமானரின் கட்டளையை மேற்கொண்டு சிறு படகொன்றைக் கடலில் இறக்கினேன் நான். துயரத்தில் பித்துப் பிடித்தவள் போல உட்கார்ந்தவண்ணம், நிமிஷத்துக்கு நிமிஷம் தொலைவாக விலகிச் செல்லும் அப்பிரமாண்டமான யுத்தக் கப்பலை கண் இமையாது பார்த்திருந்தாள் என் எஜமானி. அவள் துயரத்திற்குத் தேறுதல் சொல்ல இயலாத மூடனாகிய நான் வேகமாகத் துடுப்பை அசைத்தேன். படகு தண்ணீரைக் கிழித்துக்கொண்டு சென்றது. நாங்கள் சற்றுத் தூரம் செல்வதற்குள்ளாகக் கேட்ட பயங்கரமான வெடி குண்டின் சப்தம் போர் தொடங்கி விட்டதென்று காட்டியது. அட்மிரல் பிலிப்ஸின் குரலும் அத்துடன் கலந்து வந்து எங்களிடம் விடைபெற்றுக் கொள்வதுபோல் தோன்றியது.

இரவு முழுவதும் போர் நடந்து கொண்டுதானிருந்தது என்று குண்டு சப்தங்களும் மின்னலைப் போல் கண்ணைப் பறிக்கும் ஒளிகளும் தெரிவித்தன. அதிகாலை நேரத்தில் தான் அவை ஓய்ந்தன. அந்தக் கடல் யுத்தத்தின் போக்கு முடிவாகிவிட்டிருந்தது. கடற்போரில் திறமையிலும், அனுபவத்திலும் சாகஸத்திலும் ருஷ்யர்களைவிடத் தாங்களே மேம்பட்டவர்களென்று ஜப்பானியர் நிரூபித்து விட்டிருந்தனரென்பதைப் பின்பு அறிய வந்தோம்.

காலையில் ஒரு தீவை அணுகிய எங்களைக் கைது செய்து தலைமை அதிகாரிகளிடம் ஒப்புவித்தனர் சில ஜப்பானிய யுத்த வீரர்கள். அவர்கள் கடற்கரைப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள். என் எஜமானி தன் தாய்மொழியான ஜப்பான் பாஷையில் அவர்கள் கேள்விகளுக்குப் பதிலளித்தாள். எனக்கு அப்பாஷை தெரியாமையால் நான் சுற்றும் முற்றும் பார்த்து விழித்துக்கொண்டு நின்றேன். இரவு முழுதும் பசியுடன் பிரயாணம் செய்து வந்திருந்த எங்களுக்கு அந்த ராணுவ முகாமிலேயே உணவளிக்கப்பட்டது. மேற்கொண்டு அதிகாரிகள் எங்களை என்ன செய்யப்போகிறார்கள் என்பது என் எஜமானிக்கே தெரியாது. ஆனால் அவ்வதிகாரிகள் அவளிடம் நயமாகவே நடந்துகொண்டனர். அவர்களெல்லாரும் ஜப்பானியர்தாம். தன் உண்மையான விருத்தாந்தத்தை தளபதி காப்டன் கிடமுராவிடம் ஒளியாமல் கூறியிருந்தாள் என் எஜமானி. அத்துடன் தன் கணவரின் அங்க அடையாளங்களையும் கொடுத்திருந்தாள். யுத்தத்தில் அவர் ஜப்பானியரால் உயிருடன் பிடிக்கப்பட்டால் தான் ஒருமுறையேனும் அவரைச் சந்திக்க அனுமதியளிக்கப்பட வேண்டுமென்பது அவளது கோரிக்கை.

ஒரு ஆபீஸரின் காவலிலிருந்த ராணுவக் கூடாரத்தில் நாங்கள் தங்கி இளைப்பாறினோம். என் எஜமானி உள்ளேயும் நான் காவலுக்கு வெளியேயும் உறங்கினோம். நாங்கள் விழித்துக்கொண்டபோது மாலை நேரம் ஆகியிருந்தது. பாசறையெங்கும் ஒரே சந்தடி. கடற்கரையிலிருந்து சற்றுத் தூரத்திற்கப்பால் ஜப்பானி



யரது யுத்தக்கப்பல்கள் பல வரிசையாக நின்றிருந்தன. குண்டு பட்டுப் பொத்தல்பொத்தலாகவும் உருக்குலைந்தும்காணப்பட்ட அவற்றின் தோற்றத்தினின்றும் சமீபத்தில்தான் போரினின்றும் மீண்டவைஅவை என்று ஊகித்தேன். கப்பல்களினின்றும் படகுகளில் கரையை நோக்கி வந்துகொண்டிருந்தனர் ஜப்பானிய வீரர். அவர்களது பாதுகாப்பின் கீழ் ருஷ்ய யுத்தக் கைதிகள் வந்தனர். நாங்கள் வந்த அட்மிரல் பிலிப்ஸின் யுத்தக் கப்பலைச் சேர்ந்த பல வீரர்களையும், உத்தியோகஸ்தர்களையும் அதில் கண்டேன். போரின் முடிவு எனக்குத் தெளிவாகிவிட்டது. மாதக் கணக்கில் பிரயாணம் செய்து ஆயிரக்கணக்கான மைல்களைக் கடந்து 'வெற்றியை' எதிர்பார்த்து வந்த பல்லாயிரம் வீரர்களில், மரணத்தின் வாயில் சிக்கியவர் போக மீந்தவர்கள் மரணத்தைவிடக் கேவலமானதொரு நிலைமையில் கைதிகளாகத் தள்ளாடி நடந்து வருகின்ற காட்சியைக் கண்ணால் கண்டேன். சுய பலமும் எதிரியின் பலமும் எவ்விகிதத்திலுள்ளன வென்று அளந்தறிய முடியாமல் அவர்கள் வாழ்நாட்களை அடியோடு வீணாக்கிவிட்ட அந்தக் கொடிய ருஷ்ய அரசாங்கத்தை என் மனதாரச் சபித்தேன். ஆனால் அதிலும் ஒரு நீதி! ஆஜானுபாகுவாய் மலைபோல் வளர்ந்து வலிவு படைத்த அந்த ருஷ்ய வீரர்களை, அந்தச் சின்னஞ்சிறு ஜப்பானிய வீரர்கள் தம் காவலில் அழைத்துச் செல்கின்றனர்! இது என்ன விதியின் விளையாட்டா? அல்லது ஆசியர் நாட்டுப் பிற்போக்காளரினும் வெள்ளையரே எவ்விதத்திலும் மேம்பட்டவர் என்ற செருக்கில் திளைத்தவருக்கு ஒரு பாடமா?

வேறு என்ன கூறுவதற்கிருக்கிறது? ருஷ்யக் கப்பற்படை அடியோடு நிர்மூலமாயிருந்தது. 'சிங்கத்தை அதன் குகையிலேயே போய்த் தாக்கி ஜயித்துவிடலாம்' என்று எண்ணி மனக்கோட்டை கட்டின ருஷ்யா தன் தவறை அப்போதாகிலும் உணர்ந்திருக்கும். ஆனால் என் கவலையெல்லாம் என் எஜமானர் அட்மிரல் பிலிப்ஸ் துரையைப்பற்றியது. யுத்தத்தில் அவர் உயிர் பிழைத்தாரோ இல்லையோவென்பது தெரியவில்லை. அச்சமயத்தில்தான் ஒரு ஜப்பானிய வீரன் வந்து என் எஜமானியைத் தளபதி கிடாமுரா அழைப்பதாகக் கூறினான்.

காப்டன் கிடாமுரா தன் முகாமில் உட்கார்ந்திருந்தான். அருகில் சில ஜப்பானிய வீரர்கள் நின்றிருந்தனர். அவன் மஹா வீரன் தான். ஆனால் அதற்கேற்ப மிகக் கொடூரமான சித்தமுடையவன். நியாயம், அநியாயம் இவற்றைப் பிரித்து நோக்குவது அவன் சுபாவமில்லை. அதனால் தான்கேவலம் சாதாரணச் சிப்பாயாக இருந்த இவன் இவ்வளவு உன்னதமான ஸ்தானத்திற்கு வரமுடிந்ததுபோலும்! எங்கள் வருகைக்காகத்தான் காத்திருப்பவன் போல் உட்கார்ந்திருந்தான் அவன்.

"உன் கணவரின் திறமையைப் பாராட்டுகிறேன். நேற்றைய யுத்தத்தில் எங்களுக்குப் பெருத்த சேதத்தையும் கவலையையும் உண்டு பண்ணியவர் அவர் ஒருவர் தான்" என்றான் கிடாமுரா என் எஜமானியை நோக்கி. இவன் ஆங்கிலத்தில் ஏன் பேசுகிறான், ஜப்பான் மொழியிலேயே ஏன் பேசவில்லை?" எனச் சற்றுச் சிந்தித்தேன். சுற்றி நின்ற ஜப்பானிய வீரருக்கு ஆங்கிலம் தெரியாது. அவர்கள் புரிந்துகொள்ளாமலிருக்கவேண்டுமென்றுதான் ஆங்கிலத்தில் பேசுகிறானென்பதைப் பின்னால் தெரிந்துகொண்டேன். ஆகையால் இம்முறை அவன் பேசியதை நான் புரிந்துகொள்ள முடிந்தது.

"அவர் இன்னும் உயிருடன் இருக்கின்றாரா?" என்று ஆவலோடு வினவினாள் வின்போ. "இந்த நிமிஷம் உயிருடன் தான் இருக்கிறார். ஆனால் அவரது வாழ்வு நீடிப்பது உன்னைத் தான் பொறுத்திருக்கிறது." என்றான் காப்டன் கிடாமுரா. அவன் முகம் கடுமையாக இருந்தது.

"என்னைப் பொறுத்திருக்கிறதா? எப்படி?" என்று மீண்டும் பரபரப்புடன் கேட்டாள் அவள்.

"சொல்கிறேன் கேள். ஜப்பானியர் விரோதிகளுக்கு இரக்கம் காட்டுவதில்லை என்பது உனக்குத் தெரியுமல்லவா? அதிலும் எங்களிடை பெருத்த சேதம் ஏற்படுவதற்குக் காரணமாயிருந்த ஒருவனைப் பழிவாங்க எங்கள் மனதில் எவ்வளவு ஆத்திரம் இருக்கக்கூடும் என்பதைச் சற்று யோசித்துப் பார்! இந்தச் சிக்கலான சமயத்தில் நீ தலையிடாவிட்டால் இன்னும் சில மணி நேரத்திற்கெல்லாம் மற்ற யுத்தக் கைதிகளுடன் அட்மிரல் பிலிப்ஸின் தலையும் தரையில் உருள வேண்டியதுதான்." என்றான் காப்டன் கிடாமுரா.

"தன் கணவனின் கொலைக் காட்சியைப்பற்றி எண்ணுகையிலேயே வின்போவின் உடல் சிலிர்த்தது மறுகணம் காப்டன் கிடாமுராவின் காலடியில் மண்டியிட்டுக் கிடந்தாள் அவள். "பிரபு! என்னாலாக வேண்டியதைத் தெரிவித்தால் எதுவாயினும் செய்யத் தயாராயிருக்கின்றேன். என் உயிரையே வேண்டுமானாலும்......" என்று அவள் முடிப்பதற்குள் குறுக்கிட்டான் காப்டன் கிடாமுரா.

"உயிரா? உன் உயிர் எனக்குத் தேவையில்லை. என்னைப் பொறுத்தவரை உயிர் எனக்குச் சர்வ சாதாரணமான பொருள். போர் முனையில் தினந்தோறும் ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியாவதைநான் பார்த்திருக்கிறேன். என் கையாலேயே நூற்றுக் கணக்கான உயிர்களை உடல்களினின்று பிரித்தெடுத்திருக்கின்றேன். ஹ ஹ ஹ! உயிர் எனக்குத் தேவையில்லை. நான் விரும்புவது உன் உடல், உன் அழகிய உடல் மட்டும்தான். உன் இளமையின் நலத்தை நீ எனக்கு நல்கினால், நமன்வாயில் நிற்கும் உன்கணவன் உயிரை நான் மீட்டுத் தரமுடியும். என்ன சொல்கிறாய்?" என்று கூசாமல் கேட்டான் காப்டன் கிடாமுரா.

என் இரத்தம் கொதித்தெழுந்தது. ஆனால் நானோ நிராயுதபாணி. ஜப்பானிய வீரர்கள் ஆயுதம் தாங்கி அருகில் நின்று கொண்டிருந்தனர். அவர்களை மீறிக் காப்டன் கிடாமுராவுக்குத் தீங்கிழைக்க முயலுதல் பேதமையாகும். எனவே கைகட்டி நின்று கொண்டிருந்தேன்.

வின்போ இப்போது அந்தக் கிராதகனின் காலடியில் கிடக்கவில்லை. அவன் எதிரே கம்பீரமாக நிமிர்ந்து நின்றுகொண்டு அனல் வீசும் கண்களால் அவனை வெறித்து நோக்கிக்கொண்டிருந்தாள். கோப வெறியில் அவள் முகத்தைப் பார்க்கப் பயங்கரமாக இருந்தது.

"துரோகி! துர் எண்ணம் பிடித்த காதகா! உன் விருப்பத்துக்கு இணங்கி உயிரோடு வாழ்வேன் என்று எண்ணினாயா? ஒரு காலும் மாட்டேன். அட்மிரல் பிலிப்ஸ் துரை யுத்தத்தில் இறந்து விட்டாரென்றே வைத்துக்கொள்கிறேன். என் மானத்தை விற்று வது நான் அவர் உயிரைக் காப்பாற்ற வேண்டுமென அவரே விரும்பமாட்டார். உன் தயவு எனக்குத் தேவையில்லை" என்று உறுமிவிட்டு வேகமாகக் கூடாரத்தை விட்டு வெளியேறினாள் வின்போ. நானும் பின் தொடர்ந்தேன்.

* * * *

அந்தி மயங்கியிருந்தது. யுத்தக் கைதிகள் மறுநாட் காலை ஜப்பானியரால் சுட்டுக் கொல்லப் படுவர் என்பதை அறிய வந்தோம். பிலிப்ஸ் துரையை நமன் வாயிலிருந்து மீட்பது இனி இயலாத காரியம் என்பதும் தெளிவாயிற்று. மெல்ல எங்கள் கூடாரத்தை அணுகினோம். "ராம்சந்தர்" என்று மெல்லிய குரலில் அழைத்தாள் என் எஜமானி திரும்பி நோக்கினேன். "ராம்சந்தர்! இனியும் நாம் இங்கு தங்குவது உசிதமில்லை. அந்தக் கிராதகன் நம்மைச் சும்மா விடமாட்டான். எப்பொழுது நாம் அவனது தந்திரத்தில் சிக்கவில்லையோ, அப்பொழுதே அவன் பலாத்காரத்தை உபயோகிக்கத் தயங்கமாட்டான். எனவே இன்று இரவு தொடங்குமுன் நாம் இங்கிருந்து தப்பிச் செல்ல முயலவேண்டும். நீ தயார்தானா?" என்று கேட்டாள். முற்றிலும் தயார் என்று என் சம்மதத்தை தெரிவித்தேன். இரவு 9 மணி சுமாருக்கு இருளில் மறைந்து மறைந்து காவலாளர்களின் கண்ணில் படாமல் கடற் கரைக்கு வந்து சேர்ந்தோம். ஆனால் கடல் கடந்து வெளியேறுவது எப்படி? நாங்கள் வந்த படகைத்தான் ஜப்பானியர் பறிமுதல் செய்து விட்டார்களே! நான் தைரியத்தை இழக்கவில்லை. என் எஜமானி கூறினாள், "ராம்சந்தர்! இத்தகைய சோதனைகளுக்கு உட்பட்டேனும் உயிர் தரித்திருக்க வேண்டுமென்பது என் தீர்மானமல்ல. என் ஆருயிர் நாயகர் இறக்கப் போவதென்னமோ நிச்சயம்தான் என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால் அவரது ஆழ்ந்த அன்பின் அறிகுறியாக என் வயற்றிலிருக்கும் சிசுவையேனும் உயிருடன் உலகிற்கு அளித்து விட்டுப் பின் இறத்தலே என் மனத்திற்கு சாந்தி தருமென எண்ணுகிறேன்" என்று கூறிக் கண்ணீர் உகுத்தாள். என்னாலியன்றவரை அவளைத் தேற்றிய பின் தற்செயலாகக் கடலைத் திரும்பி நோக்கினேன். அலைகளின் மேல் மிதந்து வரும் கறுப்பான ஒரு பெரிய வஸ்து தென்பட்டது. உற்று நோக்கினால் என்ன ஆச்சர்யம்! அதுஒருபடகு. ஆளில்லாமல் நிலைதவறித் தண்ணீரில் மிதந்து வந்து கொண்டிருந்தது. கடலிற் குதித்துச் சற்றுதூரம் நீந்திச் சென்று அதை அணுகினேன். அதில் ஒரு தும்பும் காணப்பட்டது. யாரோ ஜப்பானியக் கடற்கரை ரோந்துக்காரர் கட்டிவைத்திருந்த படகுதான் கயிறு அவிழ்ந்துவிடவே இப்படித் தன்னந்தனியாக அலைகளின் மேல் பிரயாணம் தொடங்கியிருக்க

வேண்டும். பெரு மகிழ்ச்சியுடன் அதைக் கரையை நோக்கி இழுத்து வந்து, எஜமானிக்கு அறிவித்தேன். தெய்வமே குறுக்கிட்டு எங்களுக்கு உதவி செய்வதாக எண்ணுவதைத் தவிர வேறு என்ன எண்ணியிருக்க முடியும் நாங்கள்?

என் எஜமானி படகில் ஏறி அமர்ந்தபின் நானும் ஏறும் பொருட்டு ஒரு கால் வைத்தேன். என் தோளில் யாரோ கை வைப்பதுபோல் தோன்றியது. திடுக்கிட்டுத் திரும்பினால் அட்மிரல் பிலிப்ஸ் துரை—என் எஜமானர்—எதிரே நின்றார். வெகு ஜாக்கிரதையான ஜப்பானியக் காவலாளரின் கவனிப்பையும் மீறி அவர் தப்பி ஓடி வந்திருக்கிறாரென்றால் அது அவருடைய அமானுஷ்யமான நுண்ணறிவையும் தைரியத்தையும் தான் காட்டுகிறது. கணவனைக் கண்ணால் கண்ட என் எஜமானியின் உணர்ச்சிப் பெருக்கை என்னால் விவரிக்க முடியாது. ஆனால் தாமதம் செய்ய இது சந்தர்ப்பமல்ல என்பதை நாங்கள் அறிவோம். இப்பொழுது எழுந்த பிரச்னை வேறு.

படகில் இருவருக்கே இடமிருந்தது. மூன்றாமவர் ஏறினால் படகு உடனே கவிழ்ந்துவிடும். நாங்களோ மூவர் இருந்தோம். என் செய்வது? "கண்மணி! உன்னைக் கடைசி முறையும் சந்தித்தாயிற்று. நான் இப்போது திரும்பிச் சென்று காலையில் எனக்குக் கிடைக்கப்போகும் மரணத்தை எதிர்பார்க்கிறேன். நீயும் ராம்சந்தரும் இப்படகில்......" என்று கூறிவந்தார் பிலிப்ஸ் துரை. "எஜமான்!" என்று அலறினேன் நான். "அம்மாதிரி எதாவது செய்தீர்களானால் நான் இப்போதே என் உயிரை மாய்த்துக் கொள்ளுகிறேன். தாங்களும் யஜமானியும் செல்வதுதான் உசிதம். என் கதி எப்படியாவதாயினும், நான் பின் தங்கத் தயாராயிருக்கின்றேன்." என்று கண்டிப்பாகக் கூறிவிட்டேன். அதிகம் வளர்த்துவானேன். அவர்கள் ஏறிச் சென்ற படகு இருளில் மறையும் வரை கடற்கரையிலேயே நின்றிருந்தேன்.

மெல்லக் கூடாரத்திற்குத் திரும்பினேன். அங்கும் எத்தகைய பாதுகாப்பையும் எதிர்பார்த்துச் செல்லவில்லை நான். என் எஜமானியும், எஜமானரும் தப்பிச் சென்றபின் என் கதி என்னவாகக்கூடும் என்பதைப்பற்றி எனக்கு அதிகச் சந்தேகம் இருக்கவில்லை. மெல்லச் சென்று கூடாரத்தில் நுழைந்தேன். ஏமாற்றமும் கோபமும் முகத்தில் பிரதிபலிக்க உள்ளே தன்னந்தனியனாய் நின்றுகொண்டு சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டிருந்தான் காப்டன் கிடாமுரா. அவன் வரவின் நோக்கத்தை உடனே புரிந்துகொண்டேன் நான்.

என்னைப் பார்த்ததும், 'எங்கே உன் எஜமானி?" என்று கத்தினான் அவன் ஆங்கிலத்தில். என் நெஞ்சில் பயம் உண்டாகவில்லை. "பறவை கூண்டினின்றும் பறந்தோடியிருக்கலாம்" என்றேன் கம்பீரமாக. காப்டன் கிடாமுரா வாயினால் பதில் பேசவில்லை. இடையில் செருகியிருந்த பிஸ்டலைக் கையிலெடுத்தான். டப்டப்'பென்ற இரண்டு சப்தங்கள். மறுகணம் பிரக்ஞையற்றுத் தரையில் சாய்ந்தேன். அந்தக் கடுஞ்சினத்திலும் கூட நானும் தன்னைப் போல் ஒரு ஆசியன்தான் என்று எண்ணிக் கருணை கொண்டான் போலும் அம்மூர்க்கன். ஏனோ என் நெஞ்சுக்குக் குறிவைக்காமல் என் காலைச் சிதைத்துவிட்டான்.

இங்கு தன் கதையை 'டக்' கென்று நிறுத்திவிட்டான் ராம்சந்தர். "பின் என்னவாயிற்று?" என்று நாங்கள் இரண்டு மூன்று முறை வினவிய பின்தான் பதில் கூறினான்.

"பின் என்ன விருக்கிறது? அதற்கு மேலும் காப்டன் கிடாமுராவின் சினத்துக்கு ஆளாகாமல் ஜப்பானிய ராணுவத்தைச் சேர்ந்த மருத்துவ அதிகாரிகள் எனக்குச் சிகித்சை செய்து காப்பாற்றினார்கள். குண்டுபட்ட காலை வெட்டியெடுக்கும்படியாக நேர்ந்து விட்டது. முழுதும் குணமடைந்தபின் அங்கு வியாபார நிமித்தம் வந்த சில ஆங்கிலேயர்களின் உதவியைக்கொண்டு இந்தியா திரும்பினேன்." என்றான்.

"ஆனால் பிலிப்ஸ் தம்பதிகளின் கதி?" என்றார் சப்பை மூக்கர். "மேற்படி ஆங்கிலேயர் வாயிலாகவே அதையும் அறிய வந்தேன். சில சீன மாலுமிகளால் காப்பாற்றப்பட்டு இங்கிலாந்தை அடைந்தனர் என் எஜமானரும், எஜமானியும். இன்றளவும் அவர்கள் இன்பமாகவே வாழ்ந்து வருகின்றனர்." என்ற ராம்சந்தர் சட்டென்று எழுந்து மறுபடி தட்டு முட்டு வகையராக்களை எடுத்து வைக்கத் தொடங்கினான். சில நிமிஷங்கள்வரை எங்களிடையே மௌனம் நிலவியது. அதைக் கலைத்தார் ஒரு ஆங்கிலேய நண்பர்.

"இந்த இந்தியர்களே நிரம்ப எஜமான விஸ்வாசம் உடையவர்கள்......" என்று தொடங்கினார் அவர். அவர் அபிப்பிராயத்தை ஆமோதித்துப் பெரிய ஆரவாரம் செய்தனர் மற்ற ஐரோப்பிய நண்பர்கள்.

முகத்தின் புன்முறுவல் தவழ இரண்டு கைகளிலும் வரிசையாகத் தட்டுக்களை ஏந்திக்கொண்டு உள்ளே சென்றுகொண்டிருந்த ஏழை ராம்சந்தர்மீது எங்கள் பார்வை திரும்பியது.



அய்யாப்பயுல் சீனு வாத்தியார் குறட்டைவிட்டுத் தூங்கும் சமயம்பார்த்து நழுவி சேஷ சாஸ்திரிகள் வீட்டின் பக்கமாய் போய் வட்டமிட ஆரம்பித்தான். சேஷ சாஸ்திரிகள் ரேழி வாசற்படிக்கு நேராக உட்கார்ந்துகொண்டு எழுத்தாணியைத் தீட்டிக்கொண்டிருந்தார். அவர் முன் சீவாத பனை ஓலைக் குவியல்கள் கிடந்தன வேம்பு. அம்மாள் தாழ்வாரத்துத் தூணில் சாய்ந்துகொண்டு நின்றுகொண்டிருந்தாள். இருவரும் சுவாரசியமான சம்பாஷணையில் ஆழ்ந்திருந்தார்கள்.

'மணி பட்டணம் போய் நாலு நாளாகிறதே; இன்னுமா திரும்பி வராமலிருப்பான்? அவ்வளவு முடையாய் அன்றைக்கு வந்தவன், 'போனேன்' இன்னது நடந்தது, இப்போது வந்தேன்! என்று இங்கு வந்து நமக்கு ஒரு பதில் சொல்ல வேண்டாமோ.''

"அவன் காரியம் அனுகூலமாயிருக்கும் போலிருந்தால்தானே இங்கு வரப்போகிறான்? நீங்கள் தான் அன்றைக்கே சொல்லிவிட்டீர்களே—நமக்கேன் பணம்! பிள்ளையாண்டான் மூக்கை அறுத்து அனுப்பிவிடுவான் என்று! உங்களைப்பார்க்க வருவானா?''

"அதானே கேட்கிறேன்?''

'நீங்கள் கடிதம் வேறே எழுதியிருந்தீர்கள். தெரிந்தது தெரியாததற்கு அதுவும், உதவட்டும் என்று.

"அதுதான் என்ன நடந்தது என்று தெரிந்துகொள்ளப்பரப்பு. பிள்ளையாண்டான் ஒரு கடிதாசு போடப்படாதோ? எல்லாம் அவனிடத்தில் நல்லதாய்த்தான் இருக்கிறது. அதிர்ஷ்டமும் ஏதோ பகவத்கிருபையினால் நல்லதாய்த்தானிருக்கும்போலிருக்கிறது. ஆனால் அப்பாவுக்குக் கடிதாசு எழுதுகிற விஷயத்தில்மட்டும் இவ்வளவு அசிரத்தையிருக்கப்படாது. அவன் அடிக்கடி வரவில்லை என்றுகூட எனக்கு வருத்தமில்லை. மாதத்திற்கு ஒரு கடிதம் பெற்றவர்களுக்குப் போட வேண்டாமோ! இதைவிட வேறு எந்தக் காரியம் முக்கியம்? நாம் எவ்வளவு கவலைப்படுகிறோம் அவன் விஷயமாய் எவ்வளவு மனக்கோட்டை கட்டுகிறோம். சியாமளாம்பா கிருபையினால் அவன் கல்யாணத்தையும், அந்த வேங்கடசுப்பயரே பண்ணிவைத்து அவர் ஆபீஸிலேயே ஒரு வேலையும் பண்ணிவைத்து

விட்டாரேயானால் எனக்கு சதாபிஷேகம் பண்ணிக்கொண்டது போல். அதற்கு மேல் எனக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை. சேஷு சாஸ்திரிகளின் குரல் தடதடத்தது.

"எல்லாம் நடக்கும் கவலைப் படாதீர்கள். காந்திமதியையே அவனுக்குக்கொடுத்து அவர் விவாகம் செய்துவைக்கப்போகிருர் என்றுதான் நீங்கள் அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிறீர்களே. உங்கள் மனதில் பட்டுவிட்டால் அது பிற்பாடு அப்படியேதானே நடக்கிறது வழக்கம்"

சேஷு சாஸ்திரிகளின் கவனம் வெளியே சென்றது—"யார் வாசலிலே எட்டி எட்டிப் பார்க்கிறது!"

வேம்பு பார்த்து விட்டு—"ஒருத்தரும் இல்லைபோலிருக்கிறதே—" என்ருள்.

சேஷு சாஸ்திரிகள் த்வனியை உயர்த்திஞர். "யாரடா அங்கே—வாசலிலே! எலே! அய்யாப் பயலே! என்னடா அங்கே நின்றுகொண்டு எட்டி யெட்டிப்பார்க்கிருய்? இங்கே வாடா உளளே."

"இந்தக் குள்ளனு? கள்ளனை நம்பினாலும் நம்பலாம் குள்ளனை நம்பப்படாது" என்ருள் வேம்பு.

அய்யாப்பயல் திருக் திருக் என்று விழித்துக்கொண்டு ரேழிக்கு வந்தான்.

"எங்கேடா வந்தே! அய்யாப் பயலே! யாரைப் பார்க்கிருய்? வாத்தியார் மாட்டைக் கொல்லையிலே மேயவிட்டிருக்கிருயோ?"

அய்யாப்பயல் ஊதல் த்வனியை ஒத்த குரலில் பேசலாஞன்.

"இல்லை மாமா! மாட்டையும் கன்றையும் இப்போது நான் இந்தப் பக்கமே ஓட்டி வருவதில்லையே. நீங்கள் தான் அன்னிக்கு கோபிச்சுக்கொண்டேளே"

"பின்னே எங்கே வந்தாய்! இந்த வெயில் வேளையில்? சீனு வாத்தியார் கடைக்குப் போகச் சொன்ஞரோ, பொடி மட்டை வாங்க!"

"இல்லவே இல்லை மாமா! வாத்தியார் தூங்குகிருர்"

அய்யாப் பயலுக்கு வாத்தியார் குறட்டை விடுவதை நினைத்ததும் சிரிப்பு வந்தது.

"என்னடா எலே சிரிக்கிறே! ஏதோ திருட வந்தவன் 'லச்சுப்' பார்க்கிறதுபோலே ஒரு நாழியா வாசலிலேயே இருந்து எட்டி எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தாய்! கேட்டால் சிரிக்கிருய். சொல்லுகிறயா? உதைக்கட்டுமா?"

"இல்லை மாமா! அடிக்காதிங்கோ!—ஸீதாராமன் வந்திருப்பதாய் கேள்விப்பட்டேன். அவனைப் பார்க்கலாமென்றுதான் வந்தேன்"

"ஸீதாராமன் வந்திருக்காஞ? யாரடா சொன்னது? ஏதாவது பைத்தியம் சைத்தியம் பிடித்திருக்கிறதா உனக்கு! என்னடா போக்கிரிப் பயலே! எதையோ மறைக்கிறதற்காக இப்படி நீ பாசாங்கு பண்ணுகிருய்! நன்ருய் தெரிந்துகொண்டேன். நீ வர வர காலாடிப் பயலாய் போய்விட்டாய். உள்ளத்தை சொல்லுகிருயா! உன் உள்ளங்கால் நரம்பை வாங்கி விடட்டுமா?" சேஷு சாஸ்திரிகள் ஓலைக்கட்டில் கனமானதாக ஒரு கத்தையைக் கையில் எடுத்தார் வேம்பு அவரைத் தடுத்தாள்.—"விட்டுத் தள்ளுங்கோன்னு! இரண்டு கெட்டன்" என்று.

"நீ இருடி சும்மா! இவனு ரெண்டுங் கெட்டான். இந்தப் பயல் ஒட்டுக் கேட்க வந்திருக்கிருன். நாம் பேசிக்கொண்டிருந்ததை வீடு வீடாய்ப் போய்ச் சொல்லிக் கேலி பண்ணுவான். அய்யாப்பயல் லேசுப்பட்டவன் என்ரு நினைக்கிருய்? விஷ ஜந்து! வாயில் ரெட்டை வரிசைப் பல்லை பார்! இவஞல் நம் வீட்டு வார்த்தைகள் எவ்வளவு வெளியே போயிருக்கிறது தெரியுமா! இந்தப் பயலை விடப்படாது. வாசல்

கதவை இழுத்துத் தாழ்ப்பாள் போடு சொல்லுகிறேன். எலே நிஜத்தை சொல்லுகிறயா உன் முதுகுத்தோலை உரித்துவிடட்டுமா?

"இல்லை மாமா! முன்னே சொன்னாப்பிலே பண்ணினாலும் பண்ணுங்கோ முதுகுத்தோலை விட்டுவிடுங்கோ மாமா?"

அய்யாப்பயல் உடம்பை நெளித்த நெளிச்சலால் சேஷு சாஸ்திரிகளுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. "சீ கழுதை! ஓடிப் போடா! இனிமே இங்கேவந்து ஒட்டுக் கேட்காதே ஓடிப்போ."

"இதோ போகிறேன் மாமா. நான் சத்தியமாய்ச் சொல்லுகிறேன். ஒட்டுக்கேட்க வரவில்லை ஸீதாராமனைப்பார்க்கத்தான் வந்தேன்.—விட்டேன்! விட்டேன்! சிவராமமாமாதான் சொன்னார். சத்தியமாய்ச் சொல்லறேன். விட்டேன், விட்டேன்."

"சிவராமமாமாவா!" என்றார் சேஷு சாஸ்திரிகள் ஏதோ விஷயமிருக்கும் போலிருக்கிறதே, என்ற சந்தேகத்துடன்."

அவர் பட்டணத்திலேயிருந்து இன்னிக்குத் தானே வந்தாராம்"

"சிவராமன் பட்டணம் போயிருந்தாரா"

"எனக்கு அதெல்லாம் தெரியாது மாமா! இன்னிக்குக்காலமே தான் அவர் பட்டணத்திலேயிருந்து வந்தார்."

"அவர் என்ன சொன்னார் ஸீதாராமனைப்பற்றி, ஸீதாராமன் அங்கே சௌக்கியமாயிருக்கிறானா இல்லையோ."

"இல்லையே"

"என்னடா, ஏலே! இல்லை என்கிறாயா?"

"நீங்கள் அவனை அதட்டாதேயுங்களேன்! அவன் சொல்லுகிறபடி சொல்லட்டும்" என்றாள் வேம்பு.

"சொல்லடா மேலே."

"ஸீதாராமன் அங்கே இல்லை. அவ்வளவுதான்"

"பின்னே எங்கேயாம்?"

"நேற்றுத்தான் எங்கேயோ ஓடிப்போய்விட்டானாம்"

"அப்புறம்"

"போலீஸில் எழுதிவைத்திருக்கிறார்களாம்"

"அவனைக் காணும் என்றா?"

"ஆமாம். அவன் ஆயிர ரூபாய் நோட்டை இரும்பு பெட்டியிலிருந்து திருடிக் கொண்டு ஓடிப் போய்விட்டானாம்."

"எலே, போக்கிரிப் பயலே! என்னிடத்திலேயே விளையாடுகிறே;"—சேஷு சாஸ்திரிகள் கையிலிருந்த ஓலைக் கத்தையால் அய்யாப்பயல் முதுகில் ஒரு இழுப்பு இழுத்துவிட்டார். "மறுபடி இந்த மாதிரிப் பேசினால் உன் நாக்கை அறுத்து விடுவேன் ஜாக்கிரதை!" என்றார்.

"விர்" என்று கத்திக்கொண்டு அய்யாப்பயல் — மாமா, மாமா வேண்டாம்! உங்கள் பிள்ளை செய்ததுக்காக என்னைப் பிடித்து அடிக்கிறேளே!"

"அடே குடியைக் கெடுக்கவந்த பயலே! என் பிள்ளையாவது செய்யவாவதுடா? எத்தப்பயல் சொன்னது! அவன் நாக்குப் புழுத்துப் போகாதா?" சாஸ்திரிகள் ஓலைக் கத்தையை மறுபடியும் பிரயோகித்தார்.

"ஐயய்யோ மாமா, என்னை அடிக்காதேயுங்கள் சிவராம மாமா எங்கள் வாத்தியாரிடத்திலே சொல்லிக் கொண்டிருந்தார் காவேரி மடத்திலே—அதைச் சொன்னேன்."

"எலே நன்றாய் ஞாபகப்படுத்திக்கோ! ஒன்றுக்கொன்று உளறாதே! ஸீதாராமன் திருடினான் என்றா சொன்னான்?"

"ஆமாம், மாமா! ஞாபகமாய்த் தான் சொல்லுகிறேன், ஸீதாராமன் அவாத்துப் பெண்ணைக் கையைப் பிடித்து இழுத்தானாம். ஆயிரரூபாய் பணம் திருடினானாம். ஓடிப்போய் விட்டானாம்"

சாஸ்திரிகள் ஓலைக்கத்தையை நழுவவிட்டுவிட்டுக் கீழே சாய்ந்தார்.

"சிவராமனா, சொன்னாரா நான் கேட்கட்டுமா? பொய்யாயிருந்தால் உன்னை என்ன பண்ணுவேன் தெரியுமா?"

"கேளுங்கோ— நிஜந்தான். நிஜமாயிருந்தால் என்ன பண்ணறேள்?'

"ஐயய்யோ— ஸீதாராமனா! யாரைக் கையைப் பிடித்து இழுத்தானோ— நம்ப முடியவில்லையே! அடபாவி—பொய்! பொய்!"

"காந்திமதியாமே, ஒரு பெண். அவளைத்தான். நீங்கள் வேண்டுமானால் போய் சிவராம மாமாவைக் கேளுங்களேன்— சீனு வாத்தியாரை மட்டும் கேட்காதீர்கள் அவர், 'ஏண்டா நீ போய்ச்சொன்னாய், என்று என்னை அடிப்பார்.

'ஐயய்யோ தெய்வமே'என்றுமூர்ச்சித்தாள்வேம்பு.

"ஹா ஈச்வரா! எனக்குத்தாங்க முடியவில்லையே! —ஹா ஹா!— சியாமளாம்பிகே! கடைசியில் இந்த கதிக்கு என்னை ஆளாக்கிவிட்டாயா? ஆயிரம் ரூபாயாம்! இரும்புப்பெட்டியாம்! எங்கே போனானோ —மற்றொரு காலித்தனம் அவன் செய்திருப்பானா— இது என்பிள்ளையா?" சேஷு சாஸ்திரிகள் தூணில் தலையை மோதிக்கொண்டு அழத்தொடங்கினார்.

"நான் நாலு நாள் முன்னே அவரை ரயில்வே ஸ்டேஷனில் பார்த்ததுதான், பின்பு பார்க்கவில்லை' என்றான் அய்யாப்பயல்.

"அவன் பட்டணம் போனானே அன்னிக்கா?"

"ஆமாம் நீங்கள்கூட என்னை ஒரு லெட்டரை ரயிலில் போஸ்டு பண்ணும்படி கொடுத்து அவசரமாய் அனுப்பினீர்களே அப்போ பார்த்ததுதான்"

"அப்போ அவர் உன்னைப் பார்த்தாரோ? எதாவது விசாரித்தாரோ?"

அய்யாப்பயல் அவர் அழுவதையும் வேம்பு கிணற்றிலிருந்து தூக்கிப் போடப்பட்டவளைப் போல் விழுந்து கிடப்பதையும் பார்த்து கிலி பிடித்துப் போய் விசிக்கலானான். சிறிதுநேரம் கழித்து சேஷு சாஸ்திரிகள் கண்ணைத்திறந்து அய்யாப் பயலை பார்த்தார்.

"மணி ஊரில் இருக்கிறாரோ? உனக்குத் தெரியுமோ?" என்று கேட்டார்.

"இல்லையே. இருட்டிப்போய்விட்டால் அப்புறம் தனியாக எப்படி ஆத்துக்கு வரமுடியும்? அவர் தான் போஸ்டு பண்ணுகிறேன் என்று சொல்லி வாங்கிக்கொண்டாரே!

சேஷு சாஸ்திரிகள் இரண்டு கைகளாலும் தலையில் அடித்துக்கொண்டார்.

கொஞ்சம் தலை தூக்கியிருந்த வேம்பு, "அடபாழும்தெய்வமே!" என்று அலறிவிட்டு மறுபடி சோகத்திலாழ்ந்தாள்.

"அய்யாப்பயலே, நீ நல்லவேளையில் ஆத்துக்குப் போ' என்று அவனை வழி அனுப்பிவிட்டு வாசல் கதவைத் தாளிட்டுக்கொண்டார் சாஸ்திரிகள்.

"பார்க்காமல் என்ன? விசாரிக்காமல் என்ன? அன்று ரயில் ரொம்ப லேட்டாகவரும் என்று சொன்னார். நான் அந்த லெட்டரை அவரிடம் தானே கொடுத்து போஸ்டு பண்ணச் சொல்லி விட்டு அதிகமாய்இருட்டு முன்ஆத்துக்கு வந்தேன்?

"ஏண்டா அய்யாப்பயலே! அந்த லெட்டரை மணியிடமா கொடுத்தாய்! நீ போஸ்டு பண்ணவில்லையா?"

(தொடரும்)



மாதர் மகா சபை

‘குங்குமம்’

‘வாருங்கோ மாமி, வாருங்கோ! இன்றைக்கு மழைதான் வரப்போகிறது! ஏது இவ்வளவு தூரம, வழி தெரியாமல் வந்துவிட்டீர்களா என்ன?’ என்று அங்கு வந்த கோடியகத்து கல்யாணி மாமியைக் கூப்பிட்டாள் ருக்கு.

‘வழி தெரிந்துதானடியம்மா வந்தேன். அதெல்லாம் கிடக்கட்டும். இங்கே லட்சுமி வந்தாளோ?’ என்றாள் கல்யாணி மாமி.

‘வரவில்லையே!’ என்றாள் ருக்கு.

‘அது யாரடி அது லட்சுமி?’ என்று கேட்டாள் பானு.

‘கல்யாணி மாமியின் நாத்தனாருடைய பெண்.’

‘நான் பார்த்ததில்லையே! அவள் இங்கேயே இருக்கிறவளா?’

‘இல்லை. இல்லை. அவள் திருவண்ணாமலையில் இருக்கிறாள், குழந்தைக்கு கண்ணில் ஏதோ கோளாறும். அதற்காக வைத்தியத்துக்கு இங்கே வந்திருக்கிறாள்.’

‘சரிதான். மாமிக்கு விருந்தாளிகளுக்கு ஓய்வே இல்லை போலிருக்கிறது. போனமாதம் கூட உங்கள்மாமா பெண்ணோ, பேத்தியோ வயிற்றில் ஏதோ கோளாறு என்று வைத்தியத்துக்கு வந்து ஒருமாதகாலம் இருந்துவிட்டுப் போகவில்லையா என்றாள் விமலா.

‘விருந்தாளிக்கு என்ன குறைவு? வந்தவர்களை ஆதரவாக விசாரித்து உபசரிக்க மனுஷ்யாள் இருந்தால் தானாகவே வீட்டைத் தேடிக்கொண்டு விருந்தாளிகள் வந்து சேர்கிறார்கள். பந்துக்கள் என்றால் நாலு பேர் வரவேண்டியதுதான். நாமும் அவர்கள் வீட்டுக்குப் போகவேணடியதுதான். அதுதான் மனுஷ்யத்தனம். பணம் நல்ல வழியில் உபயோகப்படுவதற்கு உபாயமும்கூட. ஆனால் இருக்கிற நாளெல்லாம் இருந்துவிட்டுப் போகிற போக்கில் தூற்றிக் கொண்டு போகிறார்களே அப்படிப்பட்ட விருந்தாளிகளைக் கண்டால்தான் எனக்குக் கட்டோடு பிடிக்கிறதில்லை.’ என்றாள் கல்யாணி மாமி.

‘அதெல்லாம் நன்றிகெட்ட கூட்டங்கள். ஆனால் இந்த லட்சுமி அந்த கோஷ்டியைச் சேர்ந்தவளாக இருக்கமாட்டாள் என்று நினைக்கிறேன். ‘கூடமாட’ ஒத்தாசையாகக்கூட இருப்பாள்போலிருக்கிறது’ என்றாள் ருக்கு.

‘நன்றாகச் சொன்னாய். நல்ல மனுஷியாகத்தான் பார்த்துச் சொன்னாய். போன வருஷம் அதனுடைய அகமுடையானுக்கு வைத்தியத்துக்காக இங்கே வந்திருந்தது. எங்களகத்தில்தான் ஒருமாதம் இருந்தார்கள்.’ என்று கல்யாணி மாமி சொல்லிக்கொண்டிருக்கையில் ‘ஏன் மாமி, உங்கள் தம்பி பக்கத்துத் தெருவில் இருக்கிறாரே, அங்கே போகிறதில்லையா?’ என்று கேட்டாள் ருக்கு.

‘அதைப்பற்றித்தான் நானும் சொல்ல ஆரம்பித்தேன். தம்பிக்கு மாசம் முன்னூறு ரூபாய் சம்பளம். எங்களைவிட நல்ல அந்தஸ்தில் இருக்கிறான். எங்களைச்சேர்ந்த பந்துக்கள் ஒருவராவது ஒரு நாளில் அங்கே போய் ‘கை நனைத்தது கிடையாது.’ அவனிடம் ஏதாவது காரியமாக வருகிறவர்கள்கூட சாப்பிடுவதற்கு இங்கேதான்’

‘ஏன் அப்படி?’

‘என் தம்பியின் அகமுடையாள் மகா சோம்பேறி. சோம்பேறியோடு மட்டுமில்லை. ரொம்ப சிக்கனக்காரி, பந்துக்கள் யாராவது வருகிறார்களென்று தெரிந்தால் உடம்பு சரியில்லையென்று துணியைப் போர்த்திக்

கொண்டு படுக்கை போட்டு விடுவாள். அதற்கும் மீறி வருகிறவர்கள் உட்கார்ந்து விட்டால் ஒருவேளை மிஞ்சினால் இரண்டுவேளை. அதற்குமேல் முணு முணுப்புத்தான். அதற்காகவே என் தம்பி வருகிறவர்களை ஹோட்டலுக்கு அழைத்துக் கொண்டு போய்விடுவான். இதைத் தெரிந்துகொண்டு வருகிறவர்கள் ஜாடையாக நின்றுவிட வேண்டும்'

'ஆகையால் வருகிறவர்களுக்கெல்லாம் உங்களகத்தில்தான் உபசரிப்பு. நீங்களும் சாது. உங்களகத்துக்காரரும் சாது பாவம்!'

'உபசரிப்பதைப்பற்றிக்கூட எனக்குக் கஷ்டமில்லை. போன வருஷம் லட்சுமியும் அவள் அகமுடையானும் ஒரு மாதம் இருந்துவிட்டுப் போனார்கள். ஆளி முகம் கோணாதபடி தான் விசாரித்து அனுப்பினோம். ஒருவேளை கூடத் தம்பியகத்தில கை நனைக்கவில்லை. ஊருக்குப் போகும்போது தம்பி கௌரவமாக ஏழு ரூபாயில் ஒரு ரவிக்கைத்துண்டை வாங்கிக் கொடுத்தான். இவர் மரியாதைக்கு ஒரு ரூபாயை வெற்றிலைப்பாக்குடன் வைத்துக் கொடுத்தார். எதிர் வீடு, பக்கத்து வீடுகளுக்கெல்லாம் சென்று என் தம்பி வாங்கிக் கொடுத்தான் என் தம்பி வாங்கிக்கொடுத்தான்' என்று அந்தத் துண்டை எல்லோருக்கும் காட்டிப்பெருமையடித்துக் கொண்டாளாம். உங்கள் மாமா ஒன்றும் வாங்கிக்கொடுக்கவில்லையா? என்றால் 'அவர்கள் பாவம் ஏழைப்பட்டவர்கள். அவர்கள் எங்கே வாங்கிக் கொப்பது' ஏதோ அவர்கள் சக்திக்கு ஒரு ரூபாயை வைத்துக் கொடுத்தார்கள். அது கூட வேண்டாமென்று சொல்லலாமாவென்றுதான் பார்த்தேன். 'இவர்' கூடத்திருப்பிக்கொடுத்து விடும்படிதான் சொன்னார். சே! அப்படியெல்லாம் செய்தால் நன்றாக இராதென்று எண்ணிக் கொண்டு பேசாமல் வாங்கிக் கொண்டேன்' என்று பதில் சொன்னாளாம். எப்படியிருக்கிறது நியாயம்! ஒருமாதகாலம் அவர்கள் அகத்தில் இரண்டு பேரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தோமே அவர்களுக்கு என்ன செலவாகியிருக்கும்? தம்பி செலவழித்த ஏழுரூபாயைப் போல் பத்துபங்கு செலவழிந்திராதா? இதற்குமேல் ரவிக்கைத்துண்டும் வாங்கிக் கொடுக்கவேண்டுமா?' என்று ஒரு பெண்ணுக்குப்பதில் சொல்லத் தெரியாமல் போய் விட்டதே. அதிகம் செலவு நமக்கு. கௌரவம் அவனுக்கு. அதுதானே இப்படிப்பட்ட ஜனங்களைக் கண்டால் எனக்கு கட்டோடு பிடிக்கிறதில்லை' என்றாள் கல்யாணி மாமி.



''...எல்லோரிடமும் காட்டி பெருமை அடித்துக்கொண்டாளாம்...''

இது எவ்வளவோ பரவாயில்லையே. சென்றமாதம் எங்கள் பெரியம்மாவும், பெரியப்பாவும் வைத்தியத்திற்காக வந்திருந்தார்கள். இருபது நாள் இருந்தார்கள். பெரியம்மா நடுவில் ஊருக்குப் போகவேண்டிய வேலை இருந்தது.போய் விட்டாள். திடீரென்று என் தங்கைக்கு உடம்பு சரியில்லையென்றும், சகாயத்துக்கு யாருமில்லையென்றும், உடனே புறப்பட்டு வரும்படியும் என் தங்கையின் அகத்துக்காரரிடமிருந்து தந்தி வந்தது. என்ன செய்கிறது? என்னுடைய சித்தப்பா (இங்கு வந்திருக்கும் பெரியப்பாவின் சொந்த சகோதரர்) மாம்பலத்தில் இருக்கிறார், பெரியப்பாவை அங்கே போகச்சொல்லி விட்டு நாங்கள் தங்கையின் சகாயத்துக்காகப் போய்விட்டோம். அத்துடன் பெரியப்பாவுக்கும் உடம்பு குணமாகிவிட்டது. அவர் இன்னும் ஐந்தாறு தினங்கள் தான் இங்கே இருக்க வேண்டியிருந்தது. இதற்கு பெரியம்மா சொன்னாளாம்- இதனுடைய குணமெல்லாம் எனக்கு முன்னமேயே தெரியுமே. நடுக்காட்டில் கொண்டு விட்டுக் கொலைசெய்கிற கூட்ட

மாயிற்றே அதெல்லாம். வைத்தியத்துக்கு ஒருவர் வந்திருக்கும்போது 'நட்டாற்றில்' விட்டுவிட்டுப் போய்விட்டதுகளே! அதுகள் எதற்குத்தான் அஞ்சுங்கள்! என்று எல்லோரிடமும் சொல்லிச் சொல்லி 'மாய்ந்து' போய்விட்டாளாம்.

ப்படியிருக்கிறது நியாயம்! முன்னால் செய்த உபகாரமெல்லாம் தெரியவில்லை. ஐந்தாறு நாள் விட்டு விட்டுப்போய் விட்டுப் போய்விட்டோமே! அதுதான் பெரிதாகத் தெரிந்தது. அதுவும்வேண்டுமென்று விட்டு விட்டுப் போனோம்? இவர் மாதிரியாகத்தானே இன்னொருவருக்கு உதவிக்காகப் போனோம்! அதுவும் நடுக்காட்டில் திக்கு திசை தெயாத புது இடத்திலா விட்டு விட்டுப் போய்விட்டோம்? அந்நியரில்லை, அயலாரில்லை. சொந்த தம்பியின் வீட்டில்தான் விட்டு விட்டுப் போனோம், என்னைவிட பொறுப்பு அவருக்குத்தான் அதிகம். அப்படியிருக்க எங்களைப்பற்றித் தூற்றித்திரிந்தாளாம். நான் சொல்லுகிறேன். உலகத்திலே 'ஐயோபாவம்!' என்று எவன் தயை காட்டுகிறானோ, அவனுக்குக் கெட்ட பெயர், இரக்கமே இல்லாமல் அலட்சிய புத்தியோடு இருக்கிறானே அவனுக்கு நல்ல பெயர்,' என்றாள் பானு.

கைப்புண்ணுக்குக் கண்ணாடியா மாமி! உயிர்போவதானால் கூட எதிர்வீட்டு ஏகாம்பர மாமா காலணா கொடுக்க மாட்டார். ஏகாம்பர மாமாவுக்கு ரொக்கத்தில் நாலு லட்சம் இருக்கிறது. இது தவிர சொந்தத்தில் நாலு வீடு இருக்கிறது. கிராமத்தில் 'நிலம், நீர் ஏராளமாக இருக்கிறது. பேர்வழி எச்சில் கையால் காக்கையை ஓட்ட மாட்டார். அதுவே பக்கத்து வீட்டு பங்காருசாமி அய்யங்கார் இருக்கிறார். பிறத்தியார் கொஞ்சம் கஷ்டப்படுவதைப் பார்த்தால்கூட அவருக்கு மனம் சகிக்காது. தான் பட்டினி இருந்தாவது பிறத்தியாருக்கு உபகாரம் செய்தால்தான் அவர் மனது திருப்தியடையும். ஆனால் ஏகாம்பர மாமாவிடம்தான் ஜனங்களுக்குப் பயம், பக்தி, மரியாதை எல்லாம். பங்காருசாமி அய்யங்காரைக் கண்டால் அலட்சிய புத்தி, அவமரியாதை அத்துடன் இவ்வளவு உபகாரம் செய்கிறாரே ஒரு சமயம் இல்லாவிட்டால் ஒரு சமயம் மனுஷ்யன் இல்லையென்றுகைவிரித்துவிட்டால் உடனே அவனிடம்மனஸ்தாபம்தான். அவ்வளவென்ன! எங்கள் தகப்பனாருக்கு பங்காருசாமி அய்யங்கார் எத்தனையோ நெருக்கடியான சமயங்களில் உதவி செய்திருக்கிறார். போன தரம் ஒரு இருபது ரூபாய் கைமாற்றாக பங்காருசாமி அய்யங்காரை அப்பா கேட்டாராம். அவர் இல்லையென்று சொல்லி விட்டாராம். அதற்காக அவரிடம் அப்பாவுக்கு மனஸ்தாபம். எப்படியிருக்கிறது நியாயம்!' என்றாள் சாந்தா.



"...இல்லை என்று கைவிரித்து விட்டால்..."

'இதெல்லாம் கூட வேடிக்கையில்லை. இன்னொரு கோஷ்டியிருக்கிறது. நமக்கு அவ்வளவாக சமீப பந்துவாகக்கூட இருக்கமாட்டார்கள். என் மருமானகமுடையாள் இந்த வேளை அங்கே சாப்பிட்டு விட்டுத்தான் போயாக வேண்டுமென்று அப்படி மன்றாடியது. 'அதற்கென்னடியம்மா இன்னொரு சமயம் வந்தால் இருக்கவே இருக்கிறது. நான் இங்கு வரும்போதெல்லாம் ஒரு வேளைகூட இங்கு எட்டிப் பார்க்காமலேயே போய் விடுகிறேனென்று என் அத்தையின் பெண் அப்படி நிஷ்டூரப்படுகிறது. இந்ததரம் அங்கேதான், நீ என்ன மனஸ்தாபப்பட்டாலும் சரி'என்று சொல்லி விட்டு வந்து விட்டேன். போன மாதம் நான் இங்கு வந்து விட்டுப் போனபோது இங்கு வராமலே போய் விட்டதற்கு எங்கள் பக்கத்தகத்து மாமியுடன் சொல்லி அப்படி குறைபட்டுக் கொண்டாயாம். ஒழிந்தால் வருவதற்கு எதற்காகடியம்மா கிராக்கி செய்யப் போகிறேன். இன்னும் ஒருவாரம் இங்கே இருக்கப் போகிறேன். வேலை இருக்கிறது. வேறு எங்கும்போகவில்லை,உன் ஆசை தீர இங்கேயே இருந்து விடுவதென்று தீர்மானம் செய்து கொண்டு வந்து விட்டேன். யார் எந்த நிஷ்டூரமாவது பட்டுக் கொள்ளட்டும் என்று அவர்களிடம் நமக்கு அப்படிப் பட்ட பிரீதி இருப்பதாக வலுவில் இழுத்துப் போட்டுக் கொண்டு சித்தியின்பேத்தியோ, பெரியம்மாவின் கொள்ளுப் பேத்தியோ வந்து முகாம்செய்து விடும். அதற்கும் மேல் நாம் என்ன செய்கிறது! நான் அந்த மாதிரி யாரிடமும் சொல்லவில்லையே என்று சொல்லப் போகிறோம்! வீட்டில் நாலு பேருடன் ஐந்தாவது பேர்

என்று மனதை ஆறுதல் செய்துகொள்ள வேண்டியதுதான். ஆனல் ஒரு வேடிக்கை. இவர்கள் போகிற இடமெல்லாம் இதே உபாயத்தைக் கையாண்டு கொண்டுதான் போவார்கள். மருமான கமுடையாள் கூப்பிட்டே இருக்கமாட்டாள். அங்கு இவள் போயும் இருக்கமாட்டாள். ஒரு வேளை இல்லாவிட்டால் ஒரு வேளை கொஞ்சம் சிரமத்தைத் தெரியப்படுத்தினேமோ, அவ்வளவுதான், தெருவிலுள்ள அத்தனை வீடுகளிலும் நம்ம வீட்டு ரகசியமெல்லாம் அம்பலத்துக்கு வந்துவிடும்' என்ருள் சரோஜா.



பத்திரிகை ஆசிரியர்:—இந்தப் பெரிய குப்பைக்கூடையை எதுக்காக கொண்டுவந்து வெச்சிருக்கேப்பா?

ப்யூன்:—தொடர் கதைங்களை இதுலே போடலாமுங்களே, சின்னக்கூடைலே சிறுகதைக்குத்தான் இடம் இருக்குதுங்க ....!

'இதுதானடியம்மா உலகம்! இது தெரியாதா? அவள்தான் போடாத மகராஜி,போடுகிற மகாராஜி உனக்கும் என்ன வந்துவிட்டது' என்று பிச்சைக்கார்கள் கூடச் சொல்வதாக விளையாட்டாக ஒரு ஹாஸ்யம் உலகத்தில் இருந்து வருகிறதே அதுதான் இது. அப்படித்தான் இருக்கிறதுகள் சில ஜந்துக்கள். அதெல்லாம் சுய நலமிகள் தங்கள் காரியம்தான் அதுகளுக்குப் பிரதானம். அதற்கு ஏதாவது சிறிது தடங்கல் வந்துவிட்டால்கூட முன்பின் யோசிக்காமல் இப்படித்தான் எதையாவது உளறிக் கொட்டுங்கள். குறுகிய புத்தியை உடையதுகள். அதற்காக நாம் உபகார சிந்தையே இல்லாமல் இருந்துவிடுகிறதா என்ன! உலகத்தில் நல்லவர்கள், கொஞ்சம் உபகாரம் செய்தாலும் அதைப் பெரிதாகப் பாராட்டுகிறவர்கள், எத்தனையோ பேர்கள் இருக்கிருர்கள்,' என்ருள் ருக்குவின் மாமியார்.

'அப்படியானல் கல்யாணி மாமியின் வீட்டில் புகைச்சல் கிளம்பியிருக்கிறது'என்ருள் சரோஜா.

'அதெப்படி - தெரிந்துவிட்டது உனக்கு?' என்ருள் ருக்கு.

யக்ஷணி சொல்லியிருக்கும் என்ருள் சாந்தா.

யக்ஷணி சொல்லவேண்டுமா இதற்கு. பேர்வழி எப்பொழுது வீட்டை விட்டுச் சொல்லாமல் வம்பர் மகா சபையைத் தேடிக்கொண்டு போய் அவளை மாமி பின் தொடர்ந்திருக்கிருளோ அப்பொழுதே தெரியவில்லையா அதன் மர்மம்! என்ருள் சரோஜா.

'மணி ஐந்தரையாயிற்றே ஏன் டீச்சுக்குப் போக நேரமாகவில்லையா?' என்று எழுந்தாள் விமலா.

புதிய தொடர் கதை

ஹாஸ்ய ரஸமும், சிருங்கார ரஸமும் ஒன்றையொன்று மிஞ்சுவண்ணம் ருசிகரமான சம்பவங்களுடன்கூடிய "கதலீபுர நாடகம்" என்ற புதிய தொடர் கதை அடுத்தபடியாக ஆரம்பமாகும்.

வள்ளைப்பாட்டும் கொல்லிப்பாவையும்

வள்ளைப் பாட்டென்பது, நெல், தினை முதலிய தானியங்களை உரலிலிட்டு இடிக்கும் மகளிர். தான் விரும்பும் ஒருவனது பெருங்கொடை அல்லது வீரம் போன்ற சிறப்புக்களைப் புகழ்ந்து பாடும் பாட்டு. ஒருவனது வள்ளல் தன்மை (வண்மையைக் குறித்துப் பாடுதலின், இப்பாட்டு "வள்ளை" என்னும் பெயரைப் பெற்றது போலும்.) உலக்கை பிடித்து இடிக்கும் மகளிர் பாடும் பாட்டாகையால் இதனை "உலக்கைப் பாட்டு" என்றும் கூறுவர்.

"பைங்கண் வேழத்துப் பணைமருப் புலக்கையின்
அறையுரல் நிறைய ஐவனப் பாசவல்
இசையொடு தன்னைய ரியல்பு புகழ்ந்திடிக்கும்
அம்மனை வள்ளை இன்னிசை"

எனப் பெருங் கதை (உதயண குமார காவியம்) யில் கொங்கு வேளிர் பாடுகிறார். மற்றும் கலித்தொகை, சூளாமணி, கம்பராமாயணம் ஆகிய நூற்களிலும் இதனைக் குறித்த பாடல்களைக் காணலாம்.

"கொல்லிப் பாவை" என்பது கண்டார் மனத்தைக் கவரும் கவினும், காமுகரைக் காய்ந்து கொல்லும் பேராற்றலும் அமைந்தவோர்பாவை. எனவே, இதற்குக் "கொல்லி" எனும் பெயர் வாய்த்தது. இது முதலில் "வல்வில் ஓரி" என்பானுக்குச் சொந்தமாயிருந்து பின்பு சேரர்வசமான மலையின் மீது மேற்குப் பக்கத்தில் ஒரு தெய்வத்தாலோ, பூதத்தாலோ எழுதப்பெற்றதென்பர். இப்பாவையின் பெயரால் இம்மலையும் "கொல்லி," "கொல்லி மலை" எனும் பெயர்களைப் பெற்றதெனலாம். இவ் வரலாற்றை,

"பொறையன்
உரைசா லுயர்வரைக் கொல்லிக் குடவயின்
.........நெடுவரைத் தெய்வ மெழுதிய
வினை மாண் பாவை"

எனவும்,

"கொல்லிக் குடவரைப்
பூதம் புணர்த்திய புதியயற் பாவை"

எனவும் வரும் நற்றிணைப் பாடல்களானும் அறியலாம். இனி, கொல்லிப்பாவையையும் வள்ளைப்பாட்டையும் குறிக்கும் குறுந்தொகைப் பாடலொன்றின் கருத்தைக் கீழே காணலாம்.

சிறைப்புறத்திலே (ஒதுக்கிடம்) தலைவனைச் சந்தித்த தோழி, தன் தலைவியைத் தலைவன் மணந்து கற்பொழுக்கத்தில் களிக்குமாறு தூண்ட எண்ணித் தனக்குள் சொல்லிக் கொள்பவள் போன்று தலைவனுக்குக் கேட்குமாறு பின்கண்டபடி கூறினளாய்:

"பெரிய அணிகலங்களையணிந்த சேரனது மிக்க அச்சத்தை விளைக்குங் கொல்லி மலையின் மேற்கிலுள்ள மலையின் மீது தெய்வம் எழுதிய கரிய கண்ணையும், நல்ல அழகையுமுடைய கொல்லிப் பாவையை நிகர்த்த இம்மெல்லிய சிறு பெண்ணாகிய என் தலைவி, பருந்த அடியையும் விரிந்த வாயையும் உடைய உரலில் நெல்லையிட்டு இடிப்பவர் பாடும் வள்ளைப்பாட்டைப் பாடி அதனுல் நன்மையைப் பெறுவாளாயின், அயலார் சொல்வனவெல்லாம் சொல்லட்டும்; இந்த அறிவில்லாத ஊரார் செயலைக் குறித்து நாம் ஏன் வருந்தவேண்டும்?"

பாடல் வருமாறு:—

"பாவடி யுரல பகுவாய் வள்ளை,
ஏதின் மாக்கள் நுவறலு நுவல்க,
அழிவ தெவன் கொலிப் பேதை யூர்க்கே,
பெரும் பூட் பொறையன் பேஎமுதிக் கொல்லிக்
கருங்கட் டெய்வங் குடவரை யெழுதிய
நல்லியற் பாவை யன்ன விம்
மெல்லியற் குறுமகள் பாடி நன் குறினே."

—(அ. சுருளியாண்டிப் பாவலர்)



காலை மணி ஆறு இருக்கும். விசுவனாத பட்டாச்சாரியும், நிகில்நாத பட்டாச்சாரியும் நதியிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தனர். "விசுவா! கேட்டாயா, சமாசாரம்? நம் சிபு சித்தப்பா ஊர்க்கோடியிலிருக்கும் காசிநாத் சௌத்ரியின் காலி மனையை வாங்கப் போகிறாராமே!" என்று மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தார், பெரியவரான நிகிலநாத்.

"ஆமாம், கிழம்! ஊரெல்லாம் மனையாகவும் வீடாகவும் வாங்கிப்போட அலைகிறது. ஆசைக்கொரு பெண்ணும் ஆஸ்திக்கொரு பிள்ளையுமாக இருக்கிறது. அவருடைய ஆஸ்திக்கு நாம்தான் வாரிசு என்றிருந்தோம். ஆனால் கிழவயதில் அவருடைய சொத்துக்களை அனுபவிக்க ஒரு பிள்ளை வேறு பிறந்து விட்டது!" என்று எரிச்சலோடு கூறினார்.

'ருசி கண்ட பூனை உரிக்கு உரி தாவுமாம்' என்பதுபோல் போனவருடம் போலாநாத்திடம் வாங்கிய மனையில் கறிகாய் விற்பவர்களுக்கென்று கூரை வேய்ந்து கொடுத்து அவரிடம் நல்ல வாடகை வாங்கிவிடுகிறார். முனிஸிபாலிட்டிக்குக் கட்டியதுபோக அவருக்கு விசேஷ லாபமாம். அதற்குப் பக்கத்திலேயே இம்மனையையும் வாங்கிவிட்டால் நிறையப் பணம் வருமென பேராசைப் படுகிறது இந்தக் கிழக்கோட்டான்!"

"விசுவா! சித்தப்பாவிற்கு வயது ஆக ஆக பணப்பித்தும் அதிகமாகி வருகிறது. அதை இப்படியே நாம் விட்டுவிடக் கூடாது. எப்படியாவது காசிநாத் சௌத்ரியைக் கண்டு பேசி, அந்த மனையை நாம் வாங்கிவிடவேண்டும்!" என்றார் நிகிலநாத்.

* * *

மறுநாள் காலை. காசிநாத் தன் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்தான். அப்போது விசுவநாத் சகோதரர்கள் அங்கு வந்தனர்.

"பாபூஜி! வரவேண்டும், வரவேண்டும்" என மலர்ச்சியோடு வரவேற்றான் காசிநாத்.

"என்ன காசிநாத், சௌக்கியமா? சாகுபடியெல்லாம் எப்படி?" என்று மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தனர் வந்தவர்கள்.

"ஏதோ உங்களைப்போன்றவர்களின் தயவினாலே சுகத்திற்குக் குறைவு இல்லை!"

"ஆமாம் காசிநாத்! ஊர்க்கோடியிலிருக்கும் உனது காலி மனையை விற்கப் போவதாக ஏதேனும் உத்தேசம் உண்டோ?" என்று பெரியவனான நிகிலநாத் விஷயத்தைப் பிரஸ்தாபித்தான்.

"இல்லை பாபு! எனக்கு அதை விற்கவேண்டுமென்று அவசியமில்லை. ஆனால் ஒருசமயம் விற்பதாக இருந்தால் உங்கள் சித்தப்பா சிவானந்த பட்டாச்சாரியாருக்கே கொடுப்பதாக வாக்களித்திருந்தேன்" என்றான்.

"எப்போதோதானே சொன்னாய்! இப்போது நாங்கள் வாங்க உத்தேசித்துள்ளோம். எங்களுக்கு விற்றுவிடேன்!" என்று சொல்லிவிட்டு, விசுவநாத பட்டாச்சாரி காசிநாத்தை ஒரு முறை ஏற இறங்கப்பார்த்தார்.

"இல்லை பாபூ! என்னுடைய எஜமானராகிய அவரைக்கேட்காமல் நான் எப்படி விற்கமுடியும்? மேலும் அப்படிக் கொடுப்பதாக இருந்தால்கூட அவருக்கே விலைக்குத் தருவதாக வாக்களித்துவிட்டேன்."

"காசிநாத்! எஜமானர்! ஹும்! எங்கள் தந்தை உனக்கு எவ்வளவோ உதவிகள் செய்ததில்லையா? அவர் உன் எஜமானர் இல்லையா? அதற்குள் நீ மறந்துவிட்டாய்போலும். போகட்டும், உன் மனைக்கு நாங்கள் நானூறு ரூபாய் தரத் தயாராக இருக்கிறோம். அதை எங்களுக்கே விற்றுவிடு!"

"உங்களுடைய தந்தையினால் நான் எவ்வளவோ உதவிகள் பெற்றிருக்கிறேன். அவைகளை நான் எளிதில் மறக்க முடியுமா? ஆனால் அவருக்கு அடுத்தபடியாக அவரது தம்பி சிபு



பட்டாச்சாரிதான் எனது எஜமானர். பெரியவராகிய அவருடைய சொல்லுக்குமறு வார்த்தை நான் பேசுவது பெரிய குற்றமாகும். எனக்குப் பணம் பெரிதல்ல, பாபூஜி, என்னை மன்னித்துவிடுங்கள்!'' என்று கூறும்போது உணர்ச்சியினால் அவன் நா தழ தழுத்தது.

“பெரிய அரிச்சந்திரன்தான்! காசிநாத்; சுளையாக நாங்கள் ஐநூறு ரூபாய் தருகிறோம். இன்னும் வேண்டுமானாலும் பத்துரூபாய் எடுத்துக்கொள். இந்தா, இப்போதே சென்று பத்திரத்தை எழுதி முடித்து எங்கள் பேருக்கு மனையை மாற்றிவிடலாம்!'' என்று துரிதப்படுத்தினான்.

“பாபூஜி! என்னை நீங்கள் மிகவும் கேவலமாக நினைத்துவிட்டீர்கள்! பணத்திற்கு மசியும் பதரல்ல நான். கடைசி முறையாகச் சொல்லுகிறேன், நான் தின்பது சிபு பட்டாச்சாரியின் உப்பு. அவருக்கு ஒரு காலத்திலும் நான் துரோகம் செய்ய முடியாது. அவருடைய உத்தரவின்றி என் மனையை விற்பது என்பது இயலாத காரியம்!'' இதைக் கூறும்போது அவன் வார்த்தைகளில் அலாதி எஜமான விசுவாசமும், உறுதியும் பிரதிபலித்தன.

ருத்ர மூர்த்தியாக மாறின நிகிலநாத் படபடக்க ஆரம்பித்தார். “காசிநாத்! அல்ப நாயே! இன்றைக்கு கையில் கொஞ்சம் காசு சேர்ந்த திமிரில் நீ உன்னை மறந்து பேசுகிறாய். இருக்கட்டும்; உன்னிடம் வந்து நாங்கள் கேட்டதே எங்களுக்கு இழுக்கு. ஆனால், ஒன்று நினைவில் இருக்கட்டும். இந்த விசுவநாத் சகோதரர்கள் ஒன்றை மனதில் வைத்தால், அதை நடத்தியே தீருவார்கள்! உன் குடும்பத்தை சீக்கிரத்தில் சீரழித்து நிர்மூலமாக்கிவிடுகிறோம், பார்!'' என்று வார்த்தைகளைப் பொரிந்து தள்ளிவிட்டு, ஆவேசம் வந்தவர்போல் வெளியேறினார். கோபாக்கிரந்தர்களாய் வெளிச்செல்லும் சகோதரர்களை எவ்விதம் சமாதானம் செய்வது என்று தெரியாமல் வாயடைத்து நின்றான் ஏழைக் காசிநாத்.

* * * *

இதற்குப் பிறகு விசுவநாத் சகோதரர்கள் நட்ட விஷவித்து ஒருநொடியில் வளர்ந்து விஷ விருக்ஷமாகியது. சிபு பட்டாச்சாரி காசிநாத்தின் வீட்டெதிரியில் வண்டியில் வந்து இறங்கினார். கோபத்தால் அவரது சிவந்த மேனி நடு நடுங்கிக் கொண்டிருந்தது. அவரது அகன்ற கண்கள் கோவைப் பழம்போல் சிவந்து காணப்பட்டன. அவரது நரைத்த சிகையோ அவிழ்ந்து தொங்கியது.

“காசிநாத்!'' என்று கர்ஜித்தார் சிபு பாபு.

வினயத்துடன் அவர் எதிரில் வந்து கைகூப்பி நின்றான். “துரோகி! என் உப்பைத் தின்று எனக்கே துரோகம் செய்யத்துணிந்துவிட்டாய், உன்னை என்ன செய்கிறேன் பார்!''

“பாபூஜீ! தாங்கள் சொல்லுவது எனக்கு முற்றும் புதிராக இருக்கிறது. தயவுசெய்து விளங்கச் சொல்லுங்கள்'' என்று பணிவுடன் வேண்டினான்.

“என்னவா? எனக்கு வாக்களித்ததை மறந்து நீ என்னமாக அந்தக்காலி மனையை விசுவநாத் சகோதரர்களுக்கு விற்கலாம்? காசிநாத், நீ இந்த சிவானந்தபட்டாச்சாரியின் வலிமையை அறியாயோ?'' என்று கூறியபோது அவரது சிவந்த கண்களில் இன்னும் சிவப்பேறின.

“பாபூஜி, தாங்கள் உண்மையறியாது பேசுகிறீர்கள். உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைப்பது எங்கள் வம்சத்திலேயே கிடையாது. நான் ஒருவருக்குமே மனையை விற்கவில்லை. இது வீண் புரளி, எஜமான்; உங்களுக்குத் தெரியாமல் இந்த ஏழை அதை விற்க முயற்சிக்குமா? இதைத் தீர விசாரியுங்கள்!''

“காசிநாத்; யாரிடம் இந்தக் கதையெல்லாம்! நீ விசுவநாத் சகோதரர்களுக்கு விற்றுவிட ஒப்புக்கொண்டு நூறு ரூபாய் முன் பணம் வாங்கிக்கொண்டு பத்திரத்தில் கையொப்பம் போட்டுக்கொடுத்துவிட்டது, பொய்யா? எது எப்படி இருந்தாலும் சரி; காசிநாத்! ஒன்றுமட்டும் உறுதி. இந்தக் கிராமத்தில் சிவானந்த பட்டாச்சாரியை விரோதித்துக் கொள்ளுபவர்கள் ஒரு நிமிஷம் கூட மனச்சாந்தியுடன் இருக்க முடியாது என்பதை ஞாபகம் வைத்துக்கொள்!'' என்று ஆக்ரோஷத்துடன் முஷ்டியை மடக்கிக்கொண்டு கத்திவிட்டு மீண்டும் திரும்பிக்

கூடப் பார்க்காமல் வேகமாக நடந்தார்.

"ஐயோ, இது என்ன அபாண்டம்?" என்று தலையில் அடித்துக்கொண்டு அப்படியே பல நிமிடங்கள் ஸ்தம்பித்து நின்றான் காசிநாத்.

இதுகாறும் நடைபெற்ற சம்பவங்களை உள்ளே நின்று கவனித்துக்கொண்டிருந்த காசிநாத்தின் மனைவி சாவித்திரி, திகைத்து நிற்கும் கணவனை சமாதானம் செய்ய ஆரம்பித்தாள்.

"சாவித்திரி; இது விசுவனுத் சகோதரர்களின் விஷமத்தனம். சிபு பாபுவின் விரோதியாக ஒரு நிமிஷம்கூட இந்தக் கிராமத்தில் அமைதியாக இருக்க முடியாது. இன்று ஆரம்பித்திருக்கும் புயல் எத்தகைய நாசத்தில் கொண்டுவிடுமோ?" என்று புலம்பினான்.

"நீங்கள் மனதைக் கவலைக்குட்படுத்தாதீர்கள். நியாயம் நம் பக்கத்தில்தான் இருக்கிறது. என்ருவது ஒருநாள் சிபு பாபுஜி தன் தவறை உணராமல் போகமாட்டார்!" என்று தேறுதல் கூறினான்.

* * *

அமைதியாகக் கழிந்த ஒரு வாரத்திற்குப் பின்னர் ஓர் தினம். காசிநாத்தின் மகன் கைலாஸ் பலமாக ஓலமிட்டுக்கொண்டே வீட்டினுள் ஓடி வந்தான். முகமெல்லாம் வீங்கிக் காணப்பட்டது. ஆடையற்றுக் காணப்பட்ட முதுகின் மேல் ஆங்காங்கு அடிபட்ட சின்னங்கள் தென்பட்டன. பரபரப்புடன் சாவித்திரி கேட்ட கேள்விகளுக்கு விக்கல்களுக்கு ஊடே பதில் சொல்ல ஆரம்பித்தான்.

"அம்மா! நானும் என் சிநேகிதர்களும் சிபு பாபுவின் மாந்தோப்பில் விளையாடிக்கொண்டிருந்தோம். நான் ஒன்றுமே செய்யவில்லை. சுந்தர்தான் மாங்காய்களை உதிர்க்க ஆரம்பித்தான். ஆனால் சிபு பாபு அவனை ஒன்றும் செய்யாமல் என்னைத்தான் நன்ருக அடித்து விட்டாரம்மா!" என்று சொல்லிவிட்டு தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான்.

'ஐயோ, பணமிருந்தால் நியாயம்கூட மறைந்துவிடுமா? கண் மண் தெரியாமல் சிறு குழந்தையை இவ்வாறு அடிப்பது?" என்று தாய்மை உள்ளம் கொதிக்க, அடித்த கைகளை சபிக்கஆரம்பித்தாள்.

அன்று பூராவும் கைலாசத்திற்கு நல்ல ஜுரம். சாவித்திரியோ மகனின் நிலைமையைக் கண்டு மனம் கலங்கி அழுதுகொண்டிருந்தாள். இருள் சூழ்ந்த அந்த அறையின் ஒரு மூலையில் முடங்கிக் கிடந்த காசிநாத்தின் கண்கள் கவலையினுல் இமைகள் மூட மறுத்தன.

விடியற்காலம் ஐந்து மணி சுமாருக்கு காசிநாத் வீட்டின் கதவுகளை யாரோ 'தட தட' வென்று தட்டினர். காசிநாத் கதவைத் திறந்து பார்த்தான். பொழுது புலராத அவ்வேளையில் இரு போலீஸ் ஜவான்களை தன் வீட்டின் எதிரே கண்டவுடன் காசிநாத் திகைத்துவிட்டான்.

முதல் நாளிரவு சிபு பட்டாச் நடைபெற்ற சாரியாவீட்டில் திருட்டு சம்பந்தமாக காசிநாத்தை 'அரெஸ்ட்' செய்வதற்காகத்தான் அவர்கள் வந்திருக்கிருர்கள் என்ற சேதியைக் கேள்விப்பட்டவுடன் சாவித்திரி 'ஓ' வென்று கூக்குரலிட்டு அழ ஆரம்பித்துவிட்டாள். 'தான் நிரபராதி' என்பதை எவ்வளவோ தடவைகள் எடுத்துக்கூறியும் அந்த முரட்டு ஜவான்கள் தங்கள் காதுகளில் போட்டுக்கொள்ளவில்லை. ஏழை சொல் அம்பலத்தில் ஏறுமா? கிராமத்தின் சர்வாதிகாரியாகிய சிபு பட்டாச்சாரிக்கு மறுசொல் பேசுபவர் யார்? அவர் ஒருவனை நாசப்படுத்த நினைத்தால் அது நடந்தேதீரும். இந்நிலையில் காசிநாத் நான்கு மாத சிறைத்தண்டனை பெற்றதில் ஆச்சரியமில்லையல்லவா?

—

அந்த நான்குமாத காலத்தில் காசிநாத் பட்ட கஷ்டங்கள் இவ்வளவு அவ்வளவு அல்ல. சதா மனைவியையும், மகனையும் பற்றியே எண்ணிக்கொண்டிருந்த அவன் கடைசியில் விடுதலை அடைந்தபோது விவரிக்க முடியாத ஆவலோடு வீட்டிற்கு வந்துகொண்டிருந்தான், வெகுவேகமாக.

வீட்டை அவன் அணுகிய போது கைலாஸ் வாசலில் விளையாடிக்கொண்டிருந்தான். தந்தையைக் கண்ட தனயன், 'அப்பா!' என்று கட்டிக்கொண்டான். ஆசையோடு அவனைத் தழுவிய காசிநாத்தின் கண்கள் நீரைப் பெருக்கின. உள்ளே ரொட்டி தயாரித்துக்



கொண்டிருந்த காசிநாத்தின் கிழத்தாய் ஆரவாரத்தைக்கேட்டு வெளியே வந்தாள், "அப்பா, மகனே! வந்தாயா?" என நாத் தழு தழுதழுக்கக் கூறினாள். கண்ணீர் அவளது சுருங்கிய கன்னத்தில் விழுந்து உருண்டோடியது.

"அம்மா, சாவித்திரி எங்கே?" என்றான், ஆதுரத்தோடு.

"மகனே, தெரியுமா? சிபு பட்டாச்சாரியின் சம்சாரம் போனவாரம் அம்மைபோட்டு இறந்துவிட்டாள். அவரது ஒரே மகனுக்கு இவ்வாரம் வைசூரி கண்டு நிலைமை மோசமாக இருக்கின்றது! உதவிக்கு ஒருவருமில்லாததால், சாவித்திரிதான் அவர் மகனைக் கவனித்துக்கொள்ளப் போயிருக்கிறாள்.

"என்ன, சிபு பட்டாச்சாரியார் வீட்டிற்கா? அவர் செய்த மகத்தான தீங்குகளையெல்லாம் இதற்குள்ளாகவா மறந்துவிட்டீர்கள்!" அவன் உதடுகள் துடி துடித்தன.

"காசி, பதறாதே! அதுதானப்பா ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் உள்ள வித்தியாசம். ஏழைகளின் மனம் எளிதில் உருகக்கூடியது. எதிராளிக்குக் கஷ்டங்கள் வந்தபோது கல்லாகி உறையும் உள்ளம் படைத்தவர்களல்ல அவர்கள். அந்தத்தன்மை பணக்காரர்களுக்குத்தானப்பா. ஆனால் சிபு பாபு செய்த தீங்குகளுக்கெல்லாம் கடவுளே அவருக்குத் தண்டனை அளித்துவிட்டார். மூன்று மாத காலத்திற்குள் அந்தக் குடும்பத்தில்தான் எவ்வளவு மாறுதல்! பட்டாச்சாரியாரை அடையாளம் கண்டுபிடிப்பதுகூட சிரமம். ஆள் அரை மனிதர் ஆகிவிட்டாரப்பா!" என்று கிழவி சொல்லி முடிக்குமுன் வாசலிலே ஏதோ அரவம் கேட்டது.

உணர்ச்சியின் உருவமாய் ஓடிவந்த சாவித்திரி காசிநாத்தின் காலடியில் வீழ்ந்து நமஸ்கரித்தாள். பின்னாலேயே வந்துகொண்டிருந்த சிபு பட்டாச்சாரியார் ஆவேசம் வந்தவர்போல் காசிநாத்தின் கால்களை, பற்றிக்கொண்டு "காசி, நீயே மனித தெய்வம், அன்புதான் இறுதியில் வென்றது. விசுவநாத் சகோதரர்கள் புனைந்திட்ட பொய்யை அப்படியே நம்பி உன்னை நிர்மூலமாக்க நினைத்தேன். கடைசியில் நான்தான் நிர்மூலமாக்கப்பட்டேன். காசி, நான் செய்த தீங்குகளையெல்லாம் மறந்து உன் மனைவியும், தாயும் என் மகனை காலன்வாயினின்று மீட்டனர். உங்கள் பெருந்தன்மையான குணங்களை அறியாத பாவியானேன், என்னை மன்னித்துவிடு; மன்னித்துவிடு!" என்று புலம்பினார். அவரது கண்கள் நீரால் நிறைந்தன. தனது எஜமானனின் பழைய அன்பை அடைந்து விட்டோம் என்ற பூரிப்பால் காசிநாத்தின் கண்களும் ஆனந்தக் கண்ணீரால் நிறைந்தன.



மெய்விளங்கிய அன்பர்கள்

பெரியபுராணப்பூங்கோயிலில்

பி.ஸ்ரீ.

‘கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்’ என்ற ஒரு சட்டமானது, ஹிம்ஸை நெறி தனியரசு புரிந்த காலத்தில் நிலவியது. பழிக்குப்பழி வாங்கும் முறையில் சட்டம், ஒழுங்கு, நீதிமுறை தெரியாத அநாகரிகமக்கள் கையாண்டு வந்த சட்டம் அது. ‘ஒரு கண்ணுக்கு இரண்டு கண், ஒரு பல்லுக்கு இரண்டு பல்’ என்று பழி வாங்கியவர்களும் உண்டு. இப்படியெல்லாம் பழிக்குப்பழி வாங்கும் சுபாவம் சட்டம் பேசும் இந்த நாகரிக காலத்திலும் இல்லையென்று சொல்ல முடியுமா?

தியாக புத்தியுள்ளவர்களோ, ஒருவனுக்குப் பயன்படுமானால் கண்ணையும் கொடுத்து உதவ வேண்டும் என்பர். ஒரு காலத்தில் இரத்தம் பொழிந்த கண்ணைக் காப்பாற்ற ஒருவர் தம்முடைய கண்ணையே தோண்டி மருந்தாக அப்பி உதவினாராம். இதுதான் பிரசித்திபெற்ற **கண்ணப்பநாயனார்** கதை. கண்ணப்பர் வேடர் குலத்தினர் என்பதை நினைத்துப்பார்க்கும்போது, இக்கதையில் மக்களை நெறிப்படுத்தும் தியாக ‘எவெரெஸ்டு’களில் ஒன்றைக் கண்டுகொள்ளலாம்.

சரி; ஒரு கண்ணைத்தோண்டி, இரத்தம் பொழியும் கண்ணில் வைத்ததும், அந்த இரத்தம் நின்றதைக் கண்டாராம் வேடர். உடனே மரணத்திற்கும் எப்படிப்பட்ட துன்பத்திற்கும் அஞ்சாத திட சங்கற்பத்தோடு தம்முடைய மற்றைக் கண்ணையும் தோண்ட வேண்டுமென்று அம்பை ஊன்றி விடுகிறாராம். ஏன்? மற்றைக் கண்ணிலும் இரத்தம் கண்டார். சரி, சரி, மருந்தைத்தான் ஏற்கெனவே கண்டுபிடித்துவிட்டாரல்லவா? இது கண்ணப்பர் கதையில் தியாக சிகரம்.

பக்திக்கதையானதால் பரமனும் வரவேண்டியது தானே? அம்பை ஊன்றியதும் பளிச்சென்று ஒரு குரல் கேட்கிறது. ‘நில்லு கண்ணப்பா! என்று ஒரு தடவையல்ல, ‘நில்லு கண்ணப்பா! நில்லு கண்ணப்பா! நில்லு கண்ணப்பா!, என்று மும்முறை

20

பக்தி-வேட்டை

★

முழங்குகிறது, கோவில் மணி முழங்குவதுபோல. ‘என் அன்புள்ள மகனே!’ என்று அழைக்கிறது உலக பிதாவின், அன்பும் இன்பமும் கலந்து இழைத்தது போன்ற, குரல். அதே சமயம் சிவலிங்கத்திலிருந்து தோன்றிய கை—சிவலிங்கப்பெருமானின் சோதனைதானே இது!— கண்ணப்பர் கையையும் அம்பையும் பிடித்துக்கொள்கிறது. இப்படி அகப்பட்டுக்கொண்டு கைமீதும், அம்புமீதும், பிடித்துக்கொண்ட கைமீதும், பூமழை பொழிகின்றன வானவர்கைகள், இத்தகைய பக்தியும் தியாகமும் அருளும் நீடூழி வாழவேண்டுமென்று!

இந்தக் கதைப்பகுதியை எவ்வளவு சுவாரசியமாக நடத்திக் காட்டுகிறது **கண்ணப்பதேவர் மறம்** என்ற அருமையான சிறு பிரபந்தம்! அந்தச் செய்யுட் பகுதியைக் கேளுங்கள்:

> மற்றைக் கண்ணிலும் வடிக்கணை
> மடுத்தனன்; மடுத்தலும்
> ‘நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப!
> என் அன்புடைத் தோன்றல்!
> நில்லு கண் ணப்ப!’ என்(று)
> இன்னுரை அதனொடும்,
> எழிற்சிவ லிங்கம்
> தன்னிடைப் பிறந்த
> தடமலர்க் கையால்,
> அன்னவன் தன்கை
> அம்பொடும் அகப்படப் பிடித்
> தருளினன்; அருளலும்,
> விண்மிசை வானவர்
> மலர் மழை பொழிந்தனர்!

[வடிக்கணை— கூர்மையான அம்பு. மடுத்தனன்— சேர்த்தான். தோன்றல்-மகனே. இன்னுரை— இனியசொல். எழில்—அழகு. தடமலர்க்கை—பெரிய மலர் போன்ற கை. விண்மிசை—ஆகாசத்திலுள்ள.]

கேட்டுப் பார்த்தீர்களா? ஆம், பார்க்கவும் செய்தீர்கள், விஷய கௌரவத்திற்கு ஏற்ற கம்பீர நடையில் கதையின் ஸாரமான காட்சியை இனி, பெரியபுராணத்திலே இந்தக்கண்ணப்ப நாயனாரைத் தரிசிப்போம்.

* * * * *

வேடர்கள் நிறைந்த ஒரு மலை நாட்டில் **உடுப்பூர்** ஒரு பெரிய ஊர். அந்த மலை வளத்தையும் அங்குள்ள பூஞ்சோலைகளையும் நீர் நிலைகளையும், முத்துக்களைக் கொழித்துக் கொட்டுவதுபோல் பொழியும் அருவிகளையும் கண்டால் நாவலரும் பாவலராகி விடுவார்கள். ஆனால் வில்லின் கல்வி தவிர அங்கே வேறு கல்விதான் இல்லையே!

யானைக் கொம்புகளால் அமைந்த மதில்போல், வேடர்கள் அப்பழம்பதியைச் சுற்றி, தொடர்வேலி வளைந்திருக்கிறார்கள். வளைந்த காதும் தொங்கிய நாக்குமாய் நாய்கள் விளாமரக் கொம்புகளில் கட்டப்பட்டிருக்கின்றன. பக்கத்தில் நீண்ட வலைகள் தொங்குகின்றன.

காட்டுப்பன்றி, காட்டுப் பசு, புலி, கரடி, மான் இவைகளின் ‘பார்வை மிருக’ங்களையும் அருகே காணலாம். அதாவது, உண்மையான மிருகங்கள் அல்ல. மேலே சொன்ன மிருகங்களைப்போல் அவற்றின் தோல்களைக்கொண்டு செயற்கையாகச் செய்துவைத்திருக்கிறார்கள். ‘மிருகம் காட்டி மிருகம் பிடிக்கலாம்’ என்ற அனுபவ அறிவைக்கொண்டு ‘பார்வை மிருக’ங்களைக் காட்டிக் காட்டு மிருகங்களைப்பிடிப்பார்கள்.

மலையில் விளையும் ஒருவகை நெல்லைத் தங்கள் குடிசைகளுக்கு அருகேயுள்ள பாறைகளில் உலர்த்தியிருக்கிறார்கள். ஒருபக்கத்திலே எண்ணெய் கண்டறியாமல் வெப்பத்தால் உலர்ந்து சுண்டிப்போன ரோமங்களையுடையவர்களும், நன்றாய் முளையாத தலைமயிர் உள்ளவர்களுமான வேடப்பிள்ளைகள் யானைக்குட்டிபோலவும், புலிக்குட்டிபோலவும் தோன்றும் பிள்ளைகள் முதியவர் பிடித்துவந்திருக்கும் புலிக்குட்டிகளோடும் யானைக்குட்டிகளோடும் தோழமைபூண்டு உத்ஸாகமாய் விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். வேறொரு பக்கம் வேடச்சிறுமிகள், தினை முதலிய

உணவுகளை ஊட்டிப் பெண்மான்களுடன் விளையாடுகிறார்கள். இப்பெண்களைக் கண்டதும் 'இனம் தான்' என்று கருதியதுபோல் அம்மான்கள் துள்ளி வருகின்றனவாம்.

இன்னொரு பக்கத்தில் முதியவர்களான வேடர்கூட்டம். எப்போதும் ஆயுதபாணிகள். சொல்லாடும்போதும், பெரும்பாலும் கொல், எறிகுத்து!' என்ற சொற்களையே பிரயோகிக்கிறார்கள் ஆயுதங்களை ஜண ஜணவென்று பிரயோகிப்பதுபோல. இடையிடையே உடுக்கை அடிக்கிறார்கள், கொம்புகளை ஊதுகிறார்கள்; பறையறைகிறார்கள்.

அந்த வேடர்களைச் சேக்கிழார், 'அதோ பாருங்கள்' என்று நமக்கும் அடையாளம் காட்டுகிறார்:

மைச்செறிந்(து) அனைய மேனி
வன்தொழில் மறவர், தம்பால்
அச்சமும் அருளும் என்றும்
அடைவிலார், உடைவன் தோலார்.

[மை செறிந்து அனைய—மைக் குழம்பு திரண்டாற் போன்ற. தம்பால்—தம்மிடம். உடைவன் தோலார்—முரட்டுத்தோலை உடையாகக் கொண்டவர்கள்.]

அச்சமும் அருளும் தெரியாத கல்வி!—நஞ்சுபூசிய அம்புகளைக் குறிதவறாது போடும் பயிற்சி! மலைத்தேனும் ஊன் சோறும் ஊட்டி வளர்த்த பரம்பரை. இது கண்ணப்பநாயனார் சூழ்நிலை.

இவ்வேடர், கூட்டத்தின் தலைவனுக்கு நாகன் என்றுபெயர். செயலிலும், 'படை நடுங்கும்' பாம்பு! 'பிறப்பின் சார்பால்—குற்றமே குணமா வாழ்வான், கொடுமையே தலை நின்றுள்ளான்!' என்று கௌரவிக்கிறார் ஆசிரியர் 'மாட்சிமை தங்கிய' இந்த வேட மன்னனை.

சிங்கம்போன்ற இவனுக்கு, 'கிளி' என்று பொருள்படும் 'தத்தை' என்ற பெயர் வாய்ந்த ஓர் அருமை மனைவி வாய்த்திருக்கிறாள். பெயர்தான் தத்தை: ஆளைப்பார்த்தால் பயங்கரமான பெண்சிங்கம் போலே!—என்கிறார் சேக்கிழார். எனினும் இந்தச் சிங்கி அந்தச் சிங்கனுக்கு வாய்த்த கிளி!—ராஜாவுக்கு இசைந்த ராணி!

இவளும் இவனைப்போல், பழமையான வேளர் வகுப்பிலும் மிகப் பழமையான குடியில் வந்தவள். பெரிய புலிப்பல் கோத்த தாலியின் சங்கு மணிகளைக் கோத்துப் பிடரியில் அலையும்படி பூண்டிருக்கிறாள். மயில்பீலிகளும் தழைகளும் இலைகளும் ஒரு மாலையாகத் தொடுத்துத் தன் தலைமுடியில் கட்டிக் கொண்டிருக்கிறாள். இந்தத் தத்தையும் அந்த நாகனும் கண்ணப்ப நாயனாரின் தாய்தந்தையர். நம்ப முடிகிறதா?

இவர்கள் நெடுங்காலம் புத்திரப்பேறு இல்லாமல் வருந்தினார்களாம். மலைக்கடவுளாகிய முருகனுடைய சந்நிதானத்திலே சேவற்கோழிகளும், மயில்களும் விட்டு, தோரணம் தூக்கிக் கடம்பமாலைகள் தொங்கவிட்டு விழாக்கொண்டாடி, கைகோத்துக் குரவைக் கூத்தும் ஆடினார்கள். இந்த வழிபாட்டுக்குப்பின் நாகனுக்கும் தத்தைக்கும் குழந்தை பிறந்தது.

ஆண் குழந்தையென்று தெரிந்ததும் தனக்கு 'வாரிசு' கிடைத்துவிட்டதென்று மகிழ்ந்துபோன நாகன், குழந்தையைப் பார்க்க ஓடிவந்தான். தங்களுக்கு 'குட்டி மகராசா' தோன்றிவிட்டார் என்று வேடர்கள் பெருவிழா எடுத்துப் பெருமகிழ்ச்சியடைந்திருக்க, அந்தக் கூட்டத்தை விலக்கிக்கொண்டு வந்து சேர்ந்த நாகனிடம் குழந்தையைக் கொடுத்தார்கள். அவனும் புதல்வனை எடுத்துக்கொண்டான். இந்தச் செய்தியைச் சேக்கிழாரும் பெருமகிழ்ச்சியுடன் அறிவிக்கிறார்:

கருவரை காள மேகம்
ஏந்திய தென்னத், தாதை
பொருவரைத் தோள்கள் ஆரப்
புதல்வனை எடுத்துக்
கொண்டான்.

[கருவரை—கரிய மலை. காளமேகம்—கரியமேகம். தாதை—தந்தை. வரைத் தோள்கள்—மலைபோன்ற தோள்கள்.]

கரியமலை ஏந்திய காளமேகம் போலத் தோன்றியதெனினும் அந்தக் குழந்தை,

கருங்கதிர் விரிக்கும் மேனிக்
காமரு குழவி

[காமரு—கண்டார் விரும்பும்படியிருந்த. குழவி—குழந்தை.]

என்று சொல்லும்படி கறுப்பிலே ஜொலிப்பாக இருக்கிறதாம்.

'அழகு போதுமா வேடராசர்வுக்கு' என்று எண்ணியதுபோல், நாகன் 'குழந்தையைக் கையிலே ஏந்தி அதன் பலுவையும் குத்துமதிப்பாய்க் கண்டுபிடிப்பது போலப் பார்க்கிறானும். அடே, என் கையும் கடுக்குதடா!, பூரித்துப் போகிறார். திண்ணன் என்றே பெயர் வைத்தால் போகிறது என்று திண்ணென்றிருக்கிறான்!, என்று கர்ஜிக்கிறான். பலுவைக் கண்டுபிடித்ததில் பெயரையும் கண்டுபிடித்தாயிற்று. வேடர்களெல்லாம் ஜயகோஷம் செய்கிறார்கள். வில்லும் கையுமாக நின்று:

அண்ணலைக் கையில் ஏந்தற்(கு)
அருமையால் 'உரிமைப் பேரும்
திண்ணன் என்(று) இயம்பும்'
என்னத் திண்சிலை வேடர் ஆர்த்தார்.

[அண்ணல்—(இங்கே) பெருமையில் சிறந்த குழந்தை. இயம்பும்—சொல்லுங்கள். திண்சிலை—வலிய வில்லினை உடைய. ஆர்த்தார்கள்—ஆரவாரித்தார்கள்.] சடங்கில்லாமல், சாத்திரி இல்லாமல் நாமகரணமும் ஆகிவிட்டது!

வேப்பங்குச்சியைத் துண்டு துண்டாகத் தரித்துச் சங்குமணிகளுடன் கோத்து அரையில் கட்டி, தலையில் இளந்தளிர் சூட்டி அழகு செய்து வளர்க்கிறாள் தாய். புலிநகம் பதித்த நெற்றிச் சுட்டியும் கட்டுகிறாள்—முள்ளம் பன்றியின் முள்ளை அரிந்து அம்முள்ளுடன் புலிப்பல்லும் கோத்து ஒரு மாலையாக்கிக் குழந்தையின் மார்பிலும் தொங்கவிட்டு மகிழ்ந்து போகிறாள். காலுக்குத் தண்டை வேணுமே என்று, யானைக் கொம்பால் அப்படி ஓர் அணியும்செய்து காலில் அணிகிறாள்.

இப்படியெல்லாம் வளரும் திண்ணனார் உரிய காலத்தில் வில்வித்தை கற்றுத் தேர்ச்சி பெறுகிறார். நாளடையில் நாகன் கிழவனாகிறான். வேட்டைகளுக்குத்தான் செல்ல முடியவில்லையென்று தெரிந்ததும் தன் தலைமைப் பதவியைத் திண்ணனாருக்குக் கொடுக்கிறான். திண்ணனார் வேட்டையாடுகிறார்.

இத்தகைய வளர்ச்சியும்பயிற்சியும் பெற்றுவந்த வேடர் பக்த குலஜோதியாகிய கண்ணப்பரான கதை எவ்வளவு அதிசயமானது! இக்கதையின். வளர்ச்சியை அடுத்தவாரம் பார்க்கலாம்.

—

மன்னனை ஆண்ட மங்கை

ஸ்ரீமதி லட்சுமி அம்மாள்

24

விட்ட குறை

1. அரண்மனையில்

'இருவரும் இந்தப் புதிய வழியிலும்கூடக் கை கோத்துச் செல்வோம். செங்கமலம்! செண்பகம்! குஞ்சரம்! நாகவல்லி! வேதவல்லி! கீதவல்லி! உங்களிடமெல்லாம் விடைபெற்றுக்கொள்கிறேன். அமுதவல்லி! ஆனந்தவல்லி! உங்கள் தோழமை எனக்கு எப்போதும் ஆனந்தமாகவே இருந்தது. உங்கள் பெயரே அமுதமாக இருந்தது. மதுரை! இந்த நகரத்தின் பெயர்தான் எவ்வளவு மதுரமாயிருக்கிறது! எனினும் நான் உங்களிடமெல்லாம் விடைபெற்றுக்கொள்ள வேண்டியதுதான்' என்றாள் ராணி பூசுந்தரிதேவி, தன் தோழியர்களை நோக்கி. அவர்கள் கண்ணீரும் கம்பலையுமாயிருந்தார்கள். தேவியும் கண்ணைத் துடைத்துக்கொண்டாள்.

அவள் சொன்னதைக் கவனமாய்க் கேட்டுக்கொண்டே அரசனும் வந்து சேர்ந்தான். 'துறக்கத் துணிந்து விட்டாயா? இன்னும் குழந்தை பராந்தகனைத் துறக்கத்துணிந்துவிட்டாயா?' என்று கேட்டான் அரசன் கண்களில்நீர்ததும்ப. விலகிப்போக முயன்ற தோழிகள் அரசியின் குறிப்பு உணர்ந்து பக்கத்திலேயே நின்றார்கள்.

'மகனுக்கு வயது பதினாறு; ஆனால் நமக்கு எப்போதும் குழந்தைதான். குருகுல வாழ்க்கையில் வருஷக்கணக்காகப் பிரிந்து படித்துக்கொண்டிருந்தான். அந்த ஆண்டுகளெல்லாம் மந்திரி மாறங்காரியிடம் பழகிய அளவிற்கும் நம்முடன் பழகவில்லை. அவருடைய ஆதரவில் இன்னும் வளர்ந்து அரசுபுரிவான் தங்கள் பெயரைக் காப்பாற்றுவான். சிறுவனாயினும் அறிவிலும், பக்தியிலும்கூடப் பெரியவன் போல் என்னையும் பிரமிக்கச் செய்துவிடுகிறான். இனி நம்முடைய புத்திர வாத்ஸல்யம்—ஆசையும் அன்பும், பற்றும் பரிவும் பைத்தியமும்—அவனுக்கு நன்மை செய்வதற்கு மாறாகக் கேடு செய்யவும் கூடும்!'

'பூசுந்தரி! உன் துறவுக் காதல் என்னைப் பிரமிக்கச் செய்கிறது. நானாவது ஐம்பது ஆண்டு தாண்டியவன். போரும் பூசலும் இராஜ்யக்கவலைகளும், இவ்வுலகில் நூறாண்டு வாழ்ந்துவிட்டது போன்ற உணர்ச்சியை உண்டாக்கிவிட்டன. "ஐம்பதாண்டுப் பெருங் கிழவன்" என்று சொல்லும் நிலையை அடைந்துவிட்டேன். நீயோ முப்பதாவது வயதில் இப்போதுதான் அடி வைத்திருக்கிறாய். நான் முதுமையில் வளர்ந்துகொண்டிருப்பதுபோல், நீயோ இளமையில் வளர்ந்துகொண்டிருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. அப்படியிருக்க, உன்னையும் துறக்கச் செய்வது பெருஞ் சுயநலம் என்றே எனக்குத் தோன்றுகிறது'

'நீங்களா துறக்கச் செய்கிறீர்கள்? உங்களுடைய தூய காதல் அல்லவா இம்மதுரையையும் மகனையும் துறக்கச் செய்கிறது?'

'நாம் கைகோத்துக் கருத்து ஒருமித்து மதுரையை ஆண்டு வந்தோம். பாண்டிய ஏகாதிபத்தியத்தின் கோலாகலமாட்சி நம் இருவர் வாயிலாக ஒளி வீசியது, முச்சங்கங்களின் முத்தமிழ் மணம் நம் வாயிலாக நாடெங்கும் கமழ்ந்தது. மதுரையைச் சிறப்பச் செல்வமாக்கினோம். பூமியிலேயே சௌந்தரிய நகரம் இதுதான் என்று மதுரையைச் சிங்காரித்து விட்ட பெருமை ராஜஸிம்மனைக் காட்டிலும் ராணி பூசுந்தரிக்கே உரியது என்பதை நாடும் நகரமும் நன்கறியும். ஆனந்த தீர்த்தரின் செல்வாக்கால் மதுரையின் ஆத்மசம்பத்து அழிந்துபோகுமோ? என்ற அச்சம் ஏற்பட்டதும். நீயே துணிந்து அந்த ஆத்மசம்பத்தை மதுரையின் இழந்த செல்வமாகிவிடாமல் காப்பாற்ற முயன்றாய்' என்று அரசன் விசேஷ உணர்ச்சியுடன் பேசிக்கொண்டே போனான்.

பூசுந்தரி இடைமறித்து, 'எதற்காகத் தாங்கள் இப்படியெல்லாம் என்னைத் தோத்திரம்

செய்கிறீர்கள்? ஏதோ தங்களுடைய காதலையே அரணாகக்கொண்டு சில பணிகள் செய்யத் துணிந்தேன். நாம் கைகோத்துக் கருத்து ஒருமித்துச் செய்த பணிகளே அவை. இனிமேல் தாங்கள் செல்லும் புது வழியிலும் தங்களோடு கை கோத்துச் செல்ல வேண்டியதுதான் எனக்கு ஆசையும் அறமும். அப்படியில்லாவிட்டால் நானே முந்தித் துறவு பூண்டு பெரியாழ்வாரின் சிஷ்யையாவேன்!' என்றாள்.

அரசன் அதற்கு ஒன்றும் பதில்சொல்லவில்லை. கண்களில் நீர் நிறைந்து வழிந்தது. அரசி தொடர்ந்து, 'இருவரும் புதிய வழியிலும் கை கோத்துச் செல்லவேண்டியதுதான் என்று தாங்கள் ஏற்கனவே சொல்லியிருக்கிறீர்கள். மறந்துவிட்டீர்களா?' என்று கேட்டாள்.

'மறதியொன்றும் இல்லை. ஆனால் துறவு மார்க்கத்திலும் காதலர் கைகோத்துச் செல்வதென்றால், அது துறவாகுமா?'

'துறவு மார்க்கம் என்று தான் எப்படிச் சொல்லலாம் பக்திமார்க்கத்தை?

குன்றோடு கொழுமுகில் போல்,
குவளைகள் போல், குரைகடல்போல்
நின்றாடு கணமயில்போல்
நிறமுடைய நெடுமால்

என்று பெரியாழ்வார் வருணிக்கும் பெருமானைக் காதலிப்பவர்களும் துறவிகளா? அந்தப் பெருமானுடைய 'அமுதகீத வலையால் சுருக்குண்டு,

குழலைவென்ற குளிர்வாயினராகிச்
சாதுகோஷ்டியுள் கொள்ளப்படுவாரே

என்று பெரியார் பாடியிருக்கிறாரே, அந்தச் சாதுக்களின் திருக்கூட்டம் எங்கே? வரண்டயர்ந்த பாலைவன நெஞ்சினராய்த் தனித் தனியே வனத்தில் வசிக்கும் துறவிகள் எங்கே?

குடவயிறுபட வாய்க்கடை கூடக்
கோவிந்தன் குழல்கொடு ஊதினபோது,
மடமயில்களொடு மான்பிணைபோல
மங்கைமார்கள் மலர்க்கூந்தல் அவிழ,

ஓடிச் சூழ்ந்துகொண்டார்களே அந்தக் குழலூதும் கோவிந்தனை!—அந்தப் பக்திப் பெருங்காதல் நெறியில் அல்லவா செல்லப்போகிறோம்? நாம் துறவிகளாகப் போவதில்லை, இனிமேல்தான் உண்மையான காதலராவோம்!'

இப்படிப் பூசுந்தரி பிரசங்கிப்பதுபோல் பேசியதும் பாண்டியன் ஆனந்தக் கண்ணீர்சோர 'அந்தப் பக்திக்காதல்—புது நெறியிலும் காதலியாகிய நீதான் வழிகாட்டவேண்டும்!' என்றான். தன் தோழியர்கள் அருகிலிருக்கும்போதே அரசன் அப்படிச் சொன்னது கேட்டு அரசி நாணமடைந்து அமுதவல்லியின் முகத்தை நோக்கினாள். தோழியர்களெல்லாம் கண்ணீர் ததும்ப நின்றார்கள். அப்போது ஒரு சேவகன் ஓடிவந்து கொலு மண்டபத்தில் செல்வநம்பியும் மாறங்காரியும் தளபதி வில்லியும் ஒற்றர் தலைவனான நரஸிம்மனும் காத்திருப்பதாகத் தெரிவித்தான்.

நரஸிம்மனும் அங்கேயிருப்பதாகச் சேவகன் சொன்னது அரசனுக்கும் அரசிக்கும் வியப்பையும் பெருமகிழ்ச்சியையும் ஒருங்கே அளித்தன. 'நீயும் விரைவில் வந்துசேர வேணும்' என்று சொல்லிவிட்டு, அரசன் வெகு விரைவாகக் கொலுமண்டபத்திற்குச் சென்றான்.

2 கொலுமண்டபத்தில்

நரஸிம்மனை அரசன் கண்டதும் அவன் அடிபணிந்து, பன்றி நாட்டிலே கொடும்பை யுத்தத்திற்குப்பின் குழப்ப நிலைமைகளைப் போக்கிச் சமாதானத்தை நிலைநாட்டுவதற்காகவே தானும் ஒற்றர் பலரும் தங்கியிருந்ததாகத் தெரிவித்தான். அவனுடைய சமயோசித புத்தியையும் சாமர்த்தியங்களையும், அமைச்சரோடு சேர்ந்து அரசனும் தளபதியும் செல்வநம்பியும் பெரிதும் பாராட்டினார்கள். அங்கே ஏற்பட்டிருந்த பரிதாப நிலைமையை நரஸிம்மன் எடுத்துரைத்ததும் அவர்களுக்குக் கண்ணீர் வந்துவிட்டது. அந்தப் பன்றிநாட்டின் துயரங்களையெல்லாம் துடைத்து அதையும் பாண்டிநாட்டின் செழிப்பான பகுதியாக்குவதற்கு இன்றியமையாத முயற்சிகளையெல்லாம் விரைவில் மேற்கொள்வதாக மாறங்காரி வாக்களித்த பின்புதான் பாண்டியனின் உள்ளம் ஒருவாறு சமாதானம் அடைந்தது.

பிறகு அரசன் சிங்காசனம் துறப்பதாகவும், தன்மகனுக்காகச் சில ஆண்டுகள் மாறங்காரியே இராஜ்ய நிர்வாகம் நடத்தப்போவதாகவும், வழக்கம்போல் செல்வநம்பி மதுரைச் சிங்காசனத்திற்குப் பக்கபலமாக ஞான அரணாக-இருப்பதாகவும் சொல்லி, செல்வநம்பியின் ஆசியை வேண்டினான்.

அதற்குச் செல்வநம்பி, 'பெரியாழ்வாரின் பிரிய சிஷ்யனாக இங்கேயிருந்து ஆட்சியையும் நடத்திக்கொண்டிருக்கலாமே,' என்று மெள்ளச் சொன்னார்.

அரசனோ உறுதியானகுரலில், 'அது எனக்கு ஒருபோதும் மன அமைதிதராது. நான் நாட்டுக்குச் செய்யவேண்டிய தொண்டுகளை இயன்றவரை செய்தாகிவிட்டது. வில்லி முகுந்தாசாரியரின் குருகுலத்தைப்பற்றி இம்மண்டபத்தில் அன்று பிரஸ்தாபித்ததும், அத்தகைய குரு

குலங்களை நாடெங்கும் ஏற்படுத்துவதற்கும் வேண்டிய ஆரம்ப ஏற்பாடுகளைச் செய்துவிட்டேன். அதனால் பொது ஜனங்கள் திருந்திச் சிறந்த பக்திமான்களாகக்கூடும். இந்தக்காரியத்தைத் துரிதப்படுத்துவதற்கு என்னைக்காட்டிலும் மாறங்காரியே தகுந்தவர். எப்படிபார்த்தாலும் நான் இனி இங்கே இருப்பதில் எனக்கும் நன்மை இல்லை, பிறருக்கும் நன்மையில்லை; என்றான்.

அதற்குச் செல்வநம்பி, 'அப்படியானல் அரசி தங்களை எப்படிப் பிரிந்திருக்கப் போகிறார்?, என்று கேட்டார்.

அதேசமயம் ராணி பூசுந்தரி தேவியும் கொலுமண்டபத்திற்கு வந்துவிட்டாள். செல்வநம்பியின் கேள்வி அவள் காதிலும் விழுந்தது. அவள் தன்னுடைய மனநிலையை உடனே வெளியிட்டு, 'இனி அரசர் இருக்கும் இடமே எனக்கும் மதுரை! இனி வேறுவிதமாக நாங்கள் வாழ முடியாது.

மட்டவிழும் பொழில்புடைசூழ்
மதுரை தன்னில்,
வாதியரை ஈடழித்து
'மறையின் அந்தம்
எட்டெழுத்தே!' எனக்கூறி,
வேதம் நான்கும்
இருந்தபடி எடுத்தோதி,
பன்னர் மன்னன்
கட்டியம்பொற் கிழியறுத்துத்
திருப்பல் லாண்டைக்
கட்டுரைத்துக் கண்ணனுக்குக்
காப்பிட்(டு) ஏத்தும்

பட்டர்பிரானே இனி எங்கள் வாழ்வு; "புதுவை மன்னன்" என்ற பெரியாழ்வாரே எங்கள் மன்னர் என்றாள்.

அவளிடத்திலும் செல்வநம்பி, 'நீங்கள் மதுரையில் இருந்துகொண்டே பக்தர்களாகவும் இருக்கலாமே' என்று சொல்லிப்பார்த்தார். அதற்குப்பூசுந்தரி 'அது மிதிலை ஜனக மன்னருக்குமுடியும்; பாண்டிய மன்னருக்கு முடியுமா?

கூழாட்பட்டு நின்றீர்களை, எங்கள்
குழுவினில் புகுதல் ஒட்டோம்

என்று பெரியாழ்வார் மதுரையில் பகவானைத் தரிசித்துப் பாடவில்லையா? "கூழ் அல்லது சோற்றுக்கு அடிமைப்படுவது" என்பதில் அரசர்களின் போக வாழ்க்கையும் சேர்ந்ததுதானே! இத்தகைய வாழ்வில் இருந்துகொண்டு சாது கோஷ்டியில், பாகவதர் கூட்டத்தில், பிரவேசம் செய்யமுடியுமா? பெரியோராகிய தங்களுக்குத் தெரியாததா? பேதையாகிய என்னைச் சோதிக்காமல் கருணைகூர்ந்து உய்யும் வழியில் சேர்ப்பித்தருளவேண்டும்' என்றாள.

செல்வநம்பி ஆனந்தக்கண்ணீர் பெருகப் பூசுந்தரியின் பக்தியுள்ளத்தைப் பெரிதும் கொண்டாடினர்.

நாஅகாரியம் சொல் இலாதவர் என்கிறபடி அகாரியத்தைச் சொல்லி அறியாத அந்த நாவினால் அவர் வேறு என்னதான் சொல்லமுடியும்? அரசியை நோக்கி வெகு விநயமாய், 'அம்மா! ராஜகாரியம் பார்க்க உம்முடைய புத்திரரத்தினம் இருக்கிறார், மாறங்காரி இருக்கிறார். தேவகாரியம் பார்க்கவேண்டுமென்று துணிந்திருக்கும் உதங்களை நான் தடுக்கத் துணிவேனா? இறைவன் திருவுள்ளம் இனிது நிறைவேறும்' என்றார்.

அப்பால் அரசன் செல்வநம்பி முதலானவர்களை நோக்கி, 'இத்தகைய புரோகித சிரேஷ்டரையும், அமைச்சர் பிரானையும் தளபதியையும் பெற்றிருந்த நாங்கள் பாக்கியசாலிகள். ஏதோ உங்களுடைய உதவியால்தான் ராஜகாரியத்தை ஒருவாறு நிறைவேற்றினேன். இனி தேவகாரியம் நிறைவேறுவதற்கு அற்பக்கருவிகளாக நாங்களும் பயன்படுமாறு நீங்கள் உபகரிக்க வேண்டும்' என்று சொன்னான்.

அப்போது தளபதி வில்லி எழுந்து நின்று, 'நான் தங்கள் ஊழியன்; என்னையும் இந்த இரு பெரியாருடனும் சேர்த்துக் கௌரவிப்பது தகாது' என்றான். உடனே செல்வநம்பி வில்லியை நோக்கி, 'அது என்ன அப்படிச் சொல்கிறீர்கள்? "வில்லிபுத்தூரர்" என்று பெரியாழ்வார் கௌரவிக்கப் பெறும்வரையில் தங்கள் பெயரும் நிலை நிற்குமே! "மல்லிமகன் வில்லி" ஏற்படுத்திய புதிய ஊர்தானே வில்லிபுத்தூர்? விஷ்ணுசித்தரின் தந்தையான முகுந்தாசாரியரின் சீடர் என்ற பெருமைதான் கொஞ்சமோ?' என்றார்.

பிறகு செல்வநம்பி அரசனை நோக்கி, அன்று வில்லி உணர்ச்சி மிகுதியால் பேச்சுத் திணறி "ஆனந்ததீர்த்தர் தமக்குத் தமையனாராகிவிட்ட அந்த அதிசயக் கதையை இப்போது கேட்க வேண்டாம், வேறொரு சமயம் கேளுங்கள்" என்று நம்மிடம் சொன்னாரே.—அந்தக் கதையை இப்போது தெரிந்து கொள்ளலாமா தெரிந்துகொள்ள வேண்டாமா!' என்று கேட்டார்.

அதற்கு அரசன், 'இன்று இங்கே வந்ததும் அந்த இரகசியத்தைக் கூடுமானால் தெரிந்து கொண்டுதான் மற்றப்பேச்சு என்று தீர்மானித்திருந்தேன். நரஸிம்மன் இங்கு வந்ததாகக் கேள்விப்பட்டதும், "மாண்டவன் மீண்ட கதை"போலத் தோன்றியது! பிறகு என்னுடைய சொந்த நலன்கள் "சொல்லு, சொல்லு" என்று உள்ளத்திலே இடிக்கத் தங்களிடம் அவற்றைப் பிரஸ்தாபித்தேன். இப்போது நானே சொல்ல நினைத்ததைத் தாங்களே என்னிடம் சொல்லிவிட்டீர்கள்' என்று சொல்லிக்கொண்டே வில்லி முகத்தை நோக்கினான்.

அரசியும் வில்லியை நோக்கி, 'முகுந்தாசாரியரின் சிடரும் பாகவதருமாகிய தாங்கள்—மன்னிக்க வேணும்—பக்தி மதத்தின் பரமவிரோதியான பௌத்த பிட்சுவுக்குச் சகோதரராக இருக்கும் அதிசயத்தை இப்போதாவது எங்களுக்குத் தெரிவிக்கலாகாதா? தாங்கள் ஏன் இதை இரகசியமாக வைத்திருந்தீர்கள் என்பதை என்னால் இப்போது ஒருவாறு ஊகிக்க முடிகிறது. தங்கள் தமையனுக்கு விரோதமாகப் போர்புரிந்து, யாரும் வியக்கும்முறையில் தங்கள் கடமை யுணர்ச்சியை வெளியிட்டுக் கொண்டீர்கள்!' என்றாள்.

வில்லி மாறங்காரியை நோக்கினான். அவர் அரசனை நோக்கி, 'அன்று கொலு மண்டபத்தில் வில்லியார் "கண்டன்" என்ற அண்ணனைக் குறித்துத்தான் பிரஸ்தாபம் செய்தார். ஞாபகம் இருக்கிறதா? அன்று தாங்கள் எவ்வளவோ கவலையோடு இருந்தீர்கள்' என்றார்.

'இப்போது ஞாபகம் வருகிறது' என்று அரசன் சொன்னதும், அரசி பளிச்சென்று, நான் ஓர் ஊகஞ் செய்யலாமா? மல்லி ராணிக்கு வில்லி கண்டன் என்ற இரு புதல்வர்களைத் தவிர வேறு குழந்தையும் இருந்திருக்கவேண்டும். அந்தப் புதல்வர் அன்னிய மதப்பிரவேசம் செய்துவிட்டதால் இழந்த பிள்ளையை இறந்த பிள்ளையாகவே கருதியிருக்கக்கூடும்' என்றாள்.

அதற்கு அரசன், 'அப்படியானால் கண்டனும் இறந்துபோய்விட்டானே; தந்தையைப் போல் புலிக்கு இரையாகிவிட்டதாய் வில்லியார் சொன்னது நினைவிற்கு வருகிறதே. அப்படி இறந்த பிள்ளையும் பிள்ளையாகப் பிரஸ்தாபிக்காமல் விட்டிருக்கலாமே! ஆகவே உன்னுடைய ஊகம் தவறு' என்றான் ராணியைநோக்கி.

மந்திரி மாறங்காரி, 'நானும் ஓர் ஊகம் செய்து பார்க்கிறேன். அந்தக் கண்டன்தான் இந்த அண்ணன்!' என்றார்.

அரசியோ, 'அப்படியானால் எலும்புகள் அகப்பட்டதாய்ச் சொல்லவில்லையா?' என்று கேட்டாள். அரசனோ, 'அவை மனித எலும்புகள் என்று சொன்னதாகவும் ஞாபகம் வருகிறதே?' என்றான்.

பளிச்சென்று அரசி, 'அந்தக் கண்டன் சாகவில்லை; அந்த எலும்புகள் வேறு யாருடைய எலும்புகளோ!' என்றாள்.

வில்லி சொன்னான்; 'மந்திரியாரும் அரசியாரும் ஊகிப்பது சரிதான். அந்த எலும்புகள் மனித எலும்புகளாயிருந்தபோதிலும் கண்டனுடைய எலும்புகள் அல்ல. ஆனால் நான் கண்டன் இறந்ததாகவே எண்ணியிருந்தேன் நெடுங்காலமாக. சித்தன்ன வாசல்-குகைகளில் வசிக்கும் ஜைன பௌத்த முனிவர்களிடம் போயாவது வேடர்களின் மூர்க்கசுபாவத்தை மறந்து பிள்ளை அஹிம்ஸாதர்ம வாதியாகட்டும் என்ற நினைப்புடன தாயார் அனுப்பிவைத்தாரல்லவா? அந்தக் கண்டன்தான் ஆனந்ததீர்த்தர்!;

இது கேட்டதும் பூசுந்தரிதேவி, 'ஆனால் சித்தன்னவாசலில் கண்டன் அஹிம்ஸா தர்மவாதியாகவில்லையென்று தாங்களே சொன்னீர்களே! சித்தன்ன வாசலுக்குப் போயிருந்த பேர்வழி திரும்பிவந்து தங்கள்மீது பகையும் பொறாமையும் கொண்டு தங்களைக் கொல்லவந்ததாகவும் சொன்னீர்களே' என்று கேட்டாள்.

அதற்கு வில்லி பதில் சொன்னான்: 'என் மீதுள்ள பகைமையாலும், பொறாமையாலும் தான் பக்தி மதத்திற்கு விரோதமாகவும் ஆனந்ததீர்த்தர் அஹிம்ஸைப் பிரசாரம் தொடங்கியிருக்கவேண்டும்! கத்தியோடு என் மீது பாய்ந்து குத்திக் கொல்ல முயல்வது பைத்தியக்காரத்தனம், அஹிம்ஸைக்கும் பொருத்தமில்லை என்று அந்த அஹிம்ஸா தர்மவாதி நினைத்திருக்கவேண்டும்! சேதுவுக்கு நான் அரசர் பிரானுடனும், அமைச்சர் பிரானுடனும் போயிருந்த சமயம், அரசருடனும் அமைச்சருடனும் பேசிக்கொண்டிருந்த ஆனந்ததீர்த்தர் நானும் வந்திருப்பதாகத் தெரிந்துகொண்டதும் வெகு விரைவில் வேறு வேலையிருப்பதாகச் சொல்லிப்போய்விட்டார். அது முதல் ஆனந்த தீர்த்தரைக் குறித்து சந்தேகம் எனக்கு ஏற்பட்டுவிட்டது.'

அரசருக்கும் அந்த நிகழ்ச்சி நினைவிற்கு வந்தது. அரசிக்கும் அரசன் தெரிவித்த அந்தச் செய்தி நினைவிற்கு வந்தது.

அப்போது செல்வநம்பி, 'தங்கள் சந்தேகம் எப்போது நிச்சயமாயிற்று?' என்று கேட்டார். 'தங்கள் ஊரில் இரகசியப்பிரசாரம் செய்யும்போது கண்டுபிடித்துவிட்டேன். இதில் அதிசயமில்லை. ஆனால் என் அண்ணனை நான் கண்டுகொண்டதுபோல் மந்திரியாரும் கண்டுகொண்டதுதான் அதிசயம்' என்றான் வில்லி.

'கோஷ்டியூரில் அஹிம்ஸாதர்மப் பிரசாரம் இரகசியமாக நடக்கும்போதுதான் நானும், நரஸிம்மனும் ஆனந்ததீர்த்தரின் வேஷரகசியத்தைக் கண்டுகொண்டோம். வில்லி அவரை அண்ணனென்று அறிந்துகொண்டதும் சில நிமிஷங்கள் திகைத்துத் திக்பிரமை கொண்டு நின்ருர். அந்தமுகமே அந்த உறவையும் எனக்கு அறிவித்து விட்டது. எனக்குமட்டுமா, நரசிம்மனுக்கும்தான் என்ருர் மந்திரி மாறங்காரி.

'அந்த உறவைத் தெரிந்துகொண்டதுமுதல் ஆனந்த தீர்த்தருக்கு—அவர் என்னைக் கண்டு நடுங்கியபோதிலும்—அபாயம் வராமல் காப்பதும் என் முக்கியமான கடமைகளில் ஒன்று என்பதாக நினைத்து வந்திருக்கிறேன்' என்ருன் நரஸிம்மன்.

இந்தச் சம்பாஷணை அரசனுக்கும், அரசிக்கும் எவ்வளவோ உத்ஸாகம் அளித்தது. பிறகு அவர்களெல்லாம் ஒருமுகமாக ராஜகாரியங்களைப்பேசிச் சில முக்கியமான தீர்மானங்களைச் செய்துகொண்டார்கள். கடைசியாக அரசிளங்குமரன் காத்திருக்கிருன்' என்று மாறங்காரி அறிவிக்க, அரசி விரைந்துபோய்ச் செல்வக் குமரனை அழைத்துக்கொண்டு அரண்மனைக்குள் சென்ருள்.

3 பெரியாழ்வார் நந்தவனத்திலே

மலர்தொடுத்த வண்ணம் பெரியாழ்வார் சீடர்களுக்கு உபதேசம் செய்துகொண்டிருக்கிருர். உபதேசங்களுக்கிடையே,

ஆடி ஆடி அசைந்(து) அசைந்திட்(டு)
அதனுக்கேற்ற கூத்தை ஆடி,
ஓடி ஓடிப் போய்விடாதே!

என்றும்,

எண்ணத்துள் என்றும்
இருந்து தித்திக்கும்
பெருமானே! எங்கள் அமுதே!

என்றும் பாடுகிருர். அப்போது பூசுந்தரி தேவி வந்து காலைத்தொட்டு வணங்கி, 'விட்ட குறை வந்து தொட்டாச்சு!' என்று கூறி,

ஏழையேன் இடரைக்
களையாயே

என்று அப்பெரியாரின் செய்யுளடியைக் கொண்டே தன் விண்ணப்பத்தைத் தெரிவித்துக்கொள்கிருள்.

பெரியாழ்வார் பக்திப்பிரசாரத்தின் அவசியத்தை வற்புறுத்தி,

எங்கள் குழாம் புகுந்து
கூடும் மனமுடையீர்கள்!
வரம்பொழி வந்து
ஒல்லைக் கூடுமினோ?

என்று பாடியதும், ராஜஸிம்ம பாண்டியன் வந்து வணங்கி, 'ஞானச்சுடரே! அருள்புரிய வேண்டும்' என்று வேண்டிக்கொள்கிருன்.

அப்போது பைத்தியம் பிடித்த ஞானப்பிரான் ஹரிலட்சுமி தொடர ஓடிவந்து, மனைவியின் தூண்டுதலால் பெரியாழ்வாரின் காலைப் பிடித்துக்கொள்கிருர். என்ன அதிசயம்! பித்தம் தெளிந்தவர்போல் ஆழ்வாருக்கு எதிரே உட்கார்ந்துகொண்டு,

அடியோமொடும் நின்னொடும்
பிரிவின்றி ஆயிரம்பல்லாண்டு

என்று, மதுரையில் தம் காதிலே விழுந்த அந்தச் செய்யுளடியைப் பாடுகிருர். ஹரிலட்சுமியும் விஷ்ணுசித்தர்காலில் விழுந்து, 'பிறவிநோய் போக்கும் மருத்துவரே! என் கணவரின் பைத்தியத்திற்கும் வைத்தியம் செய்தருளவேணும்' என்று பிரார்த்திக்கிருள்.

பெரியாழ்வார் ஞானப்பிரானின் நெஞ்சிலே கையை வைத்து 'ஞானப்பிரான் இங்கே இருக்கிருன்!' என்று சொல்லி,

மருத்துவனய் நின்ற
மாமணி வண்ணா!

என்று வாய்குளிர அழைக்கிருர். அப்போது

பாததூளி படுதலால், இவ்
உலகம் பாக்கியம்செய்ததே!

என்று சொல்லிக்கொண்டே வயதுமுதிர்ந்த ஒருவர் தள்ளாடிவந்து பெரியாழ்வார் அடிகளைப் பிடித்துக்கொள்கிருர். ஆச்சர்யத்திலும் ஆச்சர்யம்! அவர்தான் ஆனந்ததீர்த்தர்.

'எண்ணுவார் இடரைக் களைவானே! இன்று இந்த ஐந்து மலர்களையும் உனக்கு அர்ப்பணம் செய்கிறேன்' என்கிருர் பெரியாழ்வார்.

முனிசாமி பண்டிதன்

நியாயவாதி

கண்ணபிரான் கீதோபதேசத்தில் கர்மயோகத்தைப்பற்றிக் கூறும்பொழுது "மிக நன்றாக செய்யப்படும் பிறருடைய தர்மத்தைக்காட்டிலும், குணமில்லாத தன் சொந்த தர்மமானது உத்தமமானது" (பகவத்கீதை, அத்தியாயம் 3, ச்லோகம் 35) என்று குறிப்பிடுகிறார் அல்லவா? அதை எண்ணும்பொழுது எனக்கு முனிசாமி பண்டிதனின் ஞாபகம்தான் வருகிறது கர்மயோகத்தை உண்மையிலே அனுஷ்டிப்பவன் அவன்தான்.

ஒரு தொழில் தாழ்ந்ததாயிருப்பினும் அதில் ஈடுபடுபவன் அதை தாழ்ந்தது என்று வெறுக்காமல் தனக்கு ஏற்பட்ட கிரமப்படி அதைச்செய்வானேயாயின் அவன் எப்பொழுதும் போற்றப்படுவதற்கு உரியவன் என்றே சொல்லவேண்டும். அவனது சேவையை பணத்தால் மதிப்பிடும் தன்மையன்று. அவனுக்குக் கிடைக்கும் ஊதியம் மிகவும் சொற்பமேனும், அவனது தொழிலை அற்பமென்று இகழுதல்நியாயமன்று.

பல தலைமுறைகளாக எங்கள் ஊரில் முனிசாமியின் முன்னோர்கள் தொழில் நடத்திவந்துள்ளனர். கடந்த நாற்பது வருடங்களாக முனிசாமியும் ஏகபோக உரிமையுடன் தன் தொழிலை நடத்தி வருகிறான்.

க்ஷவரத்தொழில் செய்பவனுக்குப் பண்டிதன், நாவிதன், என்று பலபெயர்கள் உள்ளன. தெலுங்கில் அவனுக்கு "மங்களவாடு" என்று பெயராம். செவ்வாய்க்கிழமைக்கு மங்களவாரம் என்று பெயர். ஆனால் அன்று யாதொரு சுபகாரியமும் நடைபெறுவதில்லை. அப்படியன்றி சுபகாரியங்கள் பலவற்றில் நாவிதனுக்கு ஒரு இடமுண்டு.

ஸ்ரீராமபிரான் பதினான்கு வருட வனவாஸத்துக்கும், ராவண ஸம்ஹாரத்துக்கும் பின் அயோத்திக்குத்திரும்பினபொழுது கைதேர்ந்த நாவிதர்களைக் கொண்டு அவரது சடைமுடி களையப்பட்டது என்றும் அதற்குப் பின் அவருக்கு மங்கள ஸ்னானம் செய்யப்பட்டது என்றும் வால்மீகி கூறுகிறார். (ராமாயணம் யுத்தகாண்டம் 131-ம் ஸர்க்கம் 13-வது சுலோகம்)

மேற்கண்ட விஷயத்தை நான் முனிசாமியிடம் கூறினபொழுது அவன் அடைந்த பெருமைக்கு அளவேயில்லை.

"பார்த்தீர்களா! எங்களுக்கு நல்ல பெயரேயன்றி கெட்ட பெயர் இல்லை. யாரோ ஒரு வண்ணான் ஸீதையைப் பற்றி இழிவாய்ச் சொன்னான் என்பதற்காக இராமர் அவளை காட்டுக்கு அனுப்பினார் என்று கதையை கேட்டிருக்கிறேன்" என்றான்.

நான், "அது உண்மையன்று. வால்மீகி அப்படி கூறவில்லை. ஸீதையைப் பற்றி அபவாதம் யாரோ கூறுவதாகக் குறிப்பிடுகிறாரேயன்றி வண்ணானுக்கும் அவன் மனைவிக்கும் நேர்ந்ததாகச் சொல்லப்படும் சண்டையை அவரது இதிஹாஸத்தில் கிடையாது" என்றேன். இது நிற்க.



முனிசாமிக்கு வயது ஐம்பத்தைந்து இருக்கும். எனினும் அவனைப் பார்த்தால் நாற்பது வயதினன் என்றே நினைக்கும்படியாய் இருக்கும். சுறுசுறுப்பு, அவன் தலைமயிர் நரைக்கவில்லை. நல்ல கறுப்பு மீசை. கட்டுமஸ்தான சரீரம், முகத்தில் அம்மை வடு. ஆனால் அது அவனை விகாரப்

படுத்தவில்லை. காலையில் ஆறு மணிக்கு அவன் அக்கிரகாரத்துக்குள் வந்துவிடுவான். வீட்டிலேயே பழைய சோற்றை உண்டுவிட்டு, கஞ்சியையும் குடித்துவிட்டு கிளம்பினால் அவன் நடுப்பகல் வரையில் வேலை செய்வதற்கு ஆற்றல் உள்ளவனாய் இருப்பான். காப்பி குடிக்கும் பழக்கம் அவனுக்குக்கிடையாது. கள்ளுக்கடையை அவன் கண்ணெடுத்தும் பார்த்தது கிடையாது. இரண்டும் கெட்டது என்பது அவனது துணிவு.

அவனது கைத்திறத்தை என்னென்று கூறுவது? அவனது திறமையை அனுபவத்தால் உணரலாமேயன்றி, அதை எழுத்தால் வர்ணிப்பது சாத்தியமன்று. பரம்பரையாய் வந்து தேர்ச்சி பலவருடங்களாய் ஏற்பட்ட தொருபுண்யம். கத்திபிடித்த கலைஞன் முனிசாமி. ஆஹா! அவன் க்ஷவரம்செய்ய ஆரம்பித்தால் என்ன இன்பம், என்ன சுகம் தெரியுமா அவனால் க்ஷவரம் செய்யப்படுபவனுக்கு! முனுசாமி கையில் இருப்பது கத்தியென்றே தோன்றாது! அதன் ஸ்பர்சம் புஷ்பம் போல் மென்மையாய் இருக்கும். வலியோ சிரமமோ கொஞ்சம்கூட ஏற்படாது.

க்ஷவரம் செய்யும்பொழுது அவன் ஊர்விஷயம் நாட்டு நடப்பு உலகவர்த்தமானம்எல்லாவற்றையும் விசாரிப்பான். ஏதேனும் சந்தேகம் இருந்தால் அதை தீர்த்துக் கொள்வான். யாராரிடம் என்னென்ன கேட்கவேண்டும் என்பது அவனுக்குத் தெரியும்.

பாங்கி மானேஜரிடம் அவன் தான் அவரது பாங்கியில் போட்டிருக்கும் பணத்திற்கு எவ்வளவு வட்டிகிடைக்கும் என்று கேட்பான். தாலுகா குமாஸ்தாவிடம் தான் விற்ற நெல்லுக்கு உரிய போனஸ் எப்பொழுதுகிடைக்கும் என்று கேட்பான், துணிக்கடைக்காரிடம் மலிவான துணி ஸ்டாக் இருக்கிறதா என்று விசாரிப்பான்.

கிராப்பு தலைகள் பெருகி வருவது அவனுக்குப் பிடிக்கவில்லை. அதனால் க்ஷவரத் தலைக்கே ஆபத்து ஏற்பட்டு விட்டது என்பது அவனது கருத்து. கத்தி வெறும் வெட்டும் ஆயுதம் அன்று. க்ஷவரக்கலை ஒரு நுட்பமான கலை என்பது அவனது சித்தாந்தம். அக்கலையில் தேர்ச்சி பெற்ற அவன் அதை நிரூபித்தும் காட்டிவிட்டான். ஆனால் காலத்தின் போக்கை அனுசரித்து அவன் கிராப் செய்வதையும் கற்றுக் கொண்டான். அதை கற்றுக் கொள்வது அவனுக்கு ஒரு பெரிய காரியமன்று.

க்ஷவரசலூன்களைப்பற்றி அவனுக்கு மதிப்பு அதிகம் இல்லை. வீண்செலவும், ஆடம்பரமும் தவிர சலூன் வைத்து தொழில் நடத்துபவன் என்னமிச்சத்தை கண்டுவிட்டான்? என் கையிலிருக்கும் பணம் அவனிடம் இல்லை என்று அவன் ஒரு சமயம் என்னிடம் கூறியுள்ளான்.

முற்காலத்தில் நாவிதர்களுக்கு வைத்தியமும், ரணசிகிச்சையும் தெரியும். பரம்பரையாய் தொழில் நடத்திய முனுசாமியின் குடும்பத்தாருக்கு சில அபூர்வ வைத்திய முறைகள் தெரியும். என் உறவினர் ஒருவருக்கு முகத்தில் புள்ளிகள் தென்பட்டன. தோலில் ஏதோ கெடுதல் என்று அவர் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சருமவியாதிகள் சிகித்சை இலாகாவுக்குச் சென்று சிகித்சை பெற்றார். இன்ஜெக்ஷன்கள் மருந்துகள், அஞ்சனம், என்னென்னமோ எல்லாம் அவருக்குக் குணத்தைக் கொடுக்கவில்லை. பணம் விரயமானதுதானேயன்றி யாதொரு பயனுமில்லை. கடைசியில் முனுசாமி ஒரு பச்சிலை கொண்டுவந்து அதன் சாற்றை அவரது முகத்தில் தடவினான். என்ன ஆச்சரியம்! மறுகணமே அப்புள்ளிகள் மறைந்துவிட்டன. அவனுக்கு 20 ரூபாய் சன்மானம் கிடைத்தது.

முனுசாமிக்கு ஒரே மகன். வீட்டில் அனாதையாய் வளர்ந்து, அவனது தமக்கை மகளை அவனுக்குக் கட்டிக்கொடுத்திருந்தான். மகன் ஒரு க்ஷவர சலூன் வைக்கவேண்டும் என்று பிடிவாதம் பிடித்தான். முனிசாமி அதற்குச் சம்மதிக்கவில்லை. அதனால் அவன் மகன் அவனுடன் பிணங்கிக் கொண்டு பர்மாவுக்குப் போய் விட்டான். இது யுத்தம் ஆரம்பிப்பதற்கு

சத்வைத்யசாலை நஞ்சன்கூடு

"நஞ்சன்கூடு பல்பொடி"

பாகடெரியின் சிறந்த மருந்துகள்

I. D. L.

குழந்தைகளுக்கு
12 காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
18 கர்ஜன் கோரோஜனை மாத்திரை
15 பாலக்ஸ் பேதியாக மாத்திரை

குடும்ப அவசியங்கள்
99 ஜ்வரேக் எல்லா ஜ்வரங்களுக்கும்
77 காலரெக்ஸ் அஜீர்ண பேதிக்கும், விஷபேதிக்கும் (காலரா)
23 பெமினோ (பெயின பாம) தலைவலி, வாயுபிடிப்பு .....

தினஉதவிகள்
61 நஞ்சன்கூடு பல்பொடி நீ 61. பல் உபாதைகளையும் கண்டிக்க
78 கூலெக்ஸ் உஷ்ண சமன தைலம் } மற்ற மருந்து ஜாபிதாவிற்கு எழுதவும்
55 ஜிஞ்சிப் அஜீரண, பித்த சமனி.

ஸோல் ஏஜெண்டுகள்: யுனைடெட் கன்ஸர்ன், 54. பந்தர் வீதி. மதறாஸ்

காலரா, அஜீர்ண பேதிக்கு, I. D. L. நெ. 77. காலரெக்ஸ் சிறந்த மருந்து. ரூ. 1-8-0 தபாலில் அனுப்ப ரூ. 2-6-0 அனுப்பவும்.

காஷ்மீர்-குஸும் என்ற மலர் மூலிகையை கூந்தல் வளர்ச்சிக்கு எண்ணெயில் கலக்கவும்

M. P. & Eco. ஸான்டலக்ஸ் நறுமண சந்தனக் களிம்பு தீப்புண், வெட்டு, சொறி, பரு, புண்களுக்கு (க்ஷவர உதவி)

M. R. ஜெட்டப்பா அவர்களின் பிரேமலீலா மைசூர் ஊதுவத்திகள் எமார்ஜஸ், அகர், அம்பர்

ஏஜெண்டுகள்: யுனைடெட் கன்ஸர்ன், 54. பந்தர் வீதி. மதறாஸ்.

நம்பிக்கை பெற்ற நஞ்சன்கூடு மருந்துகளை உபயோகிக்கவும்.

டிப்போக்கள்: மதுரை, கோயமுத்தூர், கும்பகோணம், பம்பாய்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கு முன் அதிர்ஷ்டவசமாய் திரும்பி வந்து விட்டான். இப்பொழுது தகப்பனுக்கு அனுசரணையாகவே இருக்கிறான். "சலூன்" ஆசையை முற்றிலும் கைவிட்டுவிட்டான். தனக்குப் பின் தொழிலை தன் மகன் நன்றாய் நடத்துவான் என்ற நம்பிக்கை முனிசாமிக்கு இப்பொழுது முற்றிலும் ஏற்பட்டுள்ளது.

அதோ முனுசாமி வருகிறான். "என்ன எழுதிக்கொண்டிருக்கிறீர்கள், மணி ஒன்பது ஆகி விட்டதே. இப்படி திண்ணைக்கு வாருங்கள். இன்றைக்குப் பண்ணிக் கொள்ளுங்கள் இல்லாவிட்டால் அப்புறம் நான் இல்லை. நாளை வெள்ளிக்கிழமை அடுத்த நாள் துவாதசி அடுத்தநாள் பண்டிகை நாள். அடுத்ததினம் அமாவாசை அப்புறம் செவ்வாய்க் கிழமை, ஒருவாரத்துக்கு க்ஷவரம் பண்ணிக்கமுடியாது. வாருங்கள் என்கிறான் முனுசாமி.

—



சேலம் செவ்வாய்ப்பேட்டை மர வியாபாரி ஸ்ரீ பெ. தான்ருயநாய்க்கரின் குமாரர் சிர. T. மாரிமுத்து B. E., அவர்களுக்கும், செவ்வாய்ப் பேட்டை மளிகை வியாபாரி ஸ்ரீ டி. ராமசாமி நாய்க்கர் குமாரத்தி சௌ. கமலவல்லிக்கும் சேலம் செவ்வாய்ப்பேட்டையில் 5-9-48 ஞாயிறன்று சிறப்பாக விவாஹம் நடைபெற்றது.



பிடில் வித்வான் கும்பகோணம் ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளையின் சிஷ்யரான சிர. பி. கிருஷ்ணசாமிக்கும், காஞ்சிவரம், ஸ்ரீ ஈரோடு-ரங்காச்சாரியாரின் பெண் சௌ. ராஜலக்ஷிமிக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது.



விருதுநகர் பத்திரிகை நிருபர் ஸ்ரீ ஆர். மாரியப்பாவின் சகோதரர் ஸ்ரீ ஆர். தனுஷ்கோடிக்கும், ஸ்ரீ கந்தசாமியின் குமாரி ஸ்ரீமதி மாரியம்மாளுக்கும் சமீபத்தில் திருமணம் நடந்தது. ஸ்ரீ மாரியப்பாவின் குமாரன் சிர. ராமநாதனுக்கு கர்ணபூஷணம் செய்விக்கப்பட்டது.



சமீபத்தில் கொரியாவில் நடந்த சுதந்திர தினக்கொண்டாட்டத்தில் ஜெனரல் மெக்கார்தர் கலந்து கொண்டார். அங்கு வெயில் படுகடுமை. கொரிய யுவனொருவன் மெக்கார்தருக்கு குடைபிடித்து நிற்கிறான்.

ஸாயி - ஜோதிடர்.

உமது எதிர்கால 5 கேள்விகட்கு விவரமாய் பதில் எழுத ரூ. $1\frac{1}{4}$. ஒரு வருடத்திற்கு:—மாதவாரி பலன் ரூ. 3. வாரா வாரி பலன் ரூ. 7. முழு ஆயுட் பலன் ரூ. 10. மேற்படி சுருக்கம் ரூ. 5. வாழ்க்கைச் சித்திரம் ரூ. 2. ஜாதகம் கணிக்க ரூ. 1. லாபம் நஷ்டம், காணுமற்போதல், ஆயுள், லாடரி, ஷேர்மார்க்கெட் காதல்—இவற்றில் ஒன்றைப்பற்றி எதிர்கால பலன் ரூ. 3. ஜாதகம் அல்லது பிறந்த நாள் குறிப்பு அல்லது கடிதம் எழுதும் நேரமும் வயதும் தேவை.

ஸாயி ஆஸ்டிரல் ஸ்டுடியோஸ்,
உறையூர் — திருச்சி.



(மேல்)

ஸிந்து, பகவல்பூர் இவ்விடங்களைச் சேர்ந்த 35 விவசாயக் குடும்பங்களுக்கு டில்லி இந்தியக் கூட்டுறவு சங்கம் லிமிடெட் ஜீவனோபாவத் திட்டமொன்றை வகுத்துத் தந்திருக்கிறது. இவர்கள் தனியே ஒரு கூட்டுறவு சங்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். டில்லிக்கு 12 மைலுக்கப்பாலுள்ள சத்தர்பூரில் 400 ஏக்ரா நிலத்தைச் சாகுபடி செய்கின்றனர். மத்திய விவசாய மந்திரி சபை இலாகா இவர்களுக்கு டிராக்டர், விதை, முதலியவற்றை உதவியிருக்கின்றனர். டிராக்டர் வேலை செய்யுமுன் நிலம் செப்பனிடப்படுகிறது.

(கீழ்)

சிலந்திக்கூட்டில் சிக்கிய பாம்பு! யார்க் ஷெண்டரில் 8-அங்குலப் பாம்பு ஒன்று தப்பித்தவறி எப்படியோ ஒரு சிலந்திக்கூட்டில் சிக்கி விட்டது. சிலந்தியிடமிருந்து தப்ப அதற்கு 3-நாளாயிற்றும். சென்ற மாதம் 27-ந் தேதிதான் இது சிலந்திக் கூட்டிலிருந்து விடுதலை பெற்றது.

ஸ்தாபிதம் 1924.

பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷை பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"தபோநிதி" தியாகராயநகர், மதராஸ் 17.



மெண்டெக்ஸ்
மாத்திரைகள்

ஸ்திரீகளுக்கு அடிக்கடி ஏற்படும் உபாதைகளுக்கு இன்றியமையாத ஔஷதம். தவறாமல் உடனே குணமளிப்பது. ஒரு புட்டி விலை ரூ. 7/8. வி. பி. செலவு தனி. விவரங்களுக்கு எழுதவும்.

என்மார்
மாத்திரைகள்

இளமையூட்டவல்ல இம்மாத்திரைகள் ரத்தசோகை, ஞாபக சக்திக் குறைவு, நரம்புத்தளர்ச்சி முதலியவற்றை நீக்கி, ஜீரண சக்தியை விருத்தி செய்யும். டாக்டர்களால் சிபார்சுசெய்யப்படுவது. ஒரு புட்டி விலை ரூ. 7/8. விவரங்களுக்கு எழுதவும்.

ஸ்டெர்ன் & கம்பெனி,
187, மவுண்ட்ரோட், மதராஸ்.

1 பவுனில் 4 ஜதை கவரிங் வளையல்கள் கிடைக்கும்

காஸிம் பிரதர்ஸ், 192, சைனு பஜார், சென்னை.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"
(Regd)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்.

Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி	திருச்சி கிளை:— 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

ஆஸ்த்மாவை குணப்படுத்துவது

ஸ்வாஸஹாரி தான்.

ஐந்து நிமிஷத்திலோ, ஒரே இரவிலோ ஆஸ்த்மாவை குணப்படுத்தி விடுமென்று விளம்பரம் செய்யும் மருந்துகளை உட்கொண்டால் நோய் அதிகரிக்குமேயொழிய குறையாது. "புரோஹித் ஸ்வாஸஹாரி" ஒன்றுதான் உட்கொண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தைக் கரைத்து அஜீர்ணத்தை குணப்படுத்தி நுரையீரல்களை பலப்படுத்தி ஆஸ்த்மாவினின்றும் பூரண சௌக்கியத்தை நிச்சயமாக அளிக்கிறது. ரூ 3-8, ரூ 6-, ரூ 10- பாக்கிங்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அல்லது "டாக்டர் புரோஹித் பார்மஸி" கோலாப்பூர் விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

ஆஸ்த்மா, ச்வாஸாசய நோய்களுக்கு டாக்டர்கள் விதிப்பது

புரோஹித ஸ்வாஸஹாரி

DR. PUROHIT PHARMACY, KOLHAPUR

ஜோதிஷ வித்வான்
V. S. சேஷாத்ரியாச்சாரியார்
45, பரோடா தெரு, தியாகராயநகர், சென்னை 17.

ஒரு ஜாதகம் விவரமாகப் பார்க்க.....................ரூ. 5.
எதிர்காலத்தைப்பற்றிய மூன்று கேள்விகளுக்கு...ரூ. 2.
மேல் கேள்வி ஒன்றுக்கு.............................அணா 12.
ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.
ஒரு ஜாதகம் கணிக்க...ரூ. 3.
பிறந்த ஊர், தேதி, மணி தேவை. வி. பி. சார்ஜ் ப்ரத்யேகம்.

பீம-வீர்



"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்திசெய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வலுவையுங் கொடுப்பதில் நிகரற்ற அவுஷதம்.
40-நாள் மருந்து ரூ. 3-12-0.
பாக்கிங்கு, தபால்சார்ஜ் கிடையாது

ஜமதக்னி ஔஷதாலயா,
26, வடக்குமாடவிதி, மயிலாப்பூர், சென்னை

☞ வாசனை எண்ணெய்கள் நீங்களே தயாரித்து பணத்தை மீதி செய்யலாம்.

கீழ்க்கண்ட ஏதாவது ஒரு ரக மோகினி எஸன்ஸை 16 அவுன்ஸ் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் அல்லது விளக்கெண்ணெய், கடலை எண்ணெயில் கலந்தால் உங்களுக்குச் சிறந்த வாசனை எண்ணெயாகும், விலைகளோ மிகவும் குறைவு.

சுத்தமான மோஹினி எஸன்ஸுகளின் பெயர்களும் விலைகளும்

சாம்பாக்	ரூ. 2-0	கதம்பம்	ரூ. 1-8	ஹீனா	ரூ. 1-8	மோத்தியா	ரூ. 1-0
காஷ்	,, 2-0	மல்லிகை	,, 1-8	லில்லி	,, 1-0	ஸ்விட்	,, 1-0
கேவ்டா	,, 2-0	ரோஸ்	,, 1-8	தாமரை	,, 1-0	மோதியா	,, 1-0
மஸக்	,, 2-0	போகுல்	,, 1-8	கோலோன்	,, 1-0	ஐடியல்	,, 1-0

அரை அவுன்ஸ் பாட்டில்களாகக்கிடைக்கும். பாக்கிங், தபால் சார்ஜ் வி.பி. செலவு வேறு. இலவசமாக காட்லாக் அனுப்பப்படும். கடிதங்களை ஆங்கிலத்தில் எழுதவும்,

S. PAUL & Co., (S. W.) 4, Hospital St., Dharamtala, **Calcutta 13.**

பரிசு! பரிசு !!

போலி பாக்குத் தூள்களை வாங்கி ஏமாருதீர்கள்.
பரிமள பாக்குத் தூள்களுக்கெல்லாம் அரசனான **ஆர். கிருஷ்ணு** பரிமள பாக்குத் தூளையே உபயோகியுங்கள்.
144—50 பொட்டலம் கொண்ட கேஸ் 1க்கு ரூ. 85. 50—0-0-3 பொட்டலம் 0-10-0. N. B. 25 காவி உரை அனுப்பினால் 50—0-0-3 பொட்டலம் இனும்,

S. M. கிருஷ்ணு அண்டு கோ.,
2-137, ஆதியப்ப நாய்க்கன் தெருவு,
மதராஸ் 1.

நவீன மோஸ்தர்களில் புராதன அழகு



அமைப்பின் அழகு, சிறந்த தரம், கைதேர்ந்த வேலைப்பாட்டுக்கு எமது ஐம்பது வருஷ அனுபவம் உத்திரவாதம். எப்பொழுதும் உதவிபுரிய தயாரராக இருக்கிறோம்.

உம்மிடி
ராமையா செட்டி குருஸாமி செட்டி & கோ.
நகை வியாபாரிகள்

D.J.K. 102 T.G.

மாதம் ரூ. 150 சம்பாதிக்க வேண்டுமானால் ரியல் அசோகா அண்டு கோ. வில் வியாபார தொடர்ச்சி வைத்துக் கொள்ளுங்கள்.

எல்லா வகை சென்டுகளும், ஏர் ஆயில்களும், வாஸ்லைன், தலைவலி பாம், நீலகிரி தைலம், சிரங்கு மருந்து, பாக்கு தூள், மூக்கு பொடி புகையிலை, பர்பியூமும், அரை சேர் பர்பியூம் பாக்கு தூள் டின்களும் தயாரிக்கப்படுகிறது. விற்பனையாளர் தேவை. ரூ. 25 M. O. அனுப்பி சாம்பிள் செட் பெறுக.

N. B. ஒரு கேஸ் பாக்குதூள் தயாரிப்பதற்கான ரியல் அசோகா பர்பியூம் அரை சேர் பர்பியூம், கொப்பரை சீவல் கால் சேருடன் ரூ. 10. முந்துங்கள்.

ரியல் அசோகா அண்டு கோ.,
40, கிடங்கு தெரு, மதராஸ் 1.

ஆனந்த குஸுமாகர லேகியம்

துர்ப்பழக்கத்தால் சரீரம் மெலிந்து அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து கண் பார்வை குன்றி கஷ்டப்படும் அன்பர்களே!

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத்தளர்ச்சி, பசியில்லாதிருத்தல், மலச்சிக்கல், ஞாபககுறைவு, பித்தம், காசம், க்ஷயம் போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக் கூடியது. பத்தியமில்லை. 20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் சிலவு அணா 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விபரமான காட்லாக் இனாம்.

மலையாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM

189 வக்கீல் புதுதெரு - P. B. No 27, மதுரை.

கிளை ஸ்தாபனங்கள்:— 207 நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம் 20 கோவிந்தப்பநாயக்கன் தெரு, சென்னை. G. T. 58 E தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர். 179 SEA ST., COLOMBO.

சக்தி ஆருடம்!

சென்னை சர்க்கார் மீன் இலாகா, கெஜட்பதவி உத்தியோகத்திலிருக்கும் Sri S. V. கணபதி (Hydrologist) 7-6-'48ல் எழுதுகிறார்:— "தங்கள் பலன்கள் ஆச்சரியமானவை. பலன்களில் மிகவும் திருப்தி."

1 முதல் 3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7-8-0. வி.பி.பி. தனி. ஜாதகம் or கடிதம் எழுதும் நேரம் தேவை. N. B. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I.)

குகன் சோப்புகள்



சலவைக்கு சிறந்தவை

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்

(தங்கம் சேர்ந்தது.)

அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும். திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம்.— 30 மாத்திரை சீசா 1-க்கு ரூ. 7.

மஹாபில்வாதி லேகியம்

பித்தம் அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்று கோளாறுகளை உடனே கண்டித்துவிடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரி கவசம்

வியாதி, மனோவிசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண மூலிகை, பிரதி ஸரஸ்வத்ரம் ஸ்ரீதன்வந்தரீ யந்திரம், இவைகளை மந்திர பூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது. கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி

எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி

(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)

சென்னை ஹைக்கோர்ட்டில் உரிமை பெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்

பஜார் ரோட், மைலாப்பூர், மதராஸ்

எல்லோரும் எங்கள் பி. எஸ். வஸ்துக்களை உபயோகியுங்கள்

மணத்திலும், சுவையிலும் ஆரோக்கியமானது

P.S.

பெருங்காயம் – பாதம் எண்ணெய்.– அம்லா ஹேர் ஆயில் – வாசனை தேங்காய் எண்ணை - கஸ்தூரி குங்குமப்பூ - கோரோஜனம் – ஊருகாய் (பஞ்சாபி) ரோஸ் பஞ்சாபிகுல்கந்து–பஞ்சாப்தேன் - முத்து பன்னீர்–ஓமவாடர் - முறப்பா, நெல்லிக்காய் – இஞ்சி, மாங்காய்.

தயாரிப்பவர்கள் :—

மதருஸ் புட்பிராடக்ட்ஸ்,

45, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,

ஜி. டி. மதருஸ்.

I.T.L. 10 பெயர் பெற்ற தயாரிப்புகள்

1. காட்லிவர் ஆயிலுடன் கூடிய மால்ட் எக்ஸ்ட்ராக்ட்: வயது வந்தவர்களுக்கும் குழந்தைகளுக்குமான போஷாக்களிக்கும் டானிக்.
2. க்ரைப் ஸிரப்: குழந்தைகளின் ஜீரண சக்தி கோளாறுகளை நிவர்த்தி செய்யும் சிறந்த ஔஷதம்.
3. ஐடிபால்: விஷமற்ற, கறைபடாத, நறுமணமுள்ள அரிக்காத சிறந்த கிருமி நாசினி.
4. ஜெகோரால்: லைம் & ஹைபோ பாஸ்பேட் சேர்ந்த காட்லிவர் ஆயில் எமெல்ஷன்.
5. ரேடிகுலின்: லிக்விட் எக்ஸ்ட்ராக்ட் ஆப் லிவர். ரத்தசோகைக்கு கைகண்ட ஔஷதம்.
6. ஸெடேடின்: எலிக்ஸிர் ஹைட் ராஸ்டிஸ் காம்பௌண்ட். ஸ்திரீகளுக்கான சிறந்த ஔஷதம்.
7. விடோபெரின்: போஷாக்களிக்கும் டானிக். அயம், A & D விடமின், மற்ற உலோகப் பொருள் சத்துக்கள், சேர்ந்தது.
8. க்லூகோனேட்-D: கால்ஷியம் குறைவான எல்லா வியாதிகளுக்கும் குணமளிக்கவல்ல ருசியான மருந்து.
9. விடோமால்ட்: விடமின் சத்துக் குறைவுக்கு ஏற்ற மருந்து. விடமின் A, B, C & D யு-ன் மால்ட் எக்ஸ்ட்ராக்டும் சேர்ந்தது.
10. ஹைபர்-D காட்லிவர் ஆயில்: விடமின் A & D சேர்ந்த சுத்தமான காட்லிவர் ஆயில்.

பெங்களூர், மல்லேஸ்வரம், மைசூர் இண்டஸ்ட்ரியல் & டெஸ்டிங் லாபரேடரி லிமிடெட்டாரால் தயாரிக்கப்பட்டவை.

விற்பனை ஏஜண்டுகள்.

பெஸ்ட் அண்ட் கம்பெனி லிமிடெட்,

தபால் பெட்டி 63, சென்னை.

DJK 75 TM



எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்கள் கண்டிரோல்விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

M. R. பார்த்தசாரதி ஐயங்கார்,
28, துளசிங்கப் பெருமாள்
கோவில் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

டெலிபோன்: 2246. தந்தி: கிளாவர் பீடி

லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின் குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனுர்காலத்திலிருந்ததைப் போன்றேசிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரோப்ரைட்டர்,
ஸ்பேட் கிளாவர் & ஆர்டின் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.

சுதா மோகன ரஞ்சிதம்

3-பாகங்கள் **விலை ரூ. 2-8-0**

தபால் செலவு பிரத்யேகம்.

மானேஜர்: "சுதேசமித்திரன்" புத்தகசாலை, மவுண்ட்ரோட், சென்னை.

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House, Mount Road, Madras. Editor: C. R. Srinivasan B. A.

Regd. No. 2514.

உடனடியான சேவை!

K. V. ஈஸ்வர ஐயர்,
அஸிஸ்டண்ட் அக்கவுண்ட்ஸ் ஆபீஸர்,
மத்திய மாகாணம் & பீரார்.
நாகபுரி.

நகைகள் சரியாக சமயத்திற்கு கொடுக்கப்பட்டதுமல்லாமல் நாகரீக முறையில் உன்னதமாக தயாரிக்கப்பட்டுள்ளன. தாங்கள் அனுப்பிவைத்த மூன்று நகைகளைக்கண்டு அது சம்பந்தப்பட்டவர்கள் மிகவும் திருப்தியடைந்துள்ளார்கள். தங்களது திறமைவாய்ந்த நிபுணர்களால் தயாரிக்கப்பட்டு திருப்திகரமாக நிறைவேறிய வியாபாரத்தைக்கண்டு நான் சந்தோஷப்படுகிறேன். இதற்குமேல் எதைத்தான் கடைக்காரர் அல்லது வாடிக்கைக்காரர் விரும்பமுடியும்?

(ஒப்) K. V. ஈஸ்வர ஐயர்.

கண்யமான வியாபாரம்!

ஸூரஜ்மல்ஸ்

நம்பிக்கையான வியாபாரிகள்
1895ளு முதல்

313, நேதாஜி ரோட்,
மதராஸ்.